




# சங்கீத மகான்களும் எம்மண்ணின் சங்கீதக் கலைஞர்களும்

பிரம்ம ஸ்ரீ இ. குமாரசாமி சர்மா. B.A

# சங்கீத மகான்களும்
# எம் மண்ணின்
# சங்கீதக் கலைஞர்களும்






யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை,

**பிரம்ம ஸ்ரீ இ.குமாரசாமி சர்மா. பி.ஏ**

ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர்.


2018.

## நூல் வெளியீட்டுத் தரவுகள்


**நூலின் பெயர்** :- சங்கீத மகான்களும்
எம் மண்ணின் சங்கீதக் கலைஞர்களும்

**ஆசிரியர்** :- பிரம்மஶ்ரீ இ.குமாரசாமி சர்மா பி.ஏ
(ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர்)

**விடயம்** :- கர்நாடக சங்கீத முன்னோடிகள்
இசை மேதைகள், வித்துவான்கள்
வாழ்ந்து வரும் கலைஞர்கள் பற்றிய விவரங்கள்.

**முகவரி** :- 15, பி.ஏ.தம்பி லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

**தொ.பே.இல.** :- 021 222 4973
075 042 9452

**வெளியீடு** :- பிரம்மஶ்ரீ கு.நந்தகோபன்,
பிரம்மஶ்ரீ கு.கோகுலன்,
பிரம்மஶ்ரீ கு.முரளிதரன்

**அச்சுப்பதிப்பு** :- எவகிறீன் பிறின்டேர்ஸ்.

## பொருளடக்கம்

01. கர்நாடக சங்கீத இசை முன்னோடிகள்.
02. தமிழ் நாட்டில் சங்கீதம்.
03. தென் இந்திய இசை மேதைப் பாடகர்கள்.
04. தமிழக வயலின் கலைஞர்கள்.
05. தமிழக மிருதங்க வாத்திய கலைஞர்கள்.
06. இந்திய சங்கீத மேதைகளின் மகத்தும்.
07. நமது நாட்டு இசைப் பாடகர்கள்.
08. இசை மன்றங்கள்.
09. நமது நாட்டு வயலின் மிருதங்க வாத்திய கலைஞர்கள்.
10. பரத நாட்டிய கலைஞர்கள்.
11. தமிழ் நாட்டில் நாதஸ்வர, தவில் கலைஞர்கள்.
12. எம் மண்ணின் நாதஸ்வர தவில் கலைஞர்கள்.
13. இசைக் கலைஞர்கள் சிலரின் சிறப்புக்கள்.
14. சங்கீதக் கலை எதிர்காலம்.
15. பிரபலம் பெற்ற சில சங்கீத பாடல்கள்.

# முகவுரை



**பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா,**
ஓய்வு நிலை உதவித்திட்டமிடற் பணிப்பாளர்,
15, பி.ஏ.தம்பி லேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

சங்கீதம் தெய்வீகமான ஓர் கலை. மனிதர்களாகப் பிறந்தவர்கள் அடையக் கூடிய பெரிய பாக்கியங்களில் ஒன்று சங்கீதஞானம். அத்தகைய சங்கீத ஞானம் பூர்வ புண்ணிய பலனினால் தான் ஏற்பட்ட வேண்டும். அதனை அடையும் மார்க்கத்தைத் தேடிக் கொள்ள பகவானை உபாசிக்க வேண்டும். சங்கீதக் கலை எவ்வளவு தெய்வீக சக்தி வாய்ந்தது என்பதற்குப் பற்பல சான்றுகள் உள்ளன.

சங்கீதக் கலை எனும் போது சங்கீத மும்மூர்த்திகள் தான் ஞாபகம் வருகின்றது. அவர்கள் சற்குரு தியாகராஜா சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆவார். அவர்கள் பல கீர்த்தனைகளை, பாடல்களை எமக்குத் தந்துள்ளனர். அவர்கள் தவிர மேலும்பல பெரிய மகான்கள் சங்கீத உலகில் பாடல்கள் ஆக்கித் தந்துள்ளனர். இத்தகைய சங்கீதப் பாடல்களை சங்கீதக் கலைஞர்கள் பாடும் பொழுது, அதனை வாசிக்கும் பொழுது அவர்கள் மட்டுமன்றி அதனைக் கேட்கின்ற எல்லோருக்கும் ஆத்மானந்தம் உண்டாகின்றது.

தமிழ் நாட்டில் இசைக்கலையினைப் பரப்பிய வித்துவான்கள் பலர் உள்ளனர். அத்தகைய மகா வித்துவான்களின் மகத்துவம் பெருமைமிக்கது. இவர்கள் அதனைத் தமது ஞானத்தின் மூலம் பாடி, மீட்டி, கலா ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளனர். அவர்கள் அன்று இசைத்த கானம் இன்றுவரை எல்லோருடைய மனதிலும் நிலைத்து நிற்கின்றது. அவர்கள் பல பல இளம் கலைஞர்களை உருவாக்கியுள்ளனர். அதனால் தான் கர்நாடக சங்கீதம் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றது. எமது நாட்டிலும் பல பல சங்கீத மேதைகள் வாழ்ந்துள்ளனர். அதனால் தான் எமது நாட்டிலும் சங்கீதஞானம் வளர்ந்து வருகின்றது. இவர்களை எல்லாம் நினைவு கூரும் பொழுது பல பெரும் பாடகர்கள், வித்துவான்கள் எமது மண்ணில் கலையை வளர்த்த பெருமை மிக்கவர்களாக உள்ளனர்.

இவ்வாறான பெரும் புகழ் படைத்த வித்துவான்களை நாம் நினைவு கூரும் முகமாகவும், தற்பொழுது வாழ்ந்து வரும் இளம் கலைஞர்களை நினைத்துப் பார்க்கும் முகமாகவும், தற்பொழுது வாழ்ந்து வரும் இளம் கலைஞர்களை நினைத்துப் பார்க்கும் முகமாகவும் அவர்கள் பற்றிய சிறு சிறு தகவல்களை நாம் அறிந்து கொள்ளும் முகமாகவும் இந்நூல் வரையப்பட்டுள்ளது.

எமது நாட்டில் வாழ்ந்த ஞானம் படைத்த இசைக்கலையில் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், கடம், வீணை, புல்லாங்குழல், நாதஸ் வரம், தவில்,நடனம் முதலான பல துறைகளிலும் சிறந்து விளங்கிய இசைக் கலை

ஞர்கள் பற்றி பலரும் அறிந்திருப்பர். அவர்கள் பற்றி நான் தெரிந்தவற்றை மட்டும் என்னால் கூற முடிந்துள்ளது. மேலும் தற்காலத்தில் இசைத்துறை சார்ந்தபல இளம் கலைஞர்கள் வளர்ந்து வருகின்றார்கள். அவர்கள் மிகவும் அற்புதமாகத் தமது இனிய குரலினால் பாடியும், வாத்தியக் கருவிகளினால் இனிமையாக வாசித்தும் மக்களைக் கவர்ந்து வருகின்றனர். நாதஸ்வர, தவில் வாத்தியங்களில் எமது நாட்டில் இளம் கலைஞர்கள் நல்ல முன் னேற்றம் கொண்ட கலைஞர்களாக வாழ்ந்து வருவது மிகவும் பாராட்டத் தக்கவை. இவ்வாறாக சங்கீதத் துறையில் வளர்ந்து வரும் கலைஞர்களை யும், முது பெரும் கலைஞர்களாக வாழ்ந்த பெரும் வித்துவான்களையும் யாவரும் என்றென்றும் நினைவில் நிறுத்தி அவர்களை வாழ்த்த இச்சிறு நூல் உதவும் எனக் கருதுகின்றேன்.

எமது நாட்டில் இசைத்துறை மேலும் வளர்ச்சி அடைய பலரது ஆதரவு வேண்டியுள்ளது. எமது கலைஞர்கள் முன்னேற்றம் பெற அவர்களுக்கு ஊக்கமும், சந்தர்ப்பங்களும், உதவிகளையும் எம் நாட்டில் வாழும் இசை ஆர்வலர்களும், ரசிகர்களும், மன்றங்களும், பணவசதி படைத்த கொடை யாளிகளும் பங்களிப்புச் செய்வதன் வாயிலாக எமது நாட்டு சங்கீதக் கலை எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சி அடையும்.

எமது நாட்டில் வாழ்ந்த இசைக் கலைஞர்களை சங்கீத ஆர்வலர்கள், இசை ரசிகர்கள் யாவரும் நன்கு அறிவர். அவர்களில் பலரையும் இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலரது பெயர்கள் தவறுப்பட்டிருக்கலாம். அவர்க ளைப் பற்றிய விபரங்களை நன்கு அறிந்தவர்கள் எமக்கு தெரியப்படுத்தி னால் மறு பதிப்பில் பிரசுரிக்கலாம். அல்லது இக்கலைஞர்களை நன்கு அறிந்தவர்கள் வெளியிடவும் உதவும் எமது நாட்டில் இசைத்துறை மேலும் வளர்ச்சியடைய பலரது ஆதரவு, உதவிகள், பாராட்டுக்கள் என்பன வேண் டப்படுகின்றன. எதிர்காலத்தில் நம் இளம் கலைஞர்கள் தத்தமது துறை களில் மேலும் ஞானம்பெற்று வித்துவத் தன்மையினை வெளிக் காட்டுவதற்கு முன்வரவேண்டும் என நம் கலை உலகம் எதிர்பார்க்கின்

றது. சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங்கீதக் கலைஞர்களும் எனும் பெயரில் வெளிவரும் இந்நூல் கர்நாடக இசை முன்னோடிகள், இசை மேதைகள், வித்துவான்கள் முதலான பலரையும் நினைவுறுத்துகின்றது. சங்கீதக் கலைஞர்கள் சிலரது படங்கள் வெளிவருகின்றன. நூலின் இறு தியில் சங்கீதக் கலைஞர்களாலும், இசை ஆர்வலர்களாலும் விரும்பி கேட் கும் இனிய பாடல்கள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலுக்கு ஆசியுரைகள் வழங்கி பெருமைப்படுத்தியுள்ள வேதாகம ஞானபாநுதர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ. தா. மஹாதேவக் குருக்கள் அவர்களை பாதங்கள் தொட்டு பணிந்து நமஸ்காரம் செய்து எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன். அவர் நான் எழுதி வெளியிட்ட பல நூல்களுக்கு ஆசிகள் வழங்கி எம்மை கௌரவப்படுத்தியுள்ளார். அவர் எமது அந்தண சமூகத்தைச் சார்ந்த இளந்தலைமுறையினர். வயது முதிர்ந்தோர் என பலருக்கும் வேத ஆகம பயிற்சியினை குருகுலம் மூலம் சிவாச்சாரிய பாரம்பரியத்தினையும், வைதீக மரபையும் வளம் பெறச் செய்து வருகின்ற அர்ப்பணிப்புப் பலராலும் போற்றப்படுகின்றது.

இந்நூல் பற்றி பல கருத்துக்கள், ஆலோசனைகள் என்பன கூறி நூலினை மதிப்பிட்டு அணிந்துரை வழங்கி பாராட்டியுள்ள யாழ்ப்பாண பல் கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர், இலக்கிய கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப் பதோடு அவர் எனது பல நூல்களுக்கும் அணிந்துரைகள், வாழ்த் துரைகள் என கூறி எம்மை மகிழ்வித்துள்ளார்.

மேலும் இந்நூலினை பார்வை செய்து, ஆலோசனைகள் பல வழங் கிய கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா அவர்களுக்கும் எமது நன் றிகள். அவர் நான் முன்னர் வெளியிட்ட 'தெய்வீக வாழ்வு' எனும் நூலினை கணினி வடிவமைத்து அச்சுப்பதிவு செய்துதந்தவர் மிகவும் நன்றிகள்.

"சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங்கீதக் கலைஞர்களும்" எனும் நூலினை வெளியிட மனமுவந்து உதவிகள் புரிந்த இந்தியத்

துணைத் தூதுவர் திரு. ஆ. நடராஜன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும் இந்நூலினை மிகவும் சிறப்புற வடிவமைத்து அச்சிட்டு உதவிய எவகிறீன் பிறின்டேர்ஸ் நிறுவனத்துக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இந்நூல் வெளியிட சகல உதவிகள் புரிந்த அன்பர்கள் அனைவருக்கும் மன முவந்த நன்றிகள்.

எமது குல தெய்வமான ஸ்ரீ அம்பலவாண விநாயகப் பெருமானையம், பகவதி மாரி அம்மனையம் ஞான வைரவப் பெருமானையும் வணங்கி என்றும் எமக்குத் துணை நிற்க மனமாரப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம்

**பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா,**
ஓய்வு நிலை உதவித்திட்டமிடற் பணிப்பாளர்,
15, பி.ஏ.தம்பி லேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

# ஆசியுரை



இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர்
**வேதாகம ஞானபானு**
**சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்**
வழங்கிய ஆசியுரை

வண்ணார் பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விநாயக ராலயத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா கலை,சமய, கலாசாரப் பெருமைகளை நன்கு அறிந்தவர். குமாரசாமி சர்மா குடும்பத்தினர் என் மீது மிகுந்த பற்றும் பாசமும் பெருமதிப்பம் உடையவர்கள். அவர் அரசாங்க சேவையில் பல காலம் கடமை புரிந்த பின்னர் சமயப் பணிக ளைச் செய்து வருகின்றார். பல பத்திரிகை களில்பல பெரியார்களது வாழ்க்கை வர

லாறுகளையும்,கலைநிகழ்வுகளையும் பதிவு செய்து வைத்திருக்கின்றார். பேராத னைக் 'குறிஞ்சிக் குமரன்', 'பகவதி மாரியம்மன் கோவில்', 'நெஞ்சில் நிறைந் தவை' 'தெய்வீக' வாழ்வு என நூல்கள் வெளியீட்டுள்ளார். பல பெரி யார் களை நாம் அறிந்து கொள்ளும் வண்ணம் அவர்களது பெருமைகளை, சேவைகளை அவர்கள் பற்றிய விபரங்களை பட்டியலிட்டு நூல்கள் வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியவை.

கர்நாடக சங்கீதம் முதலான இசை நிகழ்ச்சிகளைக் கேட்பதிலும், அத னைப் பார்ப்பதிலும் மிகுந்த ஆர்வமுள்ளவர். அவர் இப்போது " சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங்கீதத் கலைஞர்களும்" என்கின்ற நூலை ஆக்கி வெளியிடுவது நாம் யாவரும் சங்கீத கலைஞர்கள் பற்றி அறிந்திட பேருதவி செய்யும்.

அவர் இந்நூலில் இந்திய சங்கீத இசைக் கலைஞர்கள் பலரையும் பட்டியலிட்டு காட்டி இருப்பதுடன், நம் நாட்டு இசைக்கலைஞர்கள் யாவரை யும் நினைவில் நிறுத்தி அவர்களது பெருமைகளை வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியன. அவரது ஆக்கங்கள் சிறப்புற வெளிவந்து மக்கள் பயன் பெற நல் ஆசிகள் கூறுகின்றேன்.

ஸ்ரீ காட்டுத்துறை அம்பலவாண விநாயகர் அவரது ஆக்கங்களுக்கு துணை நிற்பாராக. வாழ்த்துக்கள்!

**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்,**
**காயத்ரீ பீடம் அதிபர், இணுவில்.**



# அணிந்துரை



பேராசிரியர் இலக்கிய கலாநிதி
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்,**
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தொன்மை மிகுந்த இந்துப் பண்பாட்டில் சமயம். தத்துவம் ஆகியவற் றோடு இணைந்ததாக இசை நடனம் ஆகிய நுண் கலைகள் சிறப்படைந்து வந்துள்ளன. இறைவனே இசைக்கும் நடனக் கலைக்கும் உரிய நாயகன். அவனைப் பக்திபூர்வமாக வழிபடும் போது இவை சிறந்த உபசாரங்களாக வழங்கப்படுகின்றன. "இசையால் வசமாகாதா இதயம் எது"? என்ற கருத்துச் செறிவுள்ள வாசகத்திற்கேற்ப இசையானது எமது இறையனுபவத்தின் வெளிப்பாடாக இருந்து வருவதோடு இறைவனை மகிழ்

விக்கும் தெய்வீகக் கலையாகவும் மேன்மையடைந்து வருகின்றது. சமய அனுபவமும் கலைய னுபவமும் ஒரே அனுபவத்தையே குறித்து நிற்பதாக கலாமேதை கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இறைவன் நூல் எனத் திரு மூலர் போற்றும் வேதங்களில் சாமவேதம் இசைக்கலைக்கு முன்னோடியாகும். வேதப்பாடல்கள் உதாத்த, அனுதாத்த, ஸ்வரித என்ற ஸ்வரங்களோடு பாராயணம் செய்யப்படும் தோத்திரங்களாகும்.

" தூய்மையான இறைவனைத் தூய பாடல்களால் போற்றுவோமாக" என இருக்கு வேதம் சமயத்திற்கும் இசைக்கும் பெருமை சேர்க்கின்றது. இருக்கு வேதம் பிறிதொரு பாடலிலே.

"இசைப்பிரியனே! எனது தோத்திரப் பாடல் உன்னைச் சுற்றிலும் சிறந்து விளங்குவதாக" என்ற சிந்தனை மூலம் இறைவன் இசைப்பிரியன் என்பது தெளிவாகின்றது. நடனக் கலை வளம்பெற பரதரின் நாட்டிய சாஸ்திரம் முன் னோடியாக அமைந்தது. நடனத்துக்குரிய தெய்வமாக நடராஜர் போற்றப்படு கின்றார்.

இறைவழிபாட்டில் இசையின் முக்கியத்துவம் கருதி இசை விற் பன்னர்க ளும் மும்மூர்த்திகளும் தமது அர்ப்பணிப்பு மிக்க அரிய பணிகளால் இசைத் துறையை வளம்படுத்தியதோடு அத் தெய்வீகக் கலையின் உதாரண புருஷர் களாகவும் விளங்கினர். இவ்வகையில் கர்நாடக இசையின் வளர்ச் சிக்குப் பெருமளவிலான மேதைகள் அரிய பங்ளிப்பு நல்கியுள்ளனர். காலந்தோறும் எண்ணற்ற கலைஞர்கள் இக்கலையின் வளர்ச்சிக்கு உறு துணையாக விளங்கி வருகின்றனர்.

தமிழ் நாட்டில் பல்லவர் காலத்திலேற்பட்ட பக்தி இயக்கம் திருக் கோயில் களை நிலைக்களனாகக் கொண்டு பக்திப் பாடல்களால் வளம் பெற்றது. நாயன மார்களது திருப்பதிகங்கள் வழியாகப் பண்ணிசை வளம்பெற்றது. ஆழ்வா ளர்களது திருப்பாசுரங்களும் இசைக்கலை வளம்பெற மூலா தாரமாக அமைந்தன. இவ்வகையில் தமிழிசை மேன்மையடைந்தது.

இம்மரபின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாகத் தமிழகத்திலும் எமது நாட்டி லும் இசை, நடனம், வாத்திய இசை, போன்றவற்றின் வளர்ச்சிக்கு இசை மேதைகளும் வித்துவான்களும் இசை வல்லுநர்களும் அளப்பரிய பணியாற்றி

அக்கலைகளை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச் செய்த தோடு இசையு ணர்வு மேன்மைபெற வழி அமைத்தனர். அத்தகையோர் எமது மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் உரியவராவர். அவர்களது இசைப் பணி காலத்தை வென்று உயர்ந்து நிற்கின்றது. இத்தகையோரைப் பாராட் டும் வகையில் ஓய்வுநிலை உதவித் திட்டமிடற் பணிப்பாளராகிய பிரம்மஸ்ரீ இ.குமாரசாமி சர்மா " சங்கீத மகான்களும் எமது மண்ணின் சங்கீதக் கலை ஞர்களும்" என்ற தலைப்பில் நூலொன்றினைத் தொகுத்து வெளியிடும் அரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கதுடன் பாராட்டத்தக்கதுமாகும். இவரது இப்படைப்பு இசையு லகில் கலாரசிகர்களால் உவந்து வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் பிரம்மஸ்ரீசர்மா அவர்களுக்கு எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

பிரம்ம ஸ்ரீ சர்மா தமது ஓய்வு காலத்தில் பயனுள்ள வகையில் பல நூல் களை எழுதி வெளியிட்டுத் தமது அனுபவத்தை வளர்த்துக்கொண்டார். இவர் உதவி திட்டமிடற் பணிப்பாளராக மும்பது வருடங்களாகப் பணியாற் றிய காலத்திலிருந்து இவர் இசைத் துறையில் பெரும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டுவருபவர். கலாரசிகன் என்ற நிலையில் இசை நிகழ்ச்சிகளுக்குச் சென்று அவைபற்றிய விமர்சனங்களை மக்கள் நயந்து ரசிக்கும் வகையில் பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதிவருவார். இசைக் கச்சேரிகளுக்குச் சென்று தமது கலாரசனையை விருத்திசெய்து கொண்டு வருபவர். பிரம்ம ஸ்ரீ சர்மா தமது கலா அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் நோக்கில் மற்றுமொரு பரிமாணமாக இந் நூல் வெளிவருகின்றது.

பதினைந்து இயல்களைக்கொண்ட இந்நூலில் ஆசிரியர், சங்கீதக் கலையின் முன்னோடிகள் இசைமேதைகள் கலைஞர்கள் அவர்களது மகத் துவம், இசைமன்றங்கள், எமது நாட்டு வயலின் மிருதங்கவாத்திய கலை ஞர்கள், பரதநாட்டியக் கலைஞர்கள், தமிழ்நாட்டிலும் எமது நாட்டிலும் புகழ் பூத்த தவில் நாதஸ்வரக் கலைஞர்கள், இசைக் கலைஞர் சிலரது தனித்துவ மான சிறப்பம்சங்கள் சங்கீதக் கலையின் எதிர்காலம் ஆகிய விடயங்கள் பற்றி எடுத்துக் கூறியள்ளமை குறிப்பிடற்பாலது. இசைத் துறை சார்ந்த மேதைகள் பற்றிய பல நூல்கள் அறிஞர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. இந்நூலில் ஆசிரியர் இசைத் துறை வல்லுநர் பற்றி ஒரே பார்வையில் கொண்டுவர முயற்சித்திருப்பது போல் தென்படுகிறது. இக் கலைகளது சமகாலச் செல்

நெறியை அறிய இந்நூல் உதவுகின்றது. இவ்வாக்கம் இத்துறை சார்ந்த ஒரு முன்னோடி முயற்சி எனக் கூறலாம். எதிர்காலத்தில் இசைத் துறை வரலாற்றுச் செய்திகள் இக்கலை வளர்ச்சிக்கு உதவிவரும் கலைஞர் விப ரங்கள் பற்றிய முழுமையான நூல் வெளிவரக் கூடிய வகையில் உதவக் கூடிய நூலாக இது அமைவதாகுக என வாழ்த்துகின்றேன். இசைக் கலை நடனக் கலை சார்ந்த ஒரு கையேடாகவும் ஆவணமாகவும் அமையும் இந் நூல் இசை, நடனம், ஆகிய கலைகளில் பயிற்சி பெறும் மாணவர்க ளுக்கும் ஆர்வலர்களுக்கும் பயன்தரவல்லது. அனைவரது ஆதரவும் இந் நூலாசி ரியருக்கு கிடைப்பதாகுக. தொடர்சியாக வளர்ச்சி பெற்றுவரும் இக்கலை மரபுபற்றி ஆவணப்படுத்தி வருவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

பிரம்ம ஸ்ரீ குமாரசாமி சர்மா தமது இசைத் துறை மற்றும் ஏனைய கலைகள் தொடர்பான தமது கலாரசனையை மென்மேலும் விருத்தி செய்து இத் துறை சார்ந்த நூல்களை எதிர்காலத்தில் தொடர்ந்தும் வெளியிட்டு எமது இசை கலையினதும் ஏனைய கலைகளினதும் அவ்வவ் துறை சார்ந்த கலைஞர் களினதும் பெருமைகளை உலகறியச் செய்ய அவருக்குச் சகல நலன்களும் நீண்ட ஆயுளும் நற்சுகமும் ஆக்கமும் ஊக்கமும் நல்கும் வண்ணம் ஸ்ரீ அம்பலவாண விநாயகரினதும் ஸ்ரீ பகவதி அம்பிகையினதும் ஸ்ரீ ஞானவைர வரினதும் கிருபாகடாட்சம் சித்திப்பதாகுக என வாழ்த்துவதில் மகிழ்ச்சிய டைகின்றோம்.

**மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்**
**சொல்வதிலோர் மகிமை யில்லை**
**திறமான புலமையெனில் வெளிக்காட்டார்**
**அதை வணக்கம் செய்தல் வேண்டும்.**
**- மகாகவி பாரதியார்.**

எமது மண்ணின் கலை மரபையும் கலைத்திறனையும் உலகறியச் செய்வோமாக!

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்,**
வாழ்நாள் பேராசிரியர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஆசிச் செய்தி



கலாபூஷணம் ,
**பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா**
B.A (Hon),
கோப்பாய் சிவம்

பிரம்ம ஸ்ரீ இ. குமாரசாமி சர்மா வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத் தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பிரம்ம ஸ்ரீ தி. இரத்தினசபாபதிக் குருக்கள். ஸ்ரீமதி நீலாம்பிகை அம்மா தம்பதிகளின் புதல்வன். வண்ணார் பண்ணை வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள், ஸ்ரீமதி சீதா லட்சுமி அம்மா தம்பதிகளின் புதல்வி ஸ்ரீமதி பார்வதி (ராணி) இல்லறத் துணைவியாகக் கொண்டு மூன்று மக்களைப் பெற்று அவர்களுக்கு கல்வியறிவூட்டி திருமணம் செய்துகொடுத்த மன நிறைவுடன் வாழ்கின்றார்.

இவர்களது மூத்த புதல்வன் பிரம்ம ஸ்ரீ கு. நந்தகோபன், ஸ்ரீமதி தாரணி என்பவரைத் திருமணம் முடித்து லண்டனில் பொறியியலாள ராகவும், வைத்திய கலாநிதியாகவும் வாழ்கின்றனர். பிரம்மஸ்ரீ கு. கோகு லபாலன் ஸ்ரீமதி ஸ்ரீவித்தியா என்பவரை திருமணம் செய்து கனடாவில் கணனி பொறியிலாளராக உள்ளார். பிரம்மஸ்ரீ கு. முரளிதரன் ஸ்ரீமதி சிந்துஜா என்பவரைத் திருமணம் செய்து அவுஸ்திரேலியாவில் கட்டிட நிர்மாண பொறியியலாளராக வாழ்ந்து வருகின்றனர்.

பிரம்ம ஸ்ரீ இ.குமாரசாமி சர்மா 30 வருட காலம் திட்டமிடல் உதவிப் பணிப்பாளராகப் பதவி வகித்து ஓய்வு பெற்று லண்டன், கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இந்தியா முதலான நாடுகள் சென்று அங்கு தமது புதல்வ ர்களுடன் சிலகாலம் தங்கி நின்று வாழ்ந்து பின்னர் தமது நாடு திரும்பி வந்து தமது குல தெய்வங்களான விநாயகர், ஞான வைரவர் கோவிலில் பூஜை செய்து சமயப் பணி ஆற்றி வருகின்றார்.

இவர் பேராதனைப் குறிஞ்சிக் குமரன் எனும் பெயரில் நூல், பகவதி மாரியம்மன், திருக்கோவில் எனும் பெயரில் நூல், ஸ்ரீஞான வைரவர் திருக் கோவில் வரலாறு எனும் பெயரில் நூல், நெஞ்சில் நிறைந்தவை எனும் பெயரில் நூல், தெய்வீக வாழ்வு எனும் பெயரில் சிறப்பு மலர் என்பன வெளியிட்டுள்ளார். இப்பொழுது சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங் கீதக் கலைஞர்களும் எனும் பெயரில் நூல் வெளியிடுகின்றார்.

இவருக்கு இசையில் அதிக நாட்டம் இருந்த காரணமாக இந்தியா சென்று அங்கு நடைபெற்ற இசை நிகழ்வுகளைப் பார்த்தும், எமது நாட்டில் இடம்பெறும் இசைக் கச்சேரிகளைப் பார்த்தும் அவை பற்றிய செய்திகளைக் கட்டுரைகளாகப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளார். தமிழ் நாட்டில் இசைக் கலையினை பரப்பிய பெரும் மகா வித்துவான்கள், இசைக் கலைஞர்கள் பற்றியும் எமது நாட்டில் வாழ்ந்து வரும் சங்கீதக் கலைஞர்கள், வித்துவான் கள் பற்றியும் அவர்களது கலை அம்சங்கள் பற்றியும் யாவரும் அறியும் வண்ணம் இந்நூலினை வெளியிடுகின்றார். இந்நூல் பலருக்கும் பயன் தரும் என நினைக்கின்றோம்.

கலாபூஷணம்,<br>
**பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா** B.A (Hon),<br>
கோப்பாய் சிவம்.



Consul-General

வாழ்த்துச் செய்தி

சங்கீதம் எல்லா மனிதர்களையும் ஆனந்தப்படுத்தும் ஓர் அற்புதமான தெய்வீக கலை. இதனைப் போற்றி வளர்க்கும் அரும் பணியினை இந்தியாவின் தமிழ் நாட்டிலும் சரி இலங்கையிலும் சரி பல்வேறு இசை வல்லுனர்கள், வித்துவான்கள் மேற்கொண்டு வருகின்றனர். இன்றைய இளைய தலைமுறையினரிடையே முறையான இசை ஞானத்தை வழங்கி இளம் கலைஞர்களை உருவாக்குவதில் இவர்களின் பணி அளப்பரியது என்றால் அது மிகையாகாது.

அந்த வகையில் இத்தகு மரியாதைக்குரிய கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை தொகுத்து அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் மதிப்பிற்குரிய பிரம்ம ஸ்ரீ இ குமாரசாமி சர்மா அவர்கள் 'சங்கீத மகான்களும் எமது மண்ணின் சங்கீதக் கலைஞர்களும்' என்ற நூலினை வெளியிடுவதனையிட்டு அளவிலா மகிழ்ச்சியடைவதுடன் அவரின் இந்த இசைதுறையின் புதியதோர் முயற்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந் நூலானது ஈழத்து மற்றும் இந்திய இசை கலைஞர்களின் விபரங்கள் யாவற்றையும் வாசிப்பவர்களுக்கு வழங்குவதால் இசைத்துறைக்கு பங்காற்றிய வித்துவான்களின் சரிதத்தை இன்றைய இளம் தலைமுறையினரும் இலகுவாக அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. இதற்கு வழிசமைத்துத் தந்த பிரம்ம ஸ்ரீ இ குமாரசாமி சர்மா அவர்களிற்கு மீண்டும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் இனிவரும் காலங்களில் மென்மேலும் இவர் இதுபோன்று பல்வேறு சிறப்பான நூல்களை ஆக்க வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

**நன்றி**

ஆ. நடராஜன்
இந்திய துணைத் தூதுவர்
யாழ்ப்பாணம்


-01-



# சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங்கீதக் கலைஞர்களும்

## கர்நாடக இசை முன்னோடிகள்

சங்கீதக் கலை எனும்போது குறிப்பாக சங்கீத மும்மூர்த்திகள் நம் நினைவில் வருகின்றனர். அம் மூர்த்திகள் சங்கீத சாகித்தியங்களை (பாடல்களை) எமக்குத் தந்துள்ளனர். சாகித்தியங்கள் மூலம் நமது சங்கீதத் திற்குத் தெளிவான ரூபம் (வடிவம்) தந்து வரைமுறை செய்த சிரோ மணிகளாக ஒளிர்பவர்கள். மும்மூர்த்திகளான சத்குரு தியாகராஜ சுவாமிகள், முத்துச்சாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆவார்கள். இவர்கள் ஒரே இடத்தில் தோன்றி ஒரே காலத்தில் வாழ்ந்து உலகம் அறியா அற்புதம் விளைவித்த சங்கீத மும்மூர்த்திகளாவர். அவர்களோடு சேர்ந்து அவர்களது காலத்தில் வாழ்ந்த ஸ்ரீ சுவாதித்திருநாள் மகாராஜா அவர்கள். ஸ்ரீ கோலகிருஷ்ண பாரதியார், ஸ்ரீ புரந்தர தாசர், ஸ்ரீ அருணாசலக் கவி ராஜர், ஸ்ரீ முத்துத் தாண்டவர், ஸ்ரீ சதா சிவ பிரமேந்திரர், ஸ்ரீ மகா வைத்திய நாத ஐயர், ஸ்ரீ பட்டினம் சுப்பிரமணிய ஐயர், ஸ்ரீ முத்தையா பாகவதர், ஸ்ரீ




மைசூர் வாசுதேவச் சாரியார், பிரம்ம ஸ்ரீ பாபநாசம் சிவன், மைசூர் மகராஜா, ஸ்ரீ சுப்பிராம தீட்சிதர் ஆகிய பெரிய மகான்கள் சங்கீத உலகில் சிரோ மணிகளாக ஒளிர்கின்றனர்.

மேற்கூறிய மகாத்மாக்களின் பாடல்களையும் இவற்றோடு நம் இசையில் வழங்கிவரும் தேவார, திருவாசக, திவ்விய பிரபந்தங்களையும், திருப் புகழையும், பட்டினத்தார், தாயுமான சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள், ஜயதேவ அஷ்ட்டபதிகள், மகாகவி பாரதியார் ஆகியோர் பாடியனவற்றைப் பார்த்தால் பாடல்கள் ராக ஸ்வரூபத்தை விளக்குவது மட்டுமன்றி, ஈஸ்வர ரூபத்தையும் விளக்கவே ஏற்பட்டவை என்பது உண்மை. அவற்றை நாம் பக்திப் பெருக்குடனேயே இசைக்க வேண்டும். இயல்பான ஈஸ்வர பக்தியுடன் இசையிலும் பக்தி வைத்து ராக ஆலாபனைக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை பாடி நம் இசைக்கலையினை வளர்த்து வருகின்றனர் எமது கலைஞர்கள்.

வீணை வாத்தியம் ராகங்கள் வாசிக்கும் பொழுது எந்த ஸ்வரம் எப்படி வரவேண்டும் என்பதனைத் துல்லியமாகக் காட்டுகின்றது. கம்பீரமாக ஓங்கி ஒலிக்கும் நாதஸ்வரம், வீணை என்பன கர்நாடக சங்கீதத்தின் இரு பெரும் செல்வங்களாகும். சங்கீதம் பாடுபவர்கள் பக்தியில் ஊறினால் பக்தி மேலும் அதிகரிக்கும். பாடுபவர்கள் மனம் பரமனிடம் ஒன்றினால் கேட்போர் மன

மும் தானே இறைவ னிடம் ஒன்றி விடும். இது சங்கீதக் கலைஞர்க ளின் மகத்தான பாக்கி யம், சங்கீ தம் ஒன்றில் தான் அதனைப் பாடு பவர்கள் மட்டுமன்றி கேட்கின்ற எல்லோருக்கும் ஆத்மானந்தம் உண்டாகிறது.

உலகின் தொன்மையான இசை வடிவங்களில் ஒன்றாகக் கருதப்படும் கர்நாடக இசையை வளர்த்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்ததிலும். தற்போது பேணிக்காத்து வருவதிலும் ஏராள மான இசைக்கலைஞர்களுக்கு பங்கு உண்டு. சிலருடைய பெயர் கள் வரலாற்றில் நின்று நிலைத் துள்ளன. வேறு சிலருடைய பெயர்கள் போதிய பிரபல மில்லாது போயிருக்கலாம். இசை ரசிகர்க ளுடைய மனங்களில் இருக்கும் கலைஞர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கக் கூடும். அவர் களில் சில ருடைய பெயர்கள் பட்டியலிடப்படு கின்றன.

கர்நாடக இசையின் முன்னோடி கள் மேலே காட்டப்பெற்ற ஜெயதே வர் முத்துத்தாண்டவர், அன்ன மாச்சாரி யார், புரந்தரதாசர், சோம நாதர் கனகதாசர், நாராயண தீர்த்தர் ஆவர்.


ஸ்ரீ புரந்திர தாசர்


பாபநாச சிவம்


மைசூர் மகாராஜா


மைசூர் வாசுதேவசாரியார்



**கர்நாடக இசையின் மும்மூர்த்திகள்**

| | | | |
|---|---|---|---|
| * | தியாகராஜ சுவாமிகள் | - | (1767 - 1847) |
| * | முத்துச்சாமி தீட்சிதர் | - | (1776 - 1835) |
| * | சியாமா சாஸ்திரிகள் | - | (1762 - 1827) |

**கர்நாடக இசையின் ஏனைய இசை மேதைகள்**

| | | | |
|---|---|---|---|
| * | பத்ராசல ராமதாசர் | - | (1605 - 1682) |
| * | ஊத்துக்காடு வெங்கட சுப்பையர் | - | (1700 - 1765) |
| * | கோபால கிருஷ்ண பாரதியார் | - | (1811 - 1896) |
| * | சேத்ரக்ஞர் | - | (1600 - 1680) |
| * | வீணை குப்பையர் | - | (1768 - 1860) |
| * | மைசூர் சதாசிவராவ் | - | (1800 - 1870) |
| * | சுப்பராய சாஸ்திரிகள் | - | (1803 - 1872) |
| * | சுவாதித் திருநாள் | - | (1813 - 1846) |

* தாயுமானவர்
* வெங்கட்ரமண பாகவதர்
* சுப்பராம ஐயர்
* கவிகுஞ்சர பாரதியார்
* அண்ணாமலை ரெட்டியார்
* இராமலிங்க அடிகள்
* விபுலானந்த அடிகள்
* ஆபிரகாம் பண்டிதர்
* இலட்சுமண பிள்ளை
* பொன்னையாபிள்ளை
* மாயூரம் வேதநாயகம் பிள்ளை

ஆவார்கள்.



- 02 -



# தமிழ் நாட்டில் சங்கீதம்

கர்நாடக சங்கீதம் இந்தியாவில் தமிழ் நாட்டில் மிக மிக உன்னதமான நிலையில் சிறப் பாக வளர்ந்து வருகிறது. அங்கு சங்கீதக் கலையை வளர்ப் பதற்குப் பற்பல அக்கடமிகள். சபாக்கள், நிறுவனங்கள், பல்கலைக்கழ கங் கள், தமிழ்நாடு அரசு என்பன பலதரப்பட்ட சேவைகள் புரி கின்றன. இந்தியா வில் சங்கீத, நடன, நாடக கலைகளை வளர்ப்பதற்கு மிகவும் பிரமாண்ட மான அளவில் கலைக்கேந்திர நிலையங்கள் உதவுகின்றன. அங்கு இளம் வித்துவான்கள் பெரும் மகாவித்துவான்களிடம் குருகுலவாசம் செய்து விசேட இசைப்பயிற்சிகள் என்பன பயின்று சிறப்பாக விளங்குகின்றனர். இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் வருடந் தோறும் இசை விழாக்கள், தியாகராஜ உற்சவ விழாக்கள், மார்கழி மகா உற்சவம், நிகழ்வு கள், நாடக விழாக்கள் என்பனவற்றை பற்பல வித்வச்சபைகள், அக்கடமிகள் என்பன நடாத்தி வருகின்றன.




ஆண்டுதோறும் சென்னை மாநகரில் மார்கழி மாதம் பெரும் விழாக்கோலம்




கொண்டு எங்கும் மக்கள் இசை ரசிகர்கள் இசை வெள்ளத்தில் மூழ்கி இருப்பதனைக் காண்கின்றோம். எங்கு பார்த்தாலும் சபாக்கள், அக்கடமிகள் வெகு அலங்காரமுடன் காட்சி அளித்து அழகாக உற்சாகமுடன் இசைக் கலைஞர்களுக்கும் இசை ரசிகப் பெருமக்களும் சந்தோசமாக கலந்து மகிழும் காட்சி பிரமாதமானது. இவை இசைப் பிரியர்களுக்கு மிகவும் கண்கொளாக் காட்சிகளாகவும், செவிக்கு பெரு விருந்தாகவும் அமை கின்றன. திருவையாற்றில் நிகழும் தியாகராஜ உற்சவ நிகழ்வில் ஆண்டு தோறும் பல நூறு கலைஞர்கள் கலந்து கொண்டு இசை நிகழ்ச்சிகள் செய்வது மிகவும் பிரமாதமானது.

சென்னையில் உள்ள சபாக்களில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவையாகக் காண்பவை சென்னை மியூசிக் அகடமி, நாரதகான சபா, தமிழ் இசைச் சங்கம், பாரதிய வித்யாபவன், கிருஷ்ணகான சபா, ஸ்ரீ பார்த்தசாரதி சபா என்பன சிறப்பானவை. இங்கு இசைக்கலைஞர்கள் ரசிகர்களை மிகவும் கவரும் வண்ணம் தமது வித்துவத் திறமைகளை வெளிப்படுத்துவார்கள். ரசிகர்களும் அதனை மெய்மறந்து மிகவும் ஆவலுடன் ரசித்து பாராட்டி கைதட்டி தமது பாராட்டுதல்களைத் தெரிவிப்பர். சென்னையில் இடம்பெறும் இத்தகைய இசை விழாக்களில் ஆண்டுதோறும் ஐரோப்பிய நாடுகள் இலங்கை முதலான நாடுகளில் இருந்து பல தமிழ் மக்கள் தவறாது கண்டு மகிழ்வதனைக் காண்கின்றோம்.



# தென் இந்திய கர்நாடக சங்கீத இசை மேதைகள், கலைஞர்கள், பாடகர்கள்

தென் இந்திய மண்ணில் இசைக்கலையினை பரப்பிய அண்மைக் காலத்தில் வாழ்ந்தத இசை மேதைகள், பெரும் வித்துவான்கள் பலர் உள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 01) | திரு.அரியகுடி இராமானுஜ ஐயங்கார் | - | மிகவும் புகழ் பெற்றவர். |
| 02) | திரு. செம்பை வைத்தியநாத பாகவதர் | - | சிறந்த மேதை |
| 03) | திரு.செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் | - | சிறந்த மேதை |
| 04) | திரு.சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை | - | புகழ் பெற்ற வித்வான் |
| 05) | திரு.மதுரை மணி ஐயர் | - | புகழ் பெற்ற சங்கீத வித்வான் |
| 06) | திரு.முசிரி சுப்பிரமணிய ஐயர் | - | புகழ்பெற்ற சங்கீத வித்வான் |
| 07) | ஆலத்தூர் சகோதரர்கள் | - | சிறந்த பாடகர் |
| 08) | திரு.மைசூர் வாசுதேவச்சாரியார் | - | சிறந்த பாடகர் |
| 09) | திரு.உமையாள்புரம் சுவாமிநாத ஐயர் | - | சிறந்த பாடகர் |
| 10) | திரு.மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் | - | சிறந்த பாடகர் |
| 11) | திரு.எம்.எம்.தண்டபாணி தேசிகர் | - | சிறந்த பாடகர் |
| 12) | திரு.மதுரை சோமசுந்தரம் | - | பெரும் கலைஞர் |
| 13) | திரு.ரி.கே.ரங்கச்சாரி | - | பெரும் கலைஞர் |
| 14) | திரு.மகாராஜபுரம் சந்தானம் | - | பெரும் கலைஞர் |
| 15) | திரு.தியாகராஜபாகவதர் | - | பெரும் கலைஞர் |
| 16) | திரு.ஜி.என்.பாலசுப்பிரமணியம் | - | பெரும் கலைஞர் |
| 17) | திரு.டி.கே. ஜெயராமன் | - | பெரும் கலைஞர் |
| 18) | திரு.வி.வி.சடகோபன் | - | பெரும்கலைஞர் |
| 19) | திரு.மாயூரம் ராஜம் ஐயர் | - | பெரும் கலைஞர் |
| 20) | திரு.சாத்தூர் சுப்பிரமணியபிள்ளை | - | பெரும் கலைஞர் |

21) திரு.சீர்காழி கோவிந்த ராஜன் - பெரும் கலைஞர்
22) திரு.டி.ஆர் மகாலிங்கம் - பெரும் கலைஞர்
23) எம்.எஸ். சுப்புலட்சுமி - பெரும் கலைஞர்
24) எம்.எல். வசந்தகுமாரி - பெரும் கலைஞர்
25) ராதா ஜெயலட்சுமி - பெரும் கலைஞர்
26) சூலமங்கலம் சகோரிகள் - பெரும் கலைஞர்
27) டி.கே. பட்டம்மாள் - பெரும் கலைஞர்
28) பிருந்தா முக்தா சகோதரிகள் - பெரும் கலைஞர்
29) ஆர். வேதவல்லி - பெரும் கலைஞர்


**பிரபல்யம் பெற்ற சிறந்த இசைப்பாடகர்கள் பலர் தமிழகத்தில் தற்பொழுது வாழ்ந்து வருகின்றனர்.**

01) திரு.எம்.பாலமுரளி கிருஷ்ணா - இசைப்பேரறிஞர் (அண்மையில் காலமானார்)
02) திரு.ரி. என். ஷேஷகோபாலன் - இசைப்பேரறிஞர்
03) திரு.ரி.எம்.கிருஷ்ணா - இசைப்பேரறிஞர்
04) திரு.ரி.வி.சங்கரநாராயணன் - இசைப்பேரறிஞர்
05) திரு.ஓ.எஸ்.தியாகராஜன் - இசைப்பேரறிஞர்
06) திரு.கே.வி.நாராயணசாமி - இசைப்பேரறிஞர்
07) திரு.சஞ்சேய் சுப்பிரமணியம் - இசைப்பேரறிஞர்
08) திரு.கே.ஜே.ஜேசுதாஸ் - இசைப்பேரறிஞர்
09) திரு.நெய்வேலி சந்தான கோபாலன் - இசைப்பேரறிஞர்
10) திரு.ஓ.எஸ்.அருண் - இசைப்பேரறிஞர் -கலை மாமணி
11) திரு.உன்னி கிருஸ்ணன் - இசைப்பேரறிஞர்- கலை மாமணி
12) திரு.மதுரை கிருஷ்ணன் - இசைப்பேரறிஞர்
13) திரு.நேதனூரி கிருஸ்ணமூர்த்தி - இசைப்பேரறிஞர்
14) திரு.மணக்கால் ரங்கராஜன் - இசைப்பேரறிஞர்
15) திரு.டாக்டர் கணேஷ் - இசைப்பேரறிஞர்
16) திரு.சிக்கில் குருசரண் - இசைப்பேரறிஞர்
17) திரு.திருச்சூர் சகோதரர்கள் - இசைப்பேரறிஞர்
18) மல்லாடி சகோதரர்கள் - இசைப்பேரறிஞர்

19) திரு.குன்னக்குடி பாலமுரளி கிருஷ்ணா- இசைப்பேரறிஞர்
20) திரு.அபிஷேக் ரகுராம் - இசைப்பேரறிஞர்
21) திரு.விஜே சிவா - இசைப்பேரறிஞர்
22) ஸ்ரீமதி அருணா சாயிராம் - சிறந்த பாடகி
23) சுதா ரகுநாதன் - சிறந்த பாடகி
24) நித்யஸ்ரீ மகாதேவன் - சிறந்த பாடகி
25) பம்பாய் ஜெயஸ்ரீ - சிறந்த பாடகி
26) ரஞ்ஜனி காயத்ரி - சிறந்த பாடகி
27) பூஷணி கல்யாணராமன் - சிறந்த பாடகர்கள்
28) காயத்ரி வெங்கட்ராகவன் - சிறந்த பாடகர்கள்
29) காயத்திரி கிரிஷ் - சிறந்த பாடகர்கள்
30) ப்ரியா சகோதரிகள் - சிறந்த பாடகிகள்
31) மகாநதி சோபனா - சிறந்த பாடகர்கள்
32) சௌமியா - சிறந்த பாடகர்கள்
33) சைந்தவி - சிறந்த பாடகர்கள்
34) மகதி - சிறந்த பாடகர்கள்
35) வினயா கிருஷ்ணன் - சிறந்த பாடகர்கள்
36) பரத்சுந்தர் - சிறந்த பாடகர்கள்
37) கோபாலகிருஷ்ணன் - சிறந்த பாடகர்
38) ஸ்ரீரஞ்சனி சந்தனகோபாலன் - சிறந்த பாடகர்கள்
39) ஹரினி - பாடகர்

மேலும் பல நூறு இசைப்பாடகர்கள் அங்கு உள்ளனர். இவர்கள் பலரையும் சங்கீத ரசிகர்கள் நன்கு அறிந்துள்ளனர். இவ்வாறு பல ஆயிரம் பெரும் புகழ் பெற்ற இசைக்கலைஞர்களும், பல இளம் பாடகர்களும் வளர்ந்து வரு வது பெருமைக்குரியன. இந்திய நாட்டில் இக்கலை பல்கி வருவதற்கு அந் நாட்டில் பல சாதகமான சூழ்நிலைகளும் அவர்களின் அயரா முயற்சி பயிற்சி வசதியும் காரணமாகும்.

-04-



# தமிழக வயலின் கலைஞர்கள்



வயலின் வாத்தியம் சங்கீதக் கலைஞர்களுக்கு பாடகர்களுக்கு மிகவும் அத்தியாவசியமாகும். வயலின் பாடகர்களுக்கு மிகவும் அனுசரணையாக வாசிப்பது கச்சேரியின் தரத்தினை மிகவும் சிறப்புற அமைய உதவுகின்றன. வயலின் சோலோவாக அதாவது தனி வாத்தியமாகக் கச்சேரிகள் செய்து புகழ் படைத்த இந்திய வயலின் வாத்திய கலைஞர்கள் பலர் உள்ளனர். வயலின் வாத்தியத்தில் பெரும் புகழ் பெற்ற கலைஞர்கள் வரிசையில் பின்வரும் கலைஞர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர்.

1) திரு. துவாரம் வெங்கடசாமி நாயுடு
2) திரு. கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை
3) திரு. லால்குடி ஜெயராம்
4) திரு. ரி. என். கிருஷ்ணன்
5) திரு. எம். எஸ். கோபாலகிருஷ்ணன்
6) திரு. மைசூர் செளடையா
7) திரு. எம். எஸ். அனந்தராமன்
8) திரு. குன்னக்குடி வைத்தியநாதன்
9) திரு. எம். சந்திரசேகரம்
10) திரு. கணேஸ், குமரேஸ்
11) திரு. எல். வைத்திநாதன்

12) திரு.அன்னவரகு ராமசாமி
13) திரு.திருமதி விஜயலட்சுமி
14) திரு.நகை முரளிதரன்
15) திரு.நாகை ஸ்ரீராம்
16) திரு.எஸ்.வரதராஜன்
17) லலிதா நந்தினி
18) டாக்டர் நர்மதா
19) கன்யா குமாரி
20) வி.வி.சுப்பிரமணியம்
21) வி.வி.ரவி
22) மைசூர் நாகராஜன்
23) மாரெல்லாவ் கேசவராவ்
24) ஆர்.கே.ஸ்ரீராம் குமார்
25) மாயவரம் கோவிந்தராஜபிள்ளை
26) விட்டல் ராமமூர்த்தி
27) கல்யாணி சங்கர்
28) சந்திர மௌலீஸ்வரன்
29) எல்.சுப்பிரமணியம்
30) எல்.சங்கர்

முதலான வயலின் கலைஞர்கள் சிறப்புப் பெற்றவர்கள். இவை தவிர மேலும் பல வயலின் கலைஞர்கள், இளம் கலைஞர்கள் வய லின் வாத்தியத்தில் சிறப்பிடம் பெறுகின்றனர்.





## -05-

# தமிழக மிருதங்க வாத்திய கலைஞர்கள்

மிருதங்க வாத்தியம் கர்நாடக சங்கீதத்திற்கு மிகவும் அத்தியாவசியமான பக்கவாத்தியமாகும். கர்நாடக சங்கீத கலைஞர்கள் பாடும் பொழுது மிருதங்கம் அதற்கு அனுசரணையாக வாசித்து கச்சேரி செய்பவர்களுக்கு ஊக்கம் கொடுத்து அதன் தரம் சிறப்பான தாக்குகின்றது. அதே போன்று ரசிகர் களையும் கவர்ந்து விடுகின்றன. மிருதங்க வாத்தியக் கலையில் மிகவும் புகழ் பெற்ற பெரும் வித்துவான்கள் இந்தியாவில் உள்ளனர். மிருதங்க வாத்தியக் கலைஞர்களில் பின்வரும் வித்துவான்கள் ரசிகர்களால் நன்கு அறியப்பட்ட பெரும் வித்துவான்களாவர்.

01) திரு.காரைக்குடி மணி - மாபெரும் மிருதங்க கலைஞர்
02) திரு.பாலக்காட்டு மணி ஐயர் - மாபெரும் மிருதங்க கலைஞர்
03) திரு.உமையாள்புரம் கே.சிவராமன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
04) திரு.குருவாயூர் துரை - மாபெரும் மிருதங்க கலைஞர்
05) திருவாரூர் ரி.பக்தவத்சலம் - மாபெரும் மிருதங்க கலைஞர்
06) மன்னார்குடி ஈஸ்வரன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
07) திருவாரூர் வைத்தியநாதன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
08) திரு.பி.கணபதி ராமன் - மாபெரும் மிருதங்க கலைஞர்

09) திரு.கே.வி. பிரசாத் - மாபெரும் மிருதங்க கலைஞர்
10) திரு.பழனி சுப்பிரமணிய பிள்ளை - மாபெரும் மிருதங்க கலைஞர்
11) புதுக்கோட்டை தெட்சணாமூர்த்தி பிள்ளை- மாபெரும் மிருதங்க கலைஞர்
12) திரு.தஞ்சாவூர் நாராயணசாமி ஐயர் - மாபெரும் மிருதங்க கலைஞர்
13) உமையாள்புரம் கோதாண்டராம ஐயர் - மாபெரும் மிருதங்க கலைஞர்
14) திரு.கும்பகோணம் அழகிரி சாமி பிள்ளை- மாபெரும் மிருதங்க கலைஞர்
15) திரு.ரி.வி.கோபாலகிருஷ்ணன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
16) திரு.தஞ்சாவூர் ராமதாஸ் - மாபெரும் மிருதங்க கலைஞர்
17) திரு.சி.எஸ்.முருகபூபதி - மாபெரும் மிருதங்க கலைஞர்
18) திரு.பாலக்காடு ரகு - மாபெரும் மிருதங்க கலைஞர்
19) திரு.டி.கே.மூர்த்தி - மாபெரும் மிருதங்க கலைஞர்
20) திரு.ஸ்கந்த சுப்பிரமணியம் - மாபெரும் மிருதங்க கலைஞர்
21) திரு.திருச்சி சங்கரன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
22) திரு.ஆர்.ரமேஷ் - மாபெரும் மிருதங்க கலைஞர்
23) திரு.மோகன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
24) திரு.மதராஸ் கண்ணன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
25) ஸ்ரீஹரி குமார் - மாபெரும் மிருதங்க கலைஞர்
26) கும்பகோணம் சுவாமி நாதன் - மாபெரும் மிருதங்க கலைஞர்
27) வேலூர் ராமபத்திரன் -
28) தஞ்சாவூர் உபேந்திரன் -

## கடம் - வித்துவான்கள்

1) எஸ்.வில்வாத்திரி ஐயர் - கடம்
2) விநாயக ராம் - கடம்
3) உமையாள் புரம் கோதாண்டராம ஐயர் - கடம்
4) ஆலங்குடி ராமச்சந்திரன் - கடம்
5) எஸ்.முருகேசன் - மோர்சிங் கலைஞர் - கடம்
6) சி.சுரேஷ் - கடம்
7) எஸ்.வி.ரமணி - கடம்

8) கார்த்திக் - கடம்
9) கே.எம்.வைத்தியநாதன் - கடம்

ஆகிய மிருதங்க வாத்தியம், கடம் வாத்தியம் கலைஞர்கள் சிறப்புப் பெற்றமுதன்மை வித்துவான்களாவர். மேலும்பல மிருதங்க,கடம், கஞ்சிரா, முகர்சிங், வாத்தியக் கலைஞர்கள் சிறப்புப் பெற்றவர்கள் உள்ளனர்.

## வீணை கலைஞர்கள்

1) திரு. எஸ்.பாலச்சந்தர் - முதன்மை வித்துவான்கள்
2) திரு. சிட்டி பாபு - முதன்மை வித்துவான்கள்
3) திரு. ஈமணி சங்கர சாஸ்திரி - முதன்மை வித்துவான்கள்
4) திரு. R. பிச்சுமணி - முதன்மை வித்துவான்கள்
5) காய்த்திரி - முதன்மை வித்துவான்கள்
6) திரு. ராஜேஸ் வைத்யா - பலவித வினோதங்கள் படைத்த வீணைக் கலைஞர்
7) தனம்மாள் - பலவித வினோதங்கள் படைத்த வீணைக் கலைஞர்
8) ரேவதி கிருஸ்ணா - பலவித வினோதங்கள் படைத்த வீணைக் கலைஞர்
9) திரு. கே.பி.சிவானந்தம் - பலவித வினோதங்கள் படைத்த வீணைக் கலைஞர்
10) ரவிக்கிரன் - சித்திர வீணை
11) ரங்க நாயகி ராஜகோபாலன் - சித்திர வீணை
12) இராஜேஸ்வரி பத்மநாதன் - சித்திர வீணை
13) பூதலூர் கிருஷ்ணமூர்த்தி - சித்திர வீணை
14) ஸ்ரீ வித்யா - சித்திர வீணை
15) M.A. கல்யாண கிருஸ்ணபாகவதர் - வீணை வித்துவான்
16) R. வெங்கட்ராமன் - வீணை
17) P.S. நாராயணசாமி - வீணை
18) வி.துரைச்சாமி ஐயங்கார் - வீணை
19) ராம்நாத். கோபிநாத் ஐயர் - வீணை

## புல்லாங்குழல் வாத்தியக் கலைஞர்கள்

1) திரு. என் ரமணி
2) திரு.ரி. ஆர்.மகாலிங்கம் (மாலி)
3) திரு.சிக்கில் சகோதரிகள்
4) திரு.திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை
5) திரு.சசாங்
6) திரு.பல்லடம் சஞ்சீவராவ்
7) திரு.யு.பி.ஸ்ரீநிவாஸ் - மென்டலின் வாத்தியம்
8) திரு.பி.ராஜு - மென்டலின் வாத்தியம்
09) திரு.ஏ.கே.சி. நடராஜன் - கிளாரிநெட் வாத்தியம்
10) திரு.கதிரி கோபிநாத் - சாக்சப்போன் வாத்தியம்

## பக்திப் பாடகர்கள்

பக்தி கீதங்கள் மூலம் சங்கீதம் எல்லா மக்களையும் கவர்ந்துள்ளது. பக்திப் பாடல்களைப்பாடி மக்கள் யாவரையும் பரவசப்படுத்திய தென் இந்தியப் பாடகர்கள்.


1) ரி.எம். சௌந்தரராஜன்
2) சீர்காழி கோவிந்தராஜன்
3) எம்.எஸ்.விஸ்வநாதன்
4) பித்துக்குளி முருகதாஸ்
5) ரி.எல்.மகராஜன்
6) சீர்காழி சிவசிதம்பரம்
7) எஸ்.பி.பாலசுப்பிரமணியம்
8) கே.பி.சுந்தராம்பாள்
9) பி. சுசீலா
10) எஸ்.ஜானகி
11) வசந்த கோகுலம்

12) சித்திரா
13) எல்.ஆர்.ஈஸ்வரி
14) ஹரிகரன்
15) மனோ
16) இளையராஜா
17) ஹரிதாஸ் சுவாமிகள்
18) உடயலூர் கல்யாணராமன்
19) விட்டல் தாஸ்
20) தர்மபுரம் சுவாமிநாதன்
21) எஸ்.பாலசுப்பிரமணிய பாகவதர்
22) விசாகா ஹரி - பிரசங்கம்
23) வீரமணி
24) வாணி ஜெயராம்
25) பி. லீலா

ஆகியோர் அற்புதமாகப் பாடியுள்ளனர்.



-06-



# இந்திய கர்நாடக மேதைகளின் மகத்துவம்

இந்திய மண்ணில் சங்கீதக் கலை மேதை களாக வாழ்ந்த வாழுகின்ற அறிஞர்களின் தனித்துவம் மிக்க இசையினை தற்பொழுதும் நாம் கேட்கும்பொழுது அவர்களின் இசைஞான அனுபவம், குரல் வளம், இனிமை, பாடும் விதங்கள், மக்களைக் கவரும் வித்துவச் சிறப்பு, மேடை யில் வீற்றிருக்கும் கவர்ச்சி, உடை அலங்காரம் முதலான காட்சிகள் யாவும் மிகவும் அற்புதம் வாய்ந்தன. அவர்களது சங்கீத இசை நுட்பங்கள் யாவும் தனித்தனி சிறப்பு வாய்ந்தவை. அவர்கள் அவற்றைப் பல் வேறு பாணிகளில் பாடி ரசிகர்களை தம் வசப் படுத்தியுள்ளனர். மேலும் ராக ஆலாபனையில் பல வினோதங் கள், ராக மாலிகை செய்வது, பல்லவியில் ராகமாலிகை விநோதங்கள் செய்வன யாவும் சிறப்பானவை. பக்தியுடன் ராக ஆலாபனைக்கு முக்கியத்துவம் கொடுத்து மனம் உருகிப் பாடி பாடுபவர்கள் மட்டுமன்றி அதனைக் கேட்கின்ற அத்தனை உள்ளங்க ளையும் ஆத்மானந்தப்படுத்துகின்றனர்.

செம்பை வைத்தியநாத பாகவதர் பாடும்பொழுது அவரது ஆலாபனை செய்யும் விதம். சுரங்களை கையாழும் தன்மை சங்கதிகள், குரல் வளம், கம்பீரம் என்பன யாவும் மகத்தானவை- அதே போன்று செம்மாங்குடி ஸ்ரீநிவாச ஐயர் அவர்களும் சிறந்த சங்கீத மேதைகளாவர். அவரும் இனிய மென்மையான குரலில் கவர்ச்சிகரமாகப் பாடி பல்லாயிரம் ரசிகர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளனர்.

அரியகுடி, இராமானுஜ ஐயங்கார். மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், மதுரை மணி ஐயர், மதுரை சோமசுந்தரம் முதலான பெரும் பெரும் சங்கீத வித்துவான் கள் பல்லாயிரம் ரசிகர்களைக் கவர்ந்த மேதைகளாவர். மதுரை சோம சுந் தரம் அவர்களின் மக்களது கலாரசனைக்கேற்ப பல மணி நேரம் தொடர்ந்து பாடும் இசைவிற்பன்னர். அவரது குரல் வளம் இசைத்துறையை வளப்படுத் துவதற்கென்று இறைவனால் அருளப்பட்டது எனில் மிகை யில்லை. மதுரை மணி ஐயரின் குரல் கலாரசிகர்களைக் கவரும் மனோரம் மியமானது. அவர் பாடும் விதமும் தனித்துவம் வாய்ந்தன. இன்றும் இவர் களின் பாடல்கள் எல்லா மக்களின் இதயங்களிலும் இடம்பிடித்துள்ளன.

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, முசிரி சுப்பிரமணிய ஐயர், ஆலத்தூர் சகோதரர்கள், மகாராஜபுரம் சந்தானம் முதலான சிறந்த சங்கீத கலைஞர் கள் அக்காலத்தில் புகழ்பெற்ற வித்துவான்களாக விளங்கியவர்கள். இவர் கள் யாவரும் சங்கீத ரசிகர்களை கவர்ந்தவர்களாவர். மேலும் பிரபல்யம் மிக்க சங்கீத சிகரங்களாக மறைந்த சில கலைஞர்களும் தற்பொழுது வாழ்ந்து ரசிகர்களின் உள்ளங்களில் இடம்பிடித்துள்ள கலைஞர்கள் பலர் தனித்தனியான முத்திரை பதித்த இசை மேதைகளாக உள்ளனர். மங்க ளம் பள்ளி எம். பாலமுரளி கிருஷ்ணா ஓர் பெரும் இசை மேதை ஆவர். இசையுலகில் நன்கு பிரபலமானவர். மேலும் ரி. என். சேஷகோபாலன் ஓர் சாதனை படைத்த கலைஞர். பல மணி நேரம் இருந்து பாடும் வல்லமை படைத்தவர். ரி. எம். கிருஷ்ணா - என்பவர் மென்மையான குரலிசையால் ரசிகர்களைப் பாடிப்பாடிக் கவர்ந்துள்ளார். எமது நாட்டிற்கு இவர்கள் யாவரும் வந்து நன்கு பிரபல்யம் பெற்ற வித்துவான்களாவர்.

சஞ்சேய் சுப்பிரமணியம் நெய்வேலி சந்தான கோபாலன் முதலான இசை ஜாம்பவான்கள் கலைமாமணி உன்னிக்கிருஷ்ணன், ஓ.எஸ்.தியாக ராஜன். ரி.வி. சங்கர நாராயணன், கே.ஜே.ஜேசுதாஸ், ஓ.எஸ்.அருண், மல்லாடி சகோதரர்கள் முதலான சங்கீத வித்துவான்கள் எமது நாட்டிற்கு வந்துபல முறை இசைவிருந்து அளித்துள்ளனர். இவர்களும் தனித் தனியான தன்மை கொண்ட அறிஞர்களாக உள்ளனர். இவர்களது இசைக் கச்சேரிகள் நிகழும் பொழுது பல்லாயிரம் ரசிகர்கள் கூட்டம் கண்டு மகிழ்வதனைக் காண்கின்றோம்.

மேலும் பெண் சங்கீத கலைஞர்கள் பலர் சிறந்த ஞானம், இனிமை யான குரல்வ ளம் கொண்ட அறிஞர்களாக மேடைகளில் பாடி வருகின்றனர். அவர்களில் காலம் சென்ற ஸ்ரீமதி எம்.எல்.வசந்தகுமாரி ஸ்ரீமதி, எம்.எஸ். சுப்புலட்சுமி, ஸ்ரீமதிடி.கே.பட்டம்மாள், ஸ்ரீமதி ராதா ஜெயலட்சுமி, ஸ்ரீமதி சூலமங்கலம் சகோதரிகள் ஆகியோர் தனித்துவம் கொண்ட சிறந்த பாடகர் களாக இசை உலகில் பவனி வந்தனர். இன்றும் இவர்களது இசைக்கச் சேரிகளை பதிவுகளில் கேட்கும் பொழுது எமது உள்ளம் பூரிக்கின்றது. எமக்கு அவர்கள் அக்காலத்தில் பாடிப் பாடி ரசிக உள்ளங்களைக் கவர்ந்த காட்சி தெரிகின்றது. மேலும் ஸ்ரீமதி சுதா ரகுநாதன், ஸ்ரீமதி அருணா சாயிராம், ஸ்ரீமதி பிரியா சகோதரிகள், ஸ்ரீமதி நித்திய ஸ்ரீ மகாதேவன், ஸ்ரீமதி பம்பாய் ஜெயஸ்ரீ. ஸ்ரீமதி ரஞ்சனி காயத்ரி முதலான சங்கீத மேதைகள் பாடும் பொழுது பல்லாயிரம் ரசிகர்கள் பார்த்து மகிழ்வதனைக் காண்கின்றோம். இவர்களது இசை நிகழ்ச்சிகளை எத்தனை தடவைகள் கேட்டாலும் அவற்றை மேலும் மேலும் கேட்டு மகிழக்கூடிய சிறப்பு வாய்ந்தவை. இவர்களில் பலரும் ரசிகர்களைக் கவர வைப்பதற்குப் புதிய புதிய யுக்திகளைக் கையாண்டு தம் இசைப் புலமையை, வித்துவத் தன்மையினை வெளிப்படுத்துகின்றனர்.

மேலும் வாத்தியக் கலையில் வயலின் மிருதங்கம், கடம், வீணை, புல்லாங்குழல் முதலான வாத்தியங்களில் பல பல கலைஞர்கள் அதனைக்

கையாண்டு ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளனர். அவர்கள் அவ் வாத்தியங்களைக் கையாழும் முறை அதில் தமது வித்துவத் தன்மையினைக் காண்பிக்கும் முறை யாவும் மிகவும் உன்னதமானது. இவ் வாத்தியங்களைக் கையாண்டு அதனைப் பேச வைத்துள்ளனர் எனலாம். இவ் வாத்தியக் கலைஞர்களை ரசிகர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். அதனால் ரசிகர்கள் அவ் வாத்தியக் கலைஞர்களின் பெயர்களை அவர்களது ஊரினை கூறியவுடன் தெரிந்து கொள்கின்றனர். இவர்கள் யாவரையும் இசை உலகம் என்றென்றும் மறவாது போற்றும்.

வாத்தியக் கலைஞர்களில் பெரும் புகழ்பெற்ற கலைஞர்கள் பலர் தமது கலைஞானத்தால் பெரும் மாமேதைகளாக விளங்கினார்கள். வயலின் வாத்தியத்தில் லால்குடி ஜெயராமன் மிக அற்புதமாக இனிமையாக வாசித்து மேதையாக வாழ்ந்தவர். ரி. என். கிருஸ்ணன், எம்.எஸ், கோபால கிருஷ் ணன், எம்.எஸ்.அனந்தராமன் முதலான வயலின் கலைஞர்கள் தனித்து வம் மிக்க புகழ்வாய்ந்த மேதைகளாவர். குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் மிகவும் கவர்ச்சிகரமானது. பல ரசிகர் கூட்டங்களை கவரும் வண்ணம் வினோத வித்தைகள் காட்டி வயலினை பேச வைத்த வர்; எம் சந்திரசேகரன், கணேஷ் குமரேஷ் ஆகியோரின் வாசிப்பு மிகவும் பிரமாதமாகும். அவர்கள் வயலின் பற்பல இனிமையான ஆலாபனைகள் சங்கதிகள் செய்து காட்டி மக்களைக் கவர்கின்றவர்கள் - இவர்கள் யாவரின தும் வாத்தியச் சிறப்புக்கள் பற்றி தனித்தனியாக விமர்சித்து கூற வேண்டும். அத்தனை சிறப்புக்களும் இவர்களிடம் காணப்படுகின்றன.

மிருதங்க வாத்தியக் கலைஞர்களில் காரைக்குடி மணி பாலக்காட்டு மணி. உமையாள் புரம் சிவராமன், திருவாரூர் பக்தவச்சலம் முதலான கலைஞர்கள் மிக மிக அற்புதமாக விநோதமாக மிருதங்கத்தினை தம் கைவிரல்களால் வாசித்து கச்சேரிகளின் தரத்தினை பெருமைப்படுத்தும் சிறப்பு உள்ளவர்கள். இவர்களது மிருதங்க வாத்தியம் ரசிகப் பெருமக்களால் பாராட்டப் பெறும் பிரமிக்கமுள்ள கலைஞர்களாவர். கடம் வாசிப்பில் வில்

வாத்திரி ஐயர் அவர்களின் வாசிப்பும், விநாயகராம் அவர்களின் வாசிப்பும் சபையில் பல விநோதங்களை வெளிக்காட்டும் சிறப்புக்குரியவை இவர்களும் ரசிகர்களினால் பாராட்டப் பெறும் பெரும் சிறப்புக்கள் உரியவர்கள்.

மேலும் வீணை வாத்தியத்தில் எஸ். பாலச்சந்தர் மீட்டும் பொழுது அதன் நாத ஒலி மிக அதிசயம் வாய்ந்த கணீர் எனும் சிறப்புடையது. அது ஓர் தனி ரகம் சிட்டி பாபு, ஈ மணி சங்கர சாஸ்த்திரி, தனம்மாள், ஆகியோரின் வீணை நாதம் மிகவும் மென்மையானதும், இனிமையானதும், விறுவிறுப்பானதாகவும் அமைந்தவை. சமீபகாலமாக ராஜேஸ் வைத்யா வீணை வாசிப்பில் கொடி கட்டிப் பறக்கின்றார். பற்பல வினோதங்கள் புரிந்து வீணையை அதன் நாத இசையை புதுப்புது வடிவிலே காட்டி ரசிகர்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டுள்ளார். மிக இனிமையாக வீணை வாசிப்பார். புல்லாங்குழல் இசையில் என். ரமணி, மாலி ஆகியோர் வாசிப்பு விறுவிறுப்பு அற்புதம் வாய்ந்தன. மென்டலின் ஸ்ரீனிவாஸ், தனது வாத்தியத்தின் மூலம் பல்லாயிரம் ரசிக உள்ளங்களை மகிழ்வித்தவர்.



# இந்திய கலைஞர்கள்





ரி.கே.பட்டம்மாள்



M.S.சுப்புலட்சுமி



எம்.எல்.வசந்தகுமாரி




சித்தூர் சுப்பிரமணியம்




M.M.தண்டபாணி தேசிகர்



அரியகுடி ஸ்ரீ இராமானுஜ ஐயங்கர்



G.N பாலசுப்பிரமணியம்



ரி.வி.சங்கரநாராயணன்



செம்மாங்குடி சிறீனிவாஸ்



ஜெயலக்ஷ்மி
ராஜலக்ஷ்மி சகோதரிகள்



எம்.கே.தியாகராஜபாகவதர்



ராதா ஜெயலக்ஷ்மி



சீர்காளி கோவிந்தராஜன்



செம்பை
வைத்தியநாத பாகவதர்


முசுறி சுப்பிரமணிய ஐயர்


மதுரை சோமு


மகாராஜபுரம்
விஸ்வநாத ஐயர்


ரி.என்.ஷேச கோபாலன்




மகாராஜபுரம் சந்தானம்



ரி.ஆர்.மகாலிங்கம்



ரி.கே.ரங்காச்சாரி



பாலமுரளி கிருஸ்ணா



நித்தியசிறி மஹாதேவன்



உன்னிகிருஷ்ணன்



மகாநதி சோபனா



சுதா ரகுநாதன்



சௌமியா




வினயா கிருஸ்ணன்



காரைக்குடி மணி




பாலக்காடு மணி ஐயர்



உமையாள்புரம்
கே.சிவராமன்



வீணா சிட்டி பாபு




எஸ்.பாலச்சந்தர்



கார்குறிச்சி
பி.அருணாசலம்



குன்னக்குடி வைத்தியநாதன்



ராஜேஸ் வைத்தியா

-07-




# நமது மண்ணின் இசைப்பாடகர்கள்

இந்திய மண்ணில் கலை உலகில் சாதனைகள் பல படைத்த கலைஞர்கள் பலர் உள்ள னர். இந்திய நாட்டுக் கலைஞர்களுடன் எமது ஈழ நாட்டின் கலைஞர்களை ஒப்பிட்டுக் கூற முடியாது. இந்திய நாட்டிலிருந்து தான் கர்நாடக இசைக்கலை வளர்ந்து பல நாடுகளிலும் பரவியுள்ளது. எமது நாட்டுக் கலைஞர்கள் பலர் இந்தியா சென்று பயிற்சிகள் பெற்றுப் பட்டங்கள் வாங்கி எமது நாட்டில் இசைக்கலையினை வளர்த்துள்ளார்கள். எமது மண் ணில் தோன்றி இசை பரப்பிய பல கலைஞர்களை நினைவு கூரும் பொழுது பல பெரும் பாடகர்கள் எமக்கு சிறப்புப் பெற்று பெருமை பெற்றமை பாராட் டுத்தக்கன. வாய்ப்பாட்டு வித்தவான்களாக எம் மண்ணில் வாழ்ந்து இசை பரப்பிய கலைஞர்கள் வரிசையில் பின்வரும் பெரும் வித்துவான்கள் பெருமை மிக்கவர்கள்.

**உடுவில் என். சண்முகரத்தினம்:-**

இவர் மிகவும் புகழ் பெற்ற வித்துவானாவார். இவர் மேடையில் அமர்ந்து பாடும் பொழுது மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் வெகு அழகாக அமர்ந்து பாடுவதனைக்



கண்டுள்ளோம். நல்ல குரல் வளமும் சங்கீத ஞானமும் மிக்கவர். ரசிகர்கள் கூட்டம் இவர் கச்சேரியின் போது நிறைந் திருக்கும். இவரின் இசை சேவைக்காக இவருக்கு சங்கீத ரத்தினம், கான வித்யா பூஷணம், இசைப் புலவர், இசைச் சக்கரவர்த்தி எனும் பல பட்டங்கள் வழங்கப்பட்டன. இவர் பல சீடர்களை உருவாக்கியுள்ளார். இவரின் மகன் சண்முகராகவன் தகப்பனார் பாணியில் பாடிப் புகழ்பெற்றுள்ளார்.

**ஐயாக்கண்ணு தேசிகர்:-**

இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் இந்தியாவிலிருந்து வர வளைக்கப்பட்ட இசை விரிவுரையாளராகப் பல ஆண்டுகள் கடமை யாற்றிப் புகழ் பெற்ற கலைஞர். நமது மண்ணில் மானிப்பாயில் வாழ்ந்த பல கலை ஞர்களுக்கு இசை பயிற்றுவித்து உருவாக்கியவர். சிறந்த கர்நாடக சங்கீத வித்துவான் பல பல மேடைகளில் பாடி மகிழ்வித்தவர். இவரது இரு பிள் ளைகள் இசைத்துறையில் சிறந்து விளங்குகின்றனர்.

**பரம்தில்லைராஜா:-**

இவர் சங்கீத ஞானம் படைத்த ஆசிரியர். இவர் பாடும் பொழுது நன்கு அனுபவித்து பலரையும் கவர்ந்து பாடும் சிறந்த வித்துவான். வித்துவத் தன்மை மிக்கவர். பல மணி நேரம் ராக ஆலாபனை செய்து பாடும் சிறப்பு இவரிடம் உண்டு. மேடையில் அமர்ந்து பாடும்பொழுது மிக கம்பீரமாக வீற்றிருப்பவர். அகில உலக புகழ் பெற்ற சங்கீத வித்துவான்.

**ராம் குமாரசாமி:-**

இவர் சிறந்த கர்நாடக சங்கீத பாடகர்; சபையில் வீற்றிருந்து பாடும் பொழுது வெகு அற்புதமாக அமர்ந்து கவர்ச்சிகரமாய் பாடுவார். அக்காலத் தில் இவர்கள் பலர் சங்கீத உலகில் மிகவும் புகழ்பெற்றவர்களாக விளங்கி யவர்கள்.

* சத்திய பாமா இராஜலிங்கம்
* சரஸ்வதி பாக்கியராஜா

இவர்கள் இருவரின் கச்சேரிகள் வெகு இனிமையானது. எம். எல் வசந்த குமாரியின் பாணியில் அமைந்திருக்கும்.

1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற் கூறிய கலைஞர்கள் யாவரும் யாழ். மண்ணில் மிகவும் சுடர்விட்டு பிரகாசித்த மேதைகளாவர். பல மேடைகளில் இவர்களின் கச்சேரியினைக் கேட்டு ரசிப்பதற்கென பெருந் தொகையான மக்கள் ரசிகர் கூட்டம் நிறைந்து காணப்பட்டனர். இசை விழாக்கள் தியாகராஜ உற்சவங்கள் முதலான நிகழ்ச்சிகள் பல மேடைகளில் ஒழுங்குபடுத்தி இவர்கள் கச்சேரிகள் மிகவும் பிரமாதமாக அமைவதனை அக்கால ரசிகர்கள் கண்டு மகிழ்ந்துள்ளனர். ரசிக ரஞ்சின சபா இவர்களின் கச்சேரிக்கு அதிக முக்கிய இடம் கொடுத்தமை மறக்க இயலாத நிகழ்வு.

* நாகேஸ்வரி பிரமானந்தா - ஞானம் படைத்த இனிய குரல்வளம் கொண்டு சிறந்த வித்துவான் ஆவார்.

**சு. கணபதிப்பிள்ளை:-**

சங்கீத வித்துவான் சங்கீத ஆசிரியர். கோட்டக் கல்விப் பணிப்பாளர். உதவிக் கல்விப் பணிப்பாளர் என பெருமை பெற்ற கலைஞர். பழுத்த சங்கீத ஞானம் கொண்டவர். பாடும் பொழுது தம் இசை ஞானத்தால் பற்பல சங்கதிகள் புதுமைகள் செய்து பலரையும் மகிழ வைப்பவர்.

* சி. பத்மலிங்கம்
* பொன். சுந்தரலிங்கம்
* எல். திலகநாயகம் போல்
* ஏ.கே. கருணாகரன்

மேலே கூறப்பட்ட கலைஞர்கள் ஒரே காலத்தில் வாழ்ந்த வாழும் சங்கீதக் கலைஞர்கள். இவர்கள் யாவரும் சங்கீதத் துறைக்கு தம்மை அர்ப்பணித்து கர்நாடக சங்கீதம் வளர்வதற்கு, வித்துவான்கள் உருவாக மிகவும் துணை போனவர்கள். பற்பல இளம் சங்கீத கலைஞர்கள் உருவாக பாடுபட்டவர்கள். பல சபாக்களை உருவாக்கி இசையை வளர்த்த பெருமைக் குரியவர்கள். நல்ல இசை ஞானம் கொண்டவர்கள். இவர்களின் முயற்சியினால் வட இலங்கை சங்கீத சபை வளர்ந்தது. இளம் கலைஞர் மன்றம் உருவாகி அதன் மூலம் சங்கீதம் வளர்ச்சி பெற்றது. இவர்களது காலத்தில் யாழ்ப்பாணத்தில் சங்கீதக் கலைஞர்களுக்கும் சங்கீத ரசிகர்களுக்கும் ஆர்

வலர்களுக்கும் இசை நிகழ்வுகள் நிகழவும் அதனைப் பார்வையிடவும் பெருமளவு மதிப்பு, வசதிகள், கௌரவம் என்பன இருந்தன. மேலும் எம் மண்ணில்

1) ச.சண்முகராகவன்
2) கே. ஆர். நடராஜா
3) பொன். வாமதேவன்
4) வர்ண குலசிங்கம்
5) வாஸஸ்பதி ரஜீந்திரன்
6) பரமேஸ்வரி கணேசன்
7) எஸ். குமாரசாமி
8) என்.வி.எம்.நவரெத்தினம்
9) கே.எஸ்.சிவஞானராஜா
10) கொல்லங்கலட்டி நடராஜா
11) வி.சிவஞானசேகரம்
12) ஸ்ரீரங்கநாதன்
13) வர்ண ராமேஸ்வரன்
14) துவாரகன்
15) தவநாதன் றொபேட்
16) ஸ்ரீ தர்சன்
17) ஆரூரன்
18) உமாரமணன்
19) எம். துஷ்யந்தன்
20) சி.கனகாம்பரி
21) கே.ராமநாதன்
22) சி. கனகாம்பிகை
23) சிவரஞ்சினி ரமணா
24) மல்லிகா நாகராஜா
25) என்.சுபாகரன்
26) பிரிய தர்சினி ஜெகதீஸ்வரன்
27) தேனுகா கருணாகரன்



வீரமணி ஐயர்



ராதாக் கிருஸ்ணன்



வர்ண ராமேஸ்வரன்

28) கிருபாசக்தி கருணா
29) மது ராங்கி ஸ்ரீதரன்
30) எஸ்.சாய்லக்சுமி
31) சுன்யா அரவிந்தன்
32) அ.அமிர்தலோகன்
33) அ.அமிர்தசிந்துஜன்
34) வீரமணி ஐயர்

முதலான கலைஞர்கள் சிறந்த பாடகர்களாக விளங்குகின்றனர். எமது நாட்டில் அமைந்துள்ள பல கலாமன்றங்களின் ஆதரவினால் இவர்கள் பலர் சங்கீத ஆசிரியர்களாகவும் பல இளம் கலைஞர்களை உருவாக்கும் சிறந்த வித்துவான்களுமாக உள்ளனர்.

**மேலும் சில எம் நாட்டின் சங்கீதப் பாடகர்கள்**

01) திரு. சி. சிவானந்த ராஜா
02) திருமதி மணி கிருஸ்ணசாமி
03) திரு.எஸ். பாலசிங்கம்
04) ஸ்ரீமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்
05) திருமதி மேரி சரோஜா ஜஸ்ரின்
06) திரு.வி. செல்லத்துரை
07) திருமதி. சாரதா பரஞ்சோதி
08) திருமதி தாரணி ராஜ்குமார்
09) திருமதி மல்லிகாதேவி தனபாலசிங்கம்
10) திரு. வி.நடேசன்
11) திரு. கே.வி. தம்பு
12) செல்வி. ஜெகதாம்பிகை பரமநாதன்
13) பிரம்மஸ்ரீ ப. முத்துக்குமாரசாமி சர்மா
14) திரு. குலசீலநாதன்.

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவை தவிர சில கலைஞர்கள் விபரங்கள் தவறவிடப்பட்டுள்ளன. அவர்களையும் நினைவு கூருவோம்.

# -08-



## இசை மன்றங்கள்

எமது நாட்டில் சங்கீதக் கலைகளை வளர்த்த மன்றங்களாக யாழ். ரசிக ரஞ்சன சபா, வட இலங்கை சங்கீத சபை, இராமநாதன் கல் லூரி, இராம நாதன் நுண்கலை மன்றம், இளைங்கலைஞர் மன்றம், இணுவில் கந்த சுவாமி கோவில் இளந்தொண்டர் சபை, யாழ். திறந்த வெளியரங்கு, யாழ். வீரசிங்க மண்ட பம், துர்க்கா மணி மண்டபம், கம்பன் கோட்டம், கம்பன் கழகம், நல்லை ஆதீன மண்டபம் நாட் டின் பல பாகங்களிலும் இயங்கிய கலாசார மன் றங்கள் முதலானவை பெரும் பங்கு ஆற்றியுள் ளன.

இவற்றில் யாழ். ரசிக ரஞ்சன சபா சங்கீத கலைஞர்களைக் கௌரவித்து அவர்களுக்குப் பாராட்டுக்கள் கொடுத்து பல காலங்களாகச் செய்த சேவை மிகவும் பாராட்டுக்குரியவை. யாழ். பெருமாள் கோவிலடியில் ரசிக ரஞ்சன சபா எனும் பெயரில் மண்டபம் அமைத்து அங்கு வருடந்தோறும் இசை விழாக்கள் அமைத்து

கலைஞர்களுக்கும் ரசிக உள்ளங்களுக்கும் செய்த சேவை பாராட்டுக்குரி யவை. இங்கு சங்கீதம் பயிலும் இளைஞர்களுக்கு இசை வகுப்புக்கள் வைத் துப் பயிற்சிகள் வழங்கி பற்பல இளங்கலைஞர் களைத் தோற்றுவித்தனர். தொடர்ந்து இச் சேவை செய்யமுடியாத சூழ்நிலை லயினால் கலைஞர்களை மேலும் உருவாக்க முடியாத நிலை ஏற்பட்டது.

வட இலங்கை சங்கீத சபை மூலம் பல கலைஞர்கள் உருவாக்கப்பட் டமை எமக்குக் கிடைத்த பெரும் கொடையாகும். இங்கு பல பெரும் கலைஞர்கள் பங்கு கொண்டு இசை பயிலும் மாணவர்களுக்குப் பயிற்சிகள் செய்து கொடுத்து பரீட்சைகள் நடாத்தி அவர்கள் சங்கீத துறையில் பல துறைகளிலும் முன்னேற வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுத்தனர். வருடந்தோறும் நல்லூர் முருகன் உற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு மிகவும் பாராட்டத்தக்கதாக இசை நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இளங் கலைஞர் மன்றத்தின் ஆரம்பகால செயலாளராக இருந்த பொன்.சுந்தர லிங்கம் அவர்களால் நல்லூரில் உற்சவ காலங்களில் முருகன் அடியார்க ளும், இசை ஆர்வலர்களும் இளம் பாடகர்களும் மூத்த கலை கலைஞர்க ளும் பங்கு கொண்டு மகிழ்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட இத் தெய்வீக இசை நிகழ்வு தொடர்ந்து பல ஆண்டுகளாக சேவை ஆற்றி வருவது எல்லோரா லும் வரவேற்கப்பட்டதாக அமைந்துள்ளது. இங்கு இளங்கலைஞர்க ளுக்கும், மூத்த கலைஞர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

திரு.பொன்.சுந்தரலிங்கம், திரு.பத்மலிங்கம் முதலான கலைஞர்க ளால் ஸ்ரீமுருகன் தண்ணீர்ப்பந்தலில் ஆரம்பித்த இளங்கலைஞர் மன்ற தெய்வீக இசையரங்கு தொடர்ந்து நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் திரு. சோ.பத்மநாதன், திரு. வி.சிவஞானசேகரம், கலாநிதி ஆறுதிரு முருகன் ஆகியோரினால் நடத்தப்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கது.

இளங்கலைஞர் மன்றம், கலைஞர்களுக்கு ஆதரவு கொடுத்து ரசிகர் களைக் கவரும் வண்ணம் இசை நிகழ்ச்சிகள் நடத்தி வருவது யாவ ராலும் பாராட்டப்படுகின்றது.

இலங்கை வானொலியும் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - சங் கீதத் துறையில் வளர்வதற்கு அரிய பல சேவைகள் புரிந்துள்ளன. வானொ லியில் சங்கீதக் கலைஞர்கள் தமது கலைகளைப் பல்வேறு வகைகளில் வெளிப்படுத்துவதற்கு களம் அமைத்துக் கச்சேரிகளைச் செய்வதற்குச் சந்தர்ப்பங்கள் கொடுத்து சன்மானம் வழங்கி தரப்படுத்தி ஊக்குவித்த செயற்பாடுகளும் மறக்க இயலாதவகையாகும். வானொலியில் பாடிய கலைஞர்கள் மிகவும் தரம் வாய்ந்த கலைஞர்கள், அதனால் அவர்களுக்குப் பெரும் மதிப்பு நிலவியது.

இராமநாதன் நுண்கலைப் பீடம் இராமநாதன் நுண்கலைக் கல் லூரியில் இந்தியாவிலிருந்து பல பெரும் கலைஞர்கள் சித்தூர் சுப்பிர மணியபிள்ளை, மகாராஜபுரம் சந்தானம் முதலான பெரும் வித்துவான்கள் வந்திருந்து சங்கீததக் கலை வகுப்புக்கள் நடாத்தி கலைஞர்களை மேலும் மேலும் வளர்க்க முடியும் எனும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட போதும் எமது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக எண்ணிய நிகழ்வுகள் நிறைவேறாது போனமை மிகவும் மனவருத்தத்திற்குரியன. அக்கலைப் பீடம் தொடர்ந்து பல கலைத்துறை சார்ந்த கலைஞர்களைப் பட்டம் பெற வைக்கின்ற போதும் நல்ல தரம் வாய்ந்த கலைஞர்களை உருவாக்க முடி யாமை கவலைக்கு ரியதாகின்றது.நாட்டின் இன்றைய சூழ்நிலையில் பல ரும் ஒன்ற கூடி கலைத்துறையை மேம்படுத்த இந்திய நாட்டின் உத வியுடன் செய்ய முன்வந்தால் கலைத்துறை வளர்வதற்கான சந்தர்ப்பங்கள் அமையும்.

-09-



# நமது நாட்டு வயலின் கலைஞர்கள்

எமது மண்ணில் உருவான வயலின் கலைஞர்கள் வரிசையில் சிறப்பிடம் வகித்த வயலின் வித்துவான்களாக

01) திரு.வி.கே.குமாரசாமி
02) திரு.ஜீ. சண்முகானந்தம்
03) திரு. ஆர் இராதாகிருஸ்ணன்
04) திரு.சு. கோபிதாஸ்
05) திரு. கா. குகபரன்
06) திரு. கி. பத்மநாதன்
07) திருமதி. ஞானாம்பிகை பத்மசிகாமணி
08) திரு.சித்திவிநாயகம்
09) திரு.எஸ்.சர்வேஸ்வர சர்மா
10) திரு.எஸ்.கேசவமூர்த்தி
11) திரு.ஏ.ஜெயராமன்
12) திரு.T.V.பிச்சையப்பா
13) செல்வி. பாக்கிலட்சுமி நடராஜா
14) S. வெங்கடேஸ்வர சர்மா
15) A. சங்கரஐயர்
16) செல்வி S. தனதேவி
17) செல்வி. S. சாந்தநாயகி
18) திருமதி. S.திவாகரன்

19) ப. சியாமா கிருஸ்ணா
20) சோமஸ்கந்த சர்மா
21) வைத்தீஸ்வர ஐயர்
22) ஹம்சவதி ஜெகதீஸ்வரன்
23) காஞ்சனா செந்தூரன்

ஆகியோர் சிறப்புக்குரியவர்கள், இவர்கள் பல சங்கீத கலைஞர்கள் உருவாகவேண்டிய பயிற்சிகள் கொடுத்துள்ளனர். மேலும் பல வயலின் கலைஞர்கள் இந்தியாவிலிருந்து வந்து எமது நாட்டில் பாடிய பெரும் வித்து வான்களுக்குப் பக்கவாத்தியமாக வயலின் வாசித்து மிகவும் மதிக்கப் பட்டவர்கள். திரு. சண்முகானந்தம், ஆர். இராதாகிருஸ்ணன், சு. கோபி தாஸ் ஆகியோர் மிகவும் பிரபல்யம் மிக்க வயலின் கலைஞர்களாவர். இவர் கள் சோலோ வாத்தியமாக வயலின் வாசித்து பெருமை பெற்றவர்கள். திரு. ஏ.ஜெயராமன் - சிறந்த மெல்லிசை வாத்தியக் கலைஞராவார். பல பாட கர்களுக்கும் வயலின் சிறப்பாக வாசிக்கும் ஞானம் இவரிடம் உண்டு.

## நமது மிருதங்கக் கலைஞர்கள்

மிருதங்க வாத்தியக் கலைஞர்கள் வரிசையில் எமது மண்ணின் பெருமையை உலகமறியச் செய்த கலைஞர்களாக.

01) திரு. ஏ. எஸ். இராமநாதன்
02) திரு. ஆர். சந்தானகிருஸ்ணன்
03) திரு.எஸ்.மகேந்திரன்
04) திரு. சந்திரசேகரன்
05) திரு.எம். என். செல்லத்துரை
06) திரு.S. துரைராஜா
07) திரு. பாக்கியநாதன்
08) பிரம்மஸ்ரீ நா .சிவசுந்தர சர்மா
09) திரு.கே. எஸ். கணேச சரமா
10) திரு.ப. சின்னராசா

11) திரு. மா. சிதம்பரநாதன்
12) திரு. ஐ.சிவபாதம்
13) திரு.க.சண்முகப்பிள்ளை
14) பிரம்மஶ்ரீ பாலச்சந்திர சர்மா
15) திரு. க. கண்ணதாசன்,
16) திரு. அம்பலவாணர்
17) பிரம்மஶ்ரீ க. சுவாமிநாதசர்மா
18) தி.வரோதயன்
19) திரு. நா.மாதவன்
20) பிரம்மஶ்ரீ அ.நா.சோமஸ்கந்த சர்மா
21) வி. ரமணா சர்மா
22) க.நந்தகுமார்
23) திரு. சதா வேல்மாறன்
24) திரு.க.கஜன்
25) திரு. சி.செந்தூரன்
26) திரு. வி.ஜம்புநாதன்
27) A. செல்வரத்தினம்
28) K. ரவிசங்கர் - கடம்
29) J.சாரங்கன் - முகர்சிங்
30) திரு. அச்சுதன் கடம்
31) க.நந்தகுமார் - கெஞ்சிரா

முதலான மிருதங்க வாத்தியக் கலைஞர்கள் சிறப்புப் பெற்றவர்கள்.

திரு.ஏ.எஸ். இராமநாதன் அவர்களின் மிருதங்க வாசிப்பு மிக அற்புதம் வாய்ந்தது. பல பெரும் கலைஞர்களுக்கு பக்கவாத்தியம் வாசித்த பெருமையும் நடன அரங்குகளில் மிருதங்கத்தினை மிக நாதமாக வாசித்துப் புகழ்பெற்றமையும் சிறப்பானதாகும். இவரிடம் பல மிருதங்க கலைஞர்கள் பயின்று சிறந்த வாத்தியக் கலைஞர்களாக வெளிவந்துள்ளனர். பிரம்மஶ்ரீ சுவாமிநாதசர்மா கொழும்பில் முன்னணி மிருதங்க கலைஞராக விளங்குகின்றார்.

## வாத்தியக் கலைஞர்கள்

வீணை வாத்தியம் மிகவும் இனிமையானது. வீணை வாத்தியக் கலைஞர்கள் எமது நாட்டில் பலர் வாழ்ந்த போதும், வீணையில் அவர்கள் பெரும் வித்துவான்களாக இல்லாதது ஓர் குறைபாடாக உள்ளது. பல பெண் வீணை வாத்தியக் கலைஞர்கள் வீணையை மீட்டி பெருமை பெற்றுள்ள னர். அவர்களுள் திருமதி. கமலா கிருஷ்ணமூர்த்தி, பிரம்மஸ்ரீ ம.சோம சுந்தர சர்மா, மாலினி ஸ்ரீனிவாசன், குமுதா, நந்தினி சிறப்பானவர்கள். மேலும் வீணை வாத்தியத்தின் துறை போந்த வீணை வித்துவான்களாகச் சாதனை கள் படைக்க வேண்டும் என ரசிகர் எதிர்பார்க்கின்றனர். மென்ட லின், கிளாரி னெட் வாத்தியக் கலைஞர்கள் ஒரு சிலர் தற்பொழுது எம் மண்ணில் சுடர்விட்டு வருகின்றனர். அவர்களுள் மென்டலின் சிவகுமார் குறிப்பிடத் தக்க சிறந்த கலைஞர். கிளாரினெட் சசோதரர்கள் புல்லாங்குழல் வாத்திய இசையில் பிரம்மஸ்ரீ மூர்த்தி ஐயர்,நமசிவாயம், நக்கீரன், ப.கோகு லன் ஆகியோர் சிறப்பாக வாசித் தமை குறிப்பிடத்தக்கது.

திரு. R.V.செல்வராஜா கிளாரினெட் கலைஞர், வில்லிசைக் கலை ஞராக கலாவிநோதன் கணபதிப்பிள்ளை (சின்ன மணி) மிகவும் வில்லிசைக் கலைஞராகப் பிரபல்யம் பெற்றவர். அவர் எமது நாட்டில் மட்டு மல்ல பல வெளிநாடுகளிலும் வில்லிசைப்பாட்டு வாசித்து பாடி பெரும் புகழ் அடைந்திருந்தமை எமக்கு நல்ல பெருமை ஆகும். அத்தோடு நாயன்மார்க் கட்டு ஸ்ரீதேவி, திருப்பூங்குடி ஆறுமுகம் இராசையா, உடப்பூர் சோமாஸ் கந்தா முதலான வில்லிசைக் கலைஞர்களும் எம் மண்ணில் வில்லிசையி னைப் பரப்பிய அறிஞர்கள்.

கதாப்பிரசங்கத்தில் எமது மண்ணில் மிகவும் பெருமை மிக்கவராக மக் களால் மதிக்கப்பட்டவர் நல்லை ஆதீன குரு முதல்வராக ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத பராமாச்சாரிய சுவாமிகள்- முன்னர் மக்களிடையே பிரபல்ய மாகிய வர். சி.எஸ்.எஸ்.மணிபாகவதர் கதாப்பிரசங்கத்தினை முதன் முதல் எம் மக்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமகனாவார். நீண்ட காலமாகப் கதாப்

பிரசங்கத்தின் மூலம் எம் மக்களுக்கு இராமாயணம், பெரிய புராணம், திரு விளையாடல் புராணம் முதலான கதைகளைக் கூறி நெறிப்படுத்தியவர். இசையுடன் கதாப்பிரசங்கம் செய்யும் பெருமை மிக்க கலைஞர் மணி பாக வதர். தொடர்ச்சியாக கதாப்பிரசங்கத்தினை கோவில் உற்சவ காலங் களில் நிகழ்த்தி மக்களின் பாராட்டுக்களைப் பெற்ற கலைஞராவார். இவர் மூலம் பல கதாப்பிரசங்க கலைஞர்கள் உருவாகியுள்ளனர். அவர்களுள் சுழிபுரம் சிவசண்முகமூர்த்தி, திரு கணேசசுந்தரம், உடுவில் எம்.எஸ். ஸ்ரீ தயாபரன், பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்த சர்மா ஆகிய பிரசங்க கலைஞர்கள் வெளி வந்தனர்.அளவெட்டி அருட்கவி வினாசித்தம்பி அவர்கள் சிறந்த கதாப்பிர சங்க கலைஞராவாார்.

எமது நாட்டில் பல் இளம் கர்நாடக பாடகர்கள், பக்திப் பாடகர்கள், பஜன் பாடகர்கள், மெல்லிசை கீத பாடகர்கள் எனப் பல பாடகர்கள் மிகவும் இனி மையாக இளம் ரசிக உள்ளங்களைக் கவரும் வண்ணம் பாடி மக்களை மகிழ்விப்பதனைக் காண்கின்றோம். இவ்வாறாக மெல்லிசை பாடும் பற்பல கோஷ்டிகள் எமது மண்ணில் வாழ்ந்து பெருமை சேர்த்துள்ளனர். அவர் களுள் கண்ணன் கோஷ்டி, சாந்தன் இசைக்குழு, ராஜன் இசைக்குழு பண் இசைப்பாடகர்களாக இராஜசேகரன், திருஞானசம்பந்தர், M.V.N நவரெத் தினம் முதலான கலைஞர்கள் மூலம் எமது சங்கீதம் வளர்ந் துள்ளது. சினி மாவில் நல்ல சங்கீதப் பாடல்கள் நிலைத்து நிற்கின்றன. மேலும் தற்காலத் தில் இந்தியத் தொலைக்காட்சிகள் சங்கீதத்தினை வளர்ப் பதற்கு சங்கீத விருதுகள் வழங்கி இளம் சங்கீத கலைஞர்களை உருவாக்க பல நிகழ்ச் சிகள் மூலம் பெருமை சேர்த்து வருகின்றன. இந்நிகழ்வுகளை எம் மக்கள் பார்ப்பதன் மூலம் தமது சங்கீத அறிவினை வளர்த்துக் கொள்கின்றார்கள். உதாரணமாக "சுப்பர் சிங்கர்",ராஜகீதம் போன்ற நிகழ்ச்சிகள் பல இளம் பாடகர்கள் எமது நாட்டிலும் பெருகி வருவதற்கு துணைபுரிவது வரவேற்க வேண்டிய விடயமாகும். எமது நாட்டின் யாழ்ப் பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இசைக்கலையினை வளர்த்து தொண்டாற்றும் பல கலை ஞர்கள் உள்ளனர்.

-10-



# பரத நாட்டியக் கலைஞர்கள்

பரதக்கலை என்பது தென்னிந்தியாவிற் குரிய சிறப்பாக தமிழ் நாட்டிற் குரிய நடனமாகும். மிகத் தொன்மை வாய்ந்ததும் பல நாடுகளில் பிரபல் யமான இந்தக் கலை பரத முனிவரால் உருவாக்கப்பட்டது. அதனாலேயே "பரதம்" என்ற பெயர் வந்ததாகவும் கூறுவர். மேலும் பரதம் என்ற சொல் -ப- பாவம், ர-ராகம், த - தாளம் என்ற சொல்லிலிருந்து வந்தாகவும் அறி யப்படுகிறது. இங்கு பாவம் உணர்ச்சியையும், ராகம் - இசையையும் குறிப்பது டன் தாளம் சேர்ந்த நடனம் "பரத நாட்டியம்" ஆகும். உடல் அசைவுகளும் கைமுத்திரைகளையும் அடவு கள் சேர்ந்தது ஜதி எனப்படும்.

பரதநாட்டியம் பயிற்றுவிப்பதில் பல்வேறு பாணிகள் உள்ளன. பந்த நல்லூர் பாணி, வழு வூர் பாணி, மைசூர் பாணி, காஞ்சிபுரம் பாணி என்பனவாகும். இக்கலையின் ஆசிரியர்களாக வழுவூர் ராமையாபிள்ளை திருவளாப்புத்தூர், சுவாமிநாத பிள்ளை, தனஞ்சயன் அடையார் லட்சு மணன், கலாநிதி நாராயணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். பரத முனிவரால்

முதன் முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதால் இது பரத நாட்டியம் என அழைப்பட்டதாகவும் கூறுவர்.

இன்று தமிழர்கள் எங்கெல்லாம் கிளை விட்டிருக்கிறார்களோ அங் கெல்லாம் பரதநாட்டியம் வேரூன்றி விழுதுவிட்டு மிகப் பெரும் வளர்ச்சி அடைந்து புதிய பரிணாமம் அடைந்துள்ளது. இந்திய நாட்டிலே பரத நாட் டியம் பயின்ற பல் ஆயிரக்கணக்கான கலைஞர்கள் உள்ளனர். பரத நாட்டியக் கலைஞர்களில் மிகவும் புகழ்பெற்ற பாண்டித்தியம் பெற்ற பல முன்மை கலைஞர்கள் இந்தியாவில் பெரும் புகழுடன் வாழ்கின்றனர். பத்மபுஷன் பத்மா சுப்பிரமணியம் பரதக்கலை நாட்டியத்தில் தலை சிறந்த வித்துவானாக இன்று போற்றப்படுகின்றார்.

எமது நாட்டிலிருந்து பலர் தமிழ்நாடு சென்ற அங்கு பல கல்லூரிகளிலும் பரத நாட்டியம் முறையாகப் பயின்று எமது நாட்டில் அரங்கேற்றம் செய்து பின்னர் அதனை பல இளம் கலைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து வளர்த்து வருவதும், எமது நாட்டிலுள்ள பரத நாட்டிய ஆசியரிகள் பல இளம் பரத நாட் டியம் பயிலும் குழந்தைகளுக்கு குருகுல முறையில் முறையாக பயிற்சி கொடுத்து வளர்த்து அரங்கேற்றங்கள் பல நிகழ்வதனை நாம் காண்கின் றோம். அரங்கேற்றம் என்பது முடிவல்ல ஆரம்பமே ஆகும். மென்மேலும் தொடர்ந்து நடனத்தின் கலை நுணுக்கங்களைக் கற்று வளர்ச்சி அடைய முயல வேண்டும். ஓர் சில பரதக்கலை பயின்றவர்கள் தவிர பெரும்பாலான பரதக்கலை பயிலும் கலைஞர்கள் தமது அரங்கேற்றம் சிறப்பாக நடாத்தி பாராட்டுக்கள் பெற்ற பின்னர் பல்வேறு காரணங்களின் நிமித்தம் தாம் பயின்ற பரத நாட்டியத்தினைக் கைவிட்டுவிடுகின்றனர். பெரும்பாலான பெற்றோர்கள் பரதக்கலையினை நம் குழந்தைகளுக்குப் பயிற்றுவிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

எமது நாட்டில் பரதநாட்டியம் பயின்ற பல கலைஞர்கள் பல மாண வர்களுக்கு பரத நாட்டியத்தினைப் பயிற்றுவிக்கின்றனர். அவர்கள் பல நட னக் கலா நிலையங்களை நிறுவி அதன் மூலம் பல இளம் பிள்ளைகளுக்கு நடனக்கலையினைச் சிறப்பாகப் பயிற்றுவித்து அரங்கேற்றங்கள் நாட்டின்

பல்வேறு இடங்களிலும் இடம்பெற்று வருவது சிறப்புக்குரியது. எமது நாட்டில் பரத நாட்டியக் கலையை வளர்ப்பதற்கு அருந்தொண்டாற்றிய கலைஞர்களாக.

01) திரு. சுப்பையா மாஸ்டர்
02) திருமதி . சாந்தினி சிவனேசன்
03) திருமதி. ஞானமணி செல்லையா
04) திரிபுரசுந்தரி குமாரசாமி
05) கிரிசாந்தி - இரவீந்திரா
06) திருமதி. சீதாலட்சமி பிரபாகரசர்மா
07) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்
09) திருமதி. வாசுகி சண்முகம்பிள்ளை
10) லீலா சத்தியலிங்கம்
11) வேல் ஆனந்தன்
12) திருமதி. பாலினி கண்ணதாசன்
13) திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம்
14) திருமதி நந்தினி சிவராஜன்
15) திருமதி வசந்தி குஞ்சிதபாதம்
16) திருமதி வாசுகி முகுந்தன்
17) உரும்பிராய் பத்மினி
18) திருமதி லீலா ஆறுமுகையா
19) சாந்தா பொன்னுத்துரை
20) கமலா ஜோன்பிள்ளை
21) வியலட்சுமி சண்முகம்பிள்ளை
22) V.K.நல்லையா
23) யசோதரா விவேகானந்தன்
24) திருமதி ரேணுகா துஸ்யந்தன்

முதலான கலைஞர்கள் சிறப்புக்குரியவர்கள்.

-11-



# தமிழ்நாட்டில் நாதஸ்வர வாத்தியம்

நாதஸ்வரம் மங்கள நிகழ்வுகளில் விழாக்களின் ஆரம்ப நிகழ்வுகளில் எல்லாம் சிறப்பிடம் பெறுகின்றது. வளத்துடனும், வழி பாட்டுடனும் இணைந்த மங்கள வாத்தியம் நாதஸ்வரம். தவில் ஆகும். குறிப்பாக கல் யாண வைபவங்கள் ஏனைய மங்களகரமான நிகழ்வுகள், கும்பாபிஷேக விழாக்கள், உற்சவ காலங்கள் முதலான பல்வேறு விழாக்களின் போது நாதஸ்வர, தவில் வாத்தியம் முக்கிய மானதாகப் பேணப்படுகிறது. இவை மங்கள வாத்தியம் எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. மங்கள இடங்களில் நாதஸ்வர ஓசை இறை இன்பம் தரும். நாதஸ்வர இசை யாவரையும் மகிழ் வித்து சந்தோஷப்படுத்தும் வாத்தியமா கும். இந்தியாவில் பல நாதஸ்வர. தவில் வாத் தியக் கலைஞர்கள் மிகவும் புகழ் பெற்று வாசிக் கின்றமையை நாம் காண்கின்றோம். அங்கு நாதஸ்வர நிகழ்வு பல மணி நேரம் வாசிக் கின்ற தன்மையும் இசை விழாக்களில் நாதஸ் வர வாத்திய இசை நிகழ் வினை பல்லாயிரம்

ரசிகர்கள் சூழ்ந்து பார்த்து ரசித்து மகிழ்கின்றமையும் நாம் காண்கின்ற காட்சிகளாகும். திருவையாறு தியாகராஜ மகோற்சவ தினங்களில் பல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் தறாது பங்கு கொண்டு ஓர் சில மணி நேரமாவது வாசிக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டு வாசிப்பனவும் நாம் பார்த்த நிகழ்வுகளாகும்.

இந்திய நாதஸ்வர கலைஞர்களில் நாதஸ்வர மேதைகளான திரு வாரூர் ரி. என். இராஜரெத்தினம்பிள்ளை முதன்மை பெற்ற வித்தகராவார். அவர் வாசிக்கும் தன்மை வெகுபிரமாதமானதாகும். உள்ளத்தினைக் கவர்ந்துவிடும். தோடிராகம் அவரது வாசிப்பின் சிறப்பானது. அதனை யாவரும் மெய் மறந்து கேட்டு மகிழ்வர். கார் குறிச்சி பி.அருணாசலம் நாதஸ் வரக் கலைஞர் சிங்கார வேலவன் புகழ் பெற்றவர் யாவரும் அறிந்த நாதஸ் வர கலைஞர். இவரும் தொடர்ச்சியாக நாதஸ்வர வாத்தியம் வாசித்து மக்களை ரசிகர்களைக் கவர்ந்த மாபெரும் மேதை.

**நாமக்கிரிப் பேட்டை கிருஸ்ணன்:-**

இவரின் நாதஸ்வர வாசிப்பு தனிக்கவர்ச்சி மிக்கது. ஏதோ ஓர் வித்தி யாச மான நாத இசை இவரின் வாசிப்பில் காணப்படும். ஷேக் சின்ன மௌலானா சாகிப் அவரின் நாதஸ்வர கானம் கம்பீரமான ஒலியைக் கொண்டது. நீண்ட நேரம் ஆலாபனை வெகு விஸ்தாரமாக வாசிப்பதும் அவருடன் இணைந்து வாசிக்கும் ஷேக் கசன் சாகிப் அவர்களின் வாத்தியம் அவரது இசையினை மேலும் மெருகூட்டி இணைந்து அருமையாக வாசிப் பதும் ரசிகர்களால் பாராட்டப்பட்டவை. மதுரை சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்களின் நாதஸ்வர கானம் இணைந்து சேர்ந்து வெகு அற்புதமாக வாசிப்பதும் மிக இனிமை வாய்ந்தன.

01) இஞ்சிக்குடி சகோதரர்கள்
02) வேதார்ணியம் வேதமூர்த்தி
03) திருவெண்காடு சுப்பிரமணியம்பிள்ளை
04) செம்பொனார் கோவில் சகோதரர்கள்


05) குழிக்கரை பிச்சையப்பா
06) திருவீழிமிழலை சகோதரர்கள்
07) மதுரை பொன்னுத்தாய்
08) மாம்பலம் சகோதரர்கள்
09) திருவிடை மருதூர் பி.எஸ்.வீரசாமிப்பிள்ளை
10) மாம்பலம் எம்.கே.எஸ்.சிவா
11) கீரனூர் சகோதரர்கள்
12) திருவிடை மருதூர் பி.எஸ் ராஜா
13) ஷேக் மெக்யூப் சுஷ்கானி

முதலான நாதஸ்வரக் கலைஞர்கள் தமக்கென தனியான முத்திரை பதித்த பெரும் மேதைகளாவர். பொதுவாக இக்கலைஞர்களின் நாதஸ்வர இசையைக் கேட்டவுடன் ஆழ்ந்த அனுபவமுடைய இசை ரசிகர்கள் உட னடியாக இது யாருடைய நாதஸ்வர இசை என சரியாகக் கூறிவிடும் பெரு மைகள் அவர்களின் வாசிப்பில் தெரியவரும் பெருமைகளாகும்.

**இந்திய தவில் மேதைகள் பலர், அவர்களுள்**

01) நாச்சியார் கோவில் ராகவபிள்ளை
02) ஏ.கலியமூர்த்தி
03) அரித்துவார மங்கலம் பழனிவேல்
04) வலங்கைமான் சண்முகம்
05) நீடா மங்கலம் சண்முக வடிவேல்
06) வலையப்பட்டி சுப்பிரமணியம்

முதலான தவில் வித்துவான்கள் சிறப்பானவர்கள். அவர்களது தவில் வாசிப்பு அதன் நாத ஒலி என்பன மிகவும் அற்புதமானவை, புகழ் பெற்ற தவில் கலைஞர்களாவர்.



## -12-



# எம் மண்ணில் நாதஸ்வர தவில் கலைஞர்கள்

**பல** வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யம் மிக்க சிறந்த நாதஸ்வர, தவில் கலைஞர்கள் பலர் வாழ்ந்தனர். இவர்கள் பலர் இந்தியா சென்று அங்கு பயிற்சிகள் பெற்று பட்டங்கள் பெற்று எமது நாட்டிலே நாதஸ்வர, தவில் கலைஞர்களாக பெருமை பெற்றவர்கள். ஓர் சில நாதஸ்வர, தவில் கலைஞர்கள் இந்திய நாதஸ்வர தவில் கலைஞர்களுடன் போட்டி போட்டு சிறப்பாக வாசித்து பெருமை அடைந்தவர்கள். தற்காலத்தில் எமது நாட்டிலே இத்தகைய தரம் வாய்ந்த நாதஸ்வர, தவில் கலைஞர்கள் மிகவும் அருகிக் காணப்படுகின்றனர். அதற்கு எமது நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளும் காரணமாகும். முன்னைய காலம் போல வாத்தியம் வாசிக்கும் சந்தர்ப்பங்களும் குறைவாகும், அதனை ரசிப்போர் கூட்டமும் குறைவாகவும் உள்ளமையும் காரணமாகும்.

**எம் நாட்டின் நாதஸ்வர வித்தவான்கள் வரிசையில்**

01) கோண்டாவில் எம்.பி.பாலகிருஸ்ணன்
02) அளவெட்டி என்.கே.பத்மநாதன்
03) இணுவில் கோவிந்தசாமி
04) அளவெட்டி பாலகிருஸ்ணன்,
05) இணுவில் கே.ஆர்.சுந்தரமூர்த்தி
06) சாவகச்சேரி பஞ்சாபிகேசன்
07) வண்ணை அப்புலிங்கம்
08) அளவெட்டி சிதம்பரநாதன்
09) அளவெட்டி கேதீஸ்வரன்
10) சாவகச்சேரி நாகேந்திரன்
11) நல்லூர் பி.ரஜீந்திரன்

12) கோண்டாவில் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள்,

14) கோண்டாவில் கே.சிவதாஸ்

15) இணுவில் இரத்தினகுமார் (மார்க்கையா)

16) வழக்கம்பரை கே.சிவகுமார், மு.நாகதீபன்

ஆகிய நாதஸ்வர வித்துவான்கள் மிகவும் பிரபல்யம் மிக்க சிறந்த நாதஸ்வர கலைஞர்களாவர். மேலும்

01) வண்ணை சண்முகநாதன்

02) வண்ணை பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை

03) க. அப்பையா பிள்ளை

04) மாவிட்டபுரம் இராசா

05) நல்லூர் பிச்சையப்பா

06) இணுவில் குகன்

ஆகிய கலைஞர்களும் சிறப்பாக விளங்கியவர்கள். இவர்கள் எம் மண்ணில் தம் கம்பீரமான இனிய நாதஸ்வர வாசிப்பின் மூலம் எம் மக்களைக் கவர்ந்த பெருமைமிக்க கலைஞர்களாவர். இவர்கள் பலரும் தம் வித்துவத் தன்மையினை வெளிக்காட்டி பட்டங்கள் பல பெற்று பாராட்டும் பெற்றவர்கள். மேலும் பல நாதஸ்வர வாத்தியக் கலைஞர்கள் எமது மண் ணின் பல பாகங்களிலும் இசை பரப்பி வருகின்றனர். அவர்கள் பற்றிய விபரங்கள் எம்மால் தரமுடியாமை வருத்தமாகின்றது. அவர்களையும் பாராட்டுகின்றோம்.

தவில் வாத்தியத்தில் மிகவும் சிறப்பு மிக்க வித்துவான்களாக தவில் மேதாவி தெட்சணாமூர்த்தி, என். ஆர்.சின்னராசா, நாச்சிமார் கோயில் கணேசன், இணுவில் நித்தியானந் தன், கைதடி பழனி, அளவெட்டி குமர குரு ஆகிய புகழ் மிக்க சிறந்த மேதைகளின் காலம் மிகவும் சிறப் பான கால மாகும். அவர்கள் யாவரும் சேர்ந்து தவில் கச்சேரி செய்யும் அழகு மிகவும் அற்புதம் வாய்ந்தது. அளவெட்டி உதயசங்கர், வண் ணார்பண்ணை பழனிமலை, வண்ணார்பண்ணை கறுப்பையா, குகன், இணுவில் சுதாக ரன், இணுவில் ரவி, காரைநகர் கணேஸ், இணுவில் ராமதாஸ், நந்தன் குழு, நல்லூர் மி.எஸ்.செந்தில்நாதன், மு.புண்ணியமூர்த்தி, முருகானந்தம், ஆகியோர் சிறந்த தவில் வித்து வான்கள்.


இன்னும் பல சிறந்த தவில் வித்துவான்கள் பலரும் தம் கைவிரல் கை வண்ணத்தில் தவிலை பேச வைத்த பெரும் கலைஞர்களாவர். இவர்கள் கலந்து கொண்டு கோஸ்டியாகவும், சோடிகளாகவும் வாசிக்கின்ற இசை நிகழ்வுகளில் பல்லாயிரம் ரசிக கூட்டம் கூடி பார்த்து மகிழும் காட்சிகள் பிரமாதமாகும். கோவில் உற்சவ காலங்களில் மேடை போடப்பட்டு இக் கலைஞர்களின் நாதஸ்வர கான நிகழ்வுகளைக் காண மக்கள் கூடி மகிழ்வர். பல மணி நேரங்கள் இவர்களது கான இசை நடைபெறுவதும் மிகுந்த சந்தோசகரமான காலங்களாகும். பல கோவில்களில் உற்சவ காலங்களில் போட்டி போட்டு விழாக்காரர்கள் இக் கலைஞர்களின் இசைக் கச்சேரியினை ஒழுங்குபடுத்துவதனையும் அவை இரவு முதல் விடியும் வரை நடை பெற்றதனையும் நாம் கண்டுள்ளோம். நாதஸ்வர கலைஞர்களும் ராக ஆலாபனை கீர்த்தனைகள், ராகம், தானம், பல்லவி முதலாக சுரங்கள் சங்கதிகள் நிரவல்கள் முதலான இசை நுட்பங்களை வெளிப்படுத்தி மகுடி, தில்லானா சினிமா மெட்டுக்கள் என நாதஸ்வர இசை நீண்டு செல்வதைக் கண்டுள்ளோம். இறுதியில் தவில் சமா, தவில் கச்சேரி ரசிகர்களை மிகவும் உற்சாகப்படுத்தும் நிகழ்வாக அமையும். பல வகைகளில் தமது வாசிப்பின் தன்மைகளைக் காண்பித்து பாராட்டுக்கள் பெறுவர். இந்நிகழ்வில் தவில் வாசிப்பு ஓர் போட்டியாக அமைந்து ரசிகர்கள் மிகவும் உற்சாகமாக தாளம் போட்டு, ரசித்து மகிழும் காட்சிகள் மிகவும் சிறப் பானது. தவில் கலைஞர்கள் என்.ஆர்.சின்னராசா, குமரகுரு, உதயசங்கர் ஆகியோர் இணைந்து வாசிக்கும் அற்புதங்கள் நிறைந்த நிகழ்வு ரசிகர்கள் மெய்மறந்து ரசிப்பனவாகும்.

நாதஸ்வர வித்துவான் என்.கே.பத்மநாதன் அவர்களின் வாசிப்பு கவர்ச் சிகரமானது. பல காலங்களாக எல்லோராலும் பாராட்டப்பெற்ற இணை சகோதரர்கள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி அவர்களின் நாதஸ்வர கானம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவர்கள் இருவரும் இணைந்து ராக ஆலாபனை ராகமாலிகை, பலவித அபூர்வ சங்கதிகள் உயர்ந்த தொனியில் விறுவிறுப் புடன் வாசிப்பது இவர்களின் தனிப்பட்ட கவர்ச்சிகரமான சிறப் புக்கள் கோண்டாவில் பாலகிருஷ்ணன், கோவிந்தசாமி, பஞ்சாபிகேசன், சுந்தர மூர்த்தி, சிதம்பரநாதன், ரஜீந்திரன், அளவெட்டி பாலகிருஷ்ணன் முதலான நாதஸ்வர வித்துவான்கள் மக்களினால் பெரிதும் பாராட்டுப் பெற்று வரும் கலைஞர்களாவர்.

மேலும் தவில் வாத்திய நாதஸ்வர வாத்திய கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| 01) திரு. ந.கணேசமூர்த்தி | | |
| 02) மு.ஜெயானந்தன் | | |
| 03) வி. கண்ணன் | - | தாவடி |
| 04) செல்வகுமார் | - | கல்வியன்காடு |
| 05) கு.நாகதீபன் | - | யாழ்ப்பாணம் |
| 06) இராமகிருஸ்ணன் | - | கோண்டாவில் |
| 07) க. சச்சிதானந்தன் | - | இணுவில் |
| 08) V.A. இராமையா | - | இணுவில் |
| 09) மு. ஆனந்தா | - | நல்லூர் |
| 10) ச.முருகையா | - | கல்வியன்காடு |
| 11) பொ.கணேசு | - | கோண்டாவில் |
| 12) ந.யோகநாதன் | - | மாவிட்டபுரம் |
| 13) வே. சிறீதரன் | - | அளவெட்டி |
| 14) P.முருகதாஸ் | - | கல்வியன்காடு |
| 15) சி.இரவீந்திரன் | - | இணுவில் |
| 16) அ.முருகானந்தம் | - | உரும்பிராய் |
| 17) இ.சிவகுமார் | - | தொல்புரம் |
| 18) பா.சபேசன் | - | நாச்சிமார் கோவில் |
| 19) சு.செந்தில்நாதன் | - | நல்லூர் |
| 20) M. தில்லைநாதன் | - | சித்தன்கேணி |
| 21) K. மோகனசுந்தரம் | - | அளவெட்டி |
| 22) N. ஜெயராமன் | - | பண்டத்தரிப்பு |
| 23) S.உலகநாதன் | - | சித்தன்கேணி |
| 24) சு.இராமதாஸ் | - | இணுவில் |
| 25) S.P.M திருநாவுக்கரசு | - | அளவெட்டி |
| 26) T. இராமு | - | தாவடி |
| 27) M.P. நடராஜசுந்தரம் | - | யாழ்ப்பாணம் |
| 28) D. இராமதாஸ் | - | இணுவில் |
| 29) .P.S இராஜகோபால் | - | நாச்சிமார் கோவில் |
| 30) கோவிந்தன் | - | இணுவில் |
| 31) சு.மந்திரமூர்த்தி | - | யாழ்ப்பாணம் |
| 32) விமல் | - | யாழ்ப்பாணம் |

-13-



# இசைக் கலைஞர்கள் சிலரின் சிறப்புக்கள்

## இசை மாமேதை பாரத ரத்னா திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி:-

**பா**ரத ரத்னா எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் இசைச் சக்கரவர்த்தி ஆவார். அவர் மக்கள் மனதில் நிறைந்து நிற்கிறார். இசை உலகில் மிகப் புகழ் பெற்ற பாடகி. ஐ.நா. சபையில் பாடிய ஒரே பாடகி அவர். இசை உலகில் இமயத்தைத் தொட்டு பெருமை அடைகின்றார்.

கர்நாடக சங்கீதத்தின் மணி மகுடத்தில் விலை மதிப்பற்ற மாணிக்க கல் ஆவார். அனுதினமும் உலகைத் தனது சுப்பிரபாதத்தால் துயில் எழுப்பும் இசைக்குயில் எம்.எஸ். ஆவார். விஷ்ணு சகஸ்ர நாமம், சுப்ரபாதம் போன்ற சுலோகங்களைத் தன் மந்திரக் குரலால் பாடி மெய் சிலிர்க்க வைத்தவர் " காற்றினிலே வரும் கீதம்", "குறையொன்றுமில்லை" போன்ற காலத்தால் அழியாத பாடல்களால் அனைத்துத் தரப்பு மக்களையும் கவர்ந்தவர். பக்தியும் பாவமும் இணைந்த தனித்துவமான இசை மேதை ஆவார்.

## பத்ம பூஷன் டாக்டர் M.பாலமுரளி கிருஷ்ணா:-

கர்நாடக இசை மேதை, இசைப் பேரறிஞர், பத்ம பூஷன் டாக்டர் மங்க ளம் பள்ளி பாலமுரளி கிருஷ்ணா 1930 ஆம் ஆண்டு ஆந்திரா மாநிலத்தில் பிறந்தார். தமது 15ஆவது வயதில் மேளகர்த்தா ராகத்தில் 72 கீர்த்தனை களை வழங்கினார். இவர் பன்முக மேதை ஆவார். திரைப்படத் துறையில் பாலமுரளி கிருஷ்ணா கர்நாடக சங்கீதத்தைச் சினிமாவில் வெற்றிகரமாகப் பயன்படுத்தியவர். நல்ல குரல்வளம் மட்டுமல்ல பல மொழிகளில் சிறந்த உச்சரிப்புடன் அழகாகப் பாடும் வல்லமை பெற்றவர். உண்மையான கர் நாடக சங்கீதத்தை மக்கள் ரசனைக்கு எடுத்துச் சென்றவர்.

பத்மஸ்ரீ பத்மவிபூஷன் விருதுகள் அவருக்கு இந்திய அரசால் வழங்கப் பட்டது. சங்கீத கலாநிதி, இசைப் பேரறிஞர் விருது முதலான பல பட்டங்கள் பெற்றவர். இந்திய இசையை இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாட்டவர்கள் மத்தியிலும் கொண்டு சென்ற சங்கீத மேதை பாலமுரளி கிருஷ்ணா. இவரது இசைப் பணிகள் மகத்தானவை.

டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா இசை உலகில் தன் கம்பீர கானத்தால் யாவரையும் கட்டிப் போட்டு வைத்த மூத்த இசை அறிஞர் - பற்பல புது மைகள் செய்தவர். புதிய இராக முறைகளை உருவாக்கிய பெருமை உடை யவர். தில்லானாக்களில் சங்கதிகளைப் புகுத்தி புதுமைகள் செய்துள்ளார். 72 மேளகர்த்தாக்களை உருவாக்கியவர். இசை உலகில் உயரிய பல விருதுளைப் பெற்று சங்கீத சக்கரவர்த்தியாக விளங்கினார். அவரது குரல் வள ஞானமும், ஆய்வும் கண்டுபிடிப்புக்களும் அவருக்குப் பல பட்டங் களைக் கொடுத்துள்ளன. பத்மபூஷன், பத்மவிபூஷன், செவாலியே போன்ற பட்டங்களும், இரண்டுமுறை தேசிய விருதுகளும் பெற்றுள்ளார்.

**குன்னக்குடி வைத்தியநாதன் வயலின் மேதை:-**

குன்னக்குடி வைத்தியநாதன் தனது மயக்கும் வயலின் இசையால் மக்களைக் கொள்ளை கொண்டவர். ராகங்களில் புதிய முயற்சிகள் இசை வேள்வி நடாத்தி மழைபெற வாசித்தல், மக்களுக்குப் புரிந்த பாடல்கள் அனைத்தையும் வயலின் வாசித்தல் என்று தொடர்ந்து தமிழகத்தின் பாமர, பண்டித ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தவர். குன்னக்குடி வைத்திய நாதன் வயலின் வாத்தியம் மூலம் கர்நாடக சங்கீத பாடல்கள் மட்டுமன்றி மக்களுக்குப் பரீச்சயமான திரையிசைப் பாடல்களையும் வாசித்து ரசிகர் களின் உள்ளத்தைக் கவர்ந்தவர். இறைவனிடத்தில் ஆழ்ந்த பக்தி உடைய குன்னக்குடி எண்ணற்ற பக்திப் பாடல்களுக்கு இசை அமைத்து பக்தி உணர்வைத் தூண்டியவர். - பக்தியை இசை மூலம் வெளியிடும் முயற்சி யில் பெரும் வெற்றி கண்டவர்.

இவரது வயலின் பேசும், பாடும். அதில் இவர் செய்யாத வித்தைகள் இல்லை. தன் வயலின் இசையும் பாண்டித்தியமும் சாதாரண மக்களிடம் போய்ச் சேர வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டிய மேதை. பக்தி

இசைக்கு பெருந்தொண்டாற்றியவர். கர்நாடக இசைக் கச்சேரிகளில் பக்க வாத்தியமாக இருந்த வயலினுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை வைத்து கச்சே ரிகள் நடாத்தி அதை முன்னிலைப்படுத்தியவர் குன்னக்குடி. வயலினுக்கு பக்கவாத்தியமாக மிருதங்கம் இருந்த நிலையில் தவிலுடன் வயலின் கச்சேரிகளை இணைத்து நடாத்திய கச்சேரிகள் மக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளன. கர்நாடக இசையின் நுணுக்கங்க ளைத் தெரிந்த ரசிகர்களின் வரவேற்பை பெற்றதைவிட தன் வயலின் கச்சேரிகள் மூலம் பாமர மக்களிடம் அமோக வரவேற்பைப் பெற்றவராவார்.

## இசைக் கலைஞர்கள்

**திலக நாயகம் போல்:**

இவர் சங்கீத ஆசிரியராகவும், கல்விப் பணிப்பாளராகவும் சேவை புரிந்தவர். மிகவும் தரம் மிக்க சங்கீத வித்துவானாவார். பல சங்கீத கீர்த்த னைகளை இயற்றிப் பாடுவதும், பற்பல புதுமைகள் செய்து சுரங்களை மிகவும் அற்புதமாக அமைத்துப் பலரையும் கவரத்தக்க விதமாக பாடுவதும் இவரது சிறப்பு. பல கலைஞர்களைத் தோற்றுவித்த பெருமையும் இவருக் குண்டு. இவரது கச்சேரி நிகழும் காலங்களில் அதிகளவு இசை ரசிகர்கள் கூடி மகிழ்வர்.

**ஏ.கே. கருணாகரன்:**

ஏ.கே. கருணாகரன் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இராமநாதன் இசைக் கல்லூரியில் பயிற்சி பெற்று சங்கீத ரத்னா எனும் பட் டம் பெற்றவர். பிரபல இசை மேதை மகாராஜபுரம் சந்தானம் அதிபராக இருந்த அந்தக் காலத்தில் அவருடன் சேர்ந்து பாடி பயிற்சிகள் பெற்று பட்டம் பெற்றவர்.

இலங்கை வானொலி, சென்னை அரசு இசைக் கல்லூரியின் சங்கீத வித்தவான் பட்டம் பெற்றவர். இராமநாதன் நுண்கலைப்பீடம், சிங்கப்பூர். இந்தியா நுண்கலைக் கழகம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்த இசை நடனக் கல்லூரி எனப் பல பணிகள் விரிவுரைகள் புரிந்தவர்.

ஏ.கே. கருணாகரன் இந்தியாவிலும் சங்கீதம் பயின்று யாழ்.நுண்

கலைப் பீடத்தில் விரிவுரையாளராக இருந்து பின்னர் சிங்கப்பூர் சென்று அங்கும் விரிவுரையாளராகப் பெரும் புகழ் பெற்று பற்பல கலைஞர்களை உரு வாக்கிய சிறப்புப் பெற்றவர். இன்று கொழும்பில் "ஆலாபனா" எனும் பெயரில் சங்கீத சபை உருவாக்கி, வெளி நாடுகளிலிருந்து பல கலைஞர் களை வர வழைத்து அவர்கள் மூலம் எமது இளங்கலைஞர்கள் பயன்பெற வும், சங்கீத ரசிகர்கள் கண்டு மகிழவும் சேவை புரிகின்றனர். ஆலாபனா மூலம் இசைத்துறைக்கு ஆற்றும் பணிகள் பல. நல்ல சங்கீத அனுபவம் மிக்க கலைஞர் தனது கம்பீரக் குரல் நெளிந்து வளைந்து உருக மயங்க வைப்பார். இவர் பாடும் பொழுது அதனை ரசிகர்கள் ஆவலுடன் கேட்டு மகிழ்வர். தமது பிள்ளைகளையும் இசைத்துறையில் ஈடுபடுத்தி கலைஞர்க ளாக ஆக்கியுள்ளார்.

**வயலின் வித்துவான் இராதாகிருஷ்ணன்:**

இணுவில் கலைஞர்களில் தவில் வித்துவான் தெட்சணா மூர்த்தி, என். ஆர். சின்னராசா, கோவிந்தசாமி, வீரமணி ஐயர் போன்றோர் தனித்துவ மும் சிறப்பும் பெற்றார்களோ அவ்விதமான ஓர் உன்னதமான நிலையில் வயலின் வித்தவான் இராதாகிருஷ்ணனும் இருந்தவர். இராதாகிருஷ் ணனின் தகப்பனார் உருத்திராபதியும் ஓர் அற்புதமான வயலின் வித்து வான். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக இசைச் சாம்ராஜ்யம் நடத் திய இராதாகிருஷ்ணன்பல ஆயிரம் மேடைக் கச்சேரிகள் செய்தவர். இந்தி யாவில் இருந்து வந்த எந்தப் பிரபல்யமான இசை விற்பனர்களின் இசைக் கச்சேரிகளில் இராதாகிருஷ்னன் வயலின் வாசிப்பது வழக்கம். மாபெரும் இசை மேதைகளான சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை, தஞ்சாவூர் ரி.எம்.தியாகராஜன், எஸ். கல்யாணராமன், மதுரை சோமசுந்தரம் மகாரா ஜாபுரம் சந்தானம் போன்றோர் எமது நாட்டில் வந்து பாடியபொழுது அவர் களின் கச்சேரிகளுக்கு வயலின் வாசித்து மண்ணின் பெருமையை நிலை நாட்டியவர். அவர் தன்னை மாத்திரம் வளர்த்துக் கொள்ள வில்லை. தனது அடிச்சுவட்டில் தொடர் பணிபுரியத் தனது பிள்ளைகளையும், எண்ணற்ற பல வயலின் கலைஞர்களையும் உருவாக்கியுள்ளார்.

**அளவெட்டி கலாசூரி என்.கே பத்மநாதன் - நாதஸ்வரக் கலைஞர்**

யாழ்ப்பாணத்தில் நாதஸ்வரம் வாசித்த கலைஞர்களில் இலங்கை இந்திய, மலேசிய, சிங்கப்பூர் முதலான தேசங்களில் பிரபல்யம் பெற்ற ஓர் நாதஸ்வர மேதை அளடிவட்டி என்.கே. பத்மநாதன் என சொல்வதில் அசைக்க முடியாத உண்மை உள்ளது. அவர் நாதஸ்வர வாத்தியத்தில் வாசித்து அசத்திய கர்நாடக சங்கீதம் எல்லா மக்களையும் கவர்ந்துள்ளது. அவரது தந்தையார் கந்தசாமியும் ஓர் நாதஸ்வர கலைஞர். இசையால் மக்கள் மனதை வென்ற நாதஸ்வர கலைஞர் என்.கே.பத்மநாதன் ஆவார். அவர் தமது தந்தையாரையே குருவாகக் கொண்டு அதன் நுட்பங்களைக் கற்றுக் கொண்டு ஆரம்பித்த போதும் அவரிடம் பெற்ற பயிற்சியுடன் நிற்காது மேலும் பயில்வதற்காக யாழ்ப்பாணம் பி. திருநாவுக்கரசு பிள்ளையிடமும் நாதஸ்வர இசை பயிற்சி பெற்றார். வலிகாமம் வடக்கில் இருந்த கும்பிளா வளைப் பிள்ளையார் கோவிலில் நாதஸ்வர ஓசையினால் ஆண்டவனை அனுதினமும் ஆராதித்தவர்.

இவர் இசை வல்லாளர் குழுவை உருவாக்க எண்ணி நாதஸ்வரம் நன்றாக வாசித்த கோண்டாவில் பாலகிருஷ்ணனுடன், தவில் வாசிப்பில் திறமையுடன் இருந்த தெட்சணா மூர்த்தி, குமரகுரு முதலியவர்களையும் தம்முடன் இணைத்த ஓர் குழுவை அமைப்பதில் வெற்றி கண்டார். நாதஸ்வரக் கலையின் கலாமணி,இன்னிசை வேந்தன். கலாசூரி முதலிய பட்டங்கள் அவரின் அசாத்திய திறமைக்குக் கிடைக்கப் பெற்றன. நல்லூர் முருகன் கோவிலில் கலைஞராக ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாக்களில் நாதஸ்வரம் வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இவரின் நாதஸ்வர கலைத் திறன் திருவிழாவில் வாசிக்கும் பொழுது இசை ரசிகர்கள் அவரைச் சூழ்ந்து ரசிப்பதனைக் கண்டுள்ளோம்.

### இணுவில் என்.ஆர்.சின்னராசா:

யாழ்ப்பாணம் என்றாலே லயஞானமுடைய ரசிகர்கள் என்று தமிழ் நாட்டில் வியந்து கூறக் கூடிய அளவில் தவில் நாதம் பரப்பிக் கலை உலக வரலாற்றில் ஈழத்திற்குப் பெயர் தேடித் தந்த முதிர்ந்த தவில் கலைஞர்களுள்

ஒருவர் என்.ஆர்.சின்னராஜா. இவர் 1934 இல் வருடம் பிறந்தவர். இவருடைய சகோதரர்களான இருவர் நாதஸ்வரக் கலைஞர்கள் ஒருவர் என். ஆர். கோவிந்தசாமி மற்றொருவர் என்.ஆர்.சந்தானம், திரு.சின்னராஜா ஈழத்திலே பிரபல்யம் வாய்நத பல நாதஸ்வர வித்தவான்களுடன் வாசித்தும், இடையிடையே இந்தியாவின் தமிழ் நாட்டு நாதஸ்வரக் கலைஞர்களை ஈழத்திற்கு அழைத்தும், குழு அமைத்து மங் கள இசையை ஈழத்தின் பல பாகங்களிலும் நிகழ்த்திப் பெருமை தேடிக் கொண்டவர். இவரின் மூத்த புதல்வர் இரவீந்திரன், இளைய புதல்வர் சுதாகர் ஆகிய இருவரும் தந்தையிடமே தவில் பயின்ற தந்தை வழியிலே முன்னணித் தவில் வித்துவான்களாக தவில் கலைச்சேவை புரிந்து வருகிறார்கள்.

திரு.சின்னராஜா அவர்கள் தனது இளமைக் காலத்தில் தட்சணாமூர்த்தி, கணேசபிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம் போன்றவர்களுடன் சேர்ந்து, இந்தியாவின் பல பாகங்களிலும் தவில் கச்சேரிகளில் பங்கு கொண்டு ஈழத்திற்கு பெருமை தேடித் தந்துள்ளார். அதே போன்று குறிப்பிட்ட இந்தியக் கலைஞர்களையும் ஈழத்தில் பல ஆலயங்களுக்கம் அழைப்பதன் மூலம் தனித்தவில் சமா நிகழ்த்தி எல்லா மக்களையம் இசையுலகில் மயக்கி தனிச்சிறப்பினை உண்டு பண்ணினார். தவில் துறையில் பல மாணாக்கர்களை உருவாக்கியுள்ளார். இவர் பல கௌரவப்பட்டங்கள் பெற்றுளார்.

என். ஆர். சின்னராஜா அவர்களின் இயற்பெயர் சுந்தரமூர்த்தி - தலைசிறந்த குரு. தாள அலங்காரம் கற்பனை ஜோதி திரு. என். ஆர். சின்னராசா அவரது வாசிப்பு மிகவும் அற்புதமானது. பல மேடைகளில் இவர் ஏனைய பெரும் தவில் வித்துவான்களான நாச்சிமார் கோவில் கணேசன், கைதடி பழனி, அளவெட்டி குமரகுரு ஆகியோருடன் சேர்ந்து வாசித்து பெரும் புகழ் பெற்றவர். இணுவில் கந்தன் வாசலில் இருந்து கலையைக் காத்த பெருமான் - இவரது கைவிரல் பல அற்புத வித்தைகளை தவிலில் காட்டும் வல்லமை படைத்தவை.

**திரு. வி.தெட்சணாமூர்த்தி:- 1933-1975 லயஞான குபேர பூபதி:**

தவில் கலைஞர் யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி (1933 - 1975) தஞ்சாவூர், யாழ்ப்பாணத்துக்கும் தொடர்ந்து இசைப்பயணம் மேற்கொண்டு கலைஞர்களிடம் பயின்று உறவாடி தன் கலை மேதைமையால் இலங்கையையும், தமிழ் நாட்டையும் வசப்படுத்தியவர். 1960 களில் நீடாமங்கலம் சண்முகவடிவேல், திருவாளப்புத்தூர் கலியமூர்த்தி, அர்துவாரமங்கலம். பழனிவேல், தஞ்சை கோவிந்தராஜன், காருக்குறிச்சி, அருணாசலம், சேக்சின்ன மௌலானா, மதுரை சேதுராமன் ஆகிய தவில் மற்றும் நாதஸ்வரக் கலைஞர்களுடன் இணைந்து வாசித்து தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் பெரும் அலைகளை உருவாக்கியவர் தெட்சணாமூர்த்தி ஆவார். எப்படிப்பட்ட லய விஷேசங்களையும் எந்த தாளத்திலும் எந்த நேரத்திலும் வேண்டுமானாலும் வாசிக்கும் வல்லமை அவருக்கிருந்தது.

சிறுவயதிலே தட்சணா மூர்த்தியவர்களின் தவில் வாசிப்பு யாவரும் பிரமிக்கும் படியாதனதாகவும், நாத சுகமுள்ளதாகவும், லய வேலைப்பாடுகள் நிறைந்ததாகவும், இருந்தது. இது மட்டுமன்றி இந்தியப் பெருங்கலைஞரான நாச்சியார் கோவில் ராகவப்பிள்ளையிடம் மேலும் லயசம்பந்தமான நுணுக்கங்களைப் பயின்று அவருடன் சேர்ந்து தவில் வாசிக்கும் பேற்றையும் பெற்றார். தட்சணாமூர்த்தி அவர்களின் பிள்ளைகளுள் ஒருவரான உதயசங்கர் என்பவர் தந்தை வழியிலே தவிற் கலையில் ஈடுபாடு கொண்டு பயின்று இன்று தவில் வாசிப்பில் முன்னணிக் கலைஞராக விளங்குகின்றார்.

லயஞானத்தில் சிறந்த தட்சணாமூர்த்தி அவர்களுக்கு இந்திய நாதஸ்வரச் சக்கரவர்த்தியான திரவாடுதுறை ராஜரத்தினம்பிள்ளை அவர்களின் நினைவு விழாவில் தங்கத்தினாலான தவிற்கேடயம் 12.12.1968 இல் வழங்கப்பெற்றது. இவரது தவில் வாசிப்பின் பெருமையினால் யாழ்ப்பாணம் இன்றும், இந்தியாவின் கலைப் பாரம்பரியத்தையே மிஞ்சும் அளவுக்கு பெருமை பெற்றுள்ளது. "லயஞான குபேர பூபதி" என்ற பட்டம் அவருக்குக் கிடைத்த சிறப்பாகும்.

நாதஸ்வர இசைக்குத் தவில் வாத்தியம் மிகவும் துணையானது. தவில்

வாத்தியக் கலைஞர்கள் பலர் எமது நாட்டில் உலகப் புகழ்பெற்ற வித்து வான்களாக விளங்கியவர்கள். தவில் சக்கரவர்த்தி, தவில் மேதை எனப் போற்றப்படும் லயஞான குபேர, பூபதி, அளவையூர் தந்த திரு. தட்சணா மூர்த்தி அவர்களின் புகழ் அகில உலகம் எங்கும் பாராட்டப்பெற்ற பெரும் கலைஞர் ஆவார். இவரது தவிலின் நாதம் அவர் வாசிக்கும் கண கணப் பான ஓசை நயம் விறு விறுப்பு என்பன யாவும் இன்றும் நம் காது களில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

### திரு. கே. பி. குமரேசன், திரு. பி. எஸ். பாலமுருகன்:

சமீபகாலமாக இரு இளம் நாதஸ்வர வாத்தியக் கலைஞர்கள் எமது நாட்டிலும், சிங்கப்பூர், சிட்னி முதலான தேசங்களிலும் பெரும் வரவேற்புடன் பெருங்கலைஞர்களாகப் புகழ் பெற்று வருவது சிறப்பானது. பஞ்சமூர்த்தி யின் பதல்வரான நாதஸ்வர விநோதன் கே.பி.குமரேசன், பி.எஸ்.பால முருகன் ஆகிய இரு இளம் கலைஞர்கள் மக்களைக் கவர்ந்து இனிமை யாக வாசித்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. இருவரும் மக்கள் மன தைக் கவரும் வண்ணம் பல புதுமைகள் செய்து வருகின்றனர். மேலும் கெஞ்சிறக்சேரியினை பல வாத்தியங்களுடன் இணைந்து வாசித்துப் பெருமை பெற்று வருபவர்கள் குமரனும், பாலமுருகனுமாவார். எமது நாட் டில் சங்கீதக் கலைஞர்கள், இந்தியாவில் சங்கீத கலைஞர்கள் பெரும் சாதனை படைத்து பெரும் மகா மேதைகளாக உள்ளது போல இல்லாவிட் டாலும் ஒரளவு கலைஞர்கள் எமது நாட்டிலும் சங்கீதத் துறையில் தமது ஞானத்தினை வெளிப்படுத்தி வருவது மிகவும் பாராட்டத்தக்கவை. இவர் களுக்கு எம் ஆசிகள், வாழ்த்துக்கள்.

## எம் நாட்டின் இளங்கலைஞர்கள்

எமது நாட்டில் வளர்ந்து வரும் இளங்கலைஞர்கள் பலர் இவர்கள் பலர் கலா ரசிகர்களினால் நன்கு பாராட்டப்படுகின்றனர். இவர்களில் முன்னிலை வகிக்கும் சில கலைஞர்கள் நாம் அறியத்தக்க விதத்தில் நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் விடா முயற்சியும், நல்ல பயிற்சியும் பெற்று சிறந்து விளங்கு


கின்றனர். அவர்களுள் திரு.தவநாதன் றொபேட், திரு.ஆரூரன், திரு. ஸ்ரீ தர்சன் முதலான சங்கீத வித்துவான்கள் மிகவும் அற்புதமாக இனிய குரலில் பாடி ரசிக ஆர்வல உள்ளங்களை நன்கு கவர்ந்து பாடி வருவது மிகவும் பாராட்டத்தக்கவை. மேலும் வயலின் வாத்தியத்தில் வளர்ந்து வரும் இளங் கலைஞர்களாக ரசிக உள்ளங்களால் நன்கு மதிக்கப்பட்டு பாராட்டப் பெறும் சில கலைஞர்களாக திரு. கோபிதாஸ், திரு. குகபரன், திரு.ஏ. ஜெயராமன் திரு.ஏ.திபாகரன் முதலான வயலின் கலைஞர்கள் சிறப்பிடம் பெறு கின்றனர்.


மேலும் மிருதங்க வாத்திய இசையில் இளம் கலைஞர்களான திரு. க.கண்ணாசன், திரு.துரைராஜா, திரு.மகேந்திரன், திரு.க.கஜன் பிரம்மஸ்ரீ நா. சிவசுந்தரசர்மா,திரு.செந்தூரன்,திரு. ரா.மாதவன், பிரம்மஸ்ரீக.சுவாமி நாத சர்மா முதலான மிருதங்க வாத்திய இளங்கலைஞர்கள் ரசி கர்கள ினால் பாராட்டப் பெற்றுவரும் சிறந்த கலைஞர்களாவர். மேலும் பிரம்ம ஸ்ரீ க.சுவாமிநாத சர்மா தமது பிள்ளைகள் யாவரையும் இசைத் துறையில் ஈடுபடுத்தி அவர்கள் யாவரும் மிருதங்கம், வயலின் முதலான துறை களில் நல்லமுன்னேற்றம் பெற்றுவருவதும் பலராலும் பாராட்டப் பெறும் நிகழ்வாகும்.

மேலும் பல்வேறு வாத்தியங்களான நாதஸ்வரம், சக்சபொன். கிளாரினெட். மென்டலின், தவில், தபேலா, கஞ்சிரா, கடம் முதலான துறை களிலும் பல பல இளங்கலைஞர்கள் நமது நாட்டில் பிரபல்யம் பெற்று முன் னேற்றம் கண்டு மக்களினால், கலை ஆவர்வலர்களால் மதிக்கப்பட்டு பாராட்டப்பெறும் நிகழ்வும் மகிழ்ச்சி வாய்ந்தன.



# இலங்கைக் கலைஞர்கள்





சிதம்பரநாதன்
(மிருதங்கக் கலைஞர்)




பிரம்மஸ்ரீ சுவாமிநாத சர்மா
(மிருதங்கக் கலைஞர்)



நந்தன்
(தவில் வித்துவான்)



தெட்சணாமூர்த்தி
தவில் கலைஞர்)



பஞ்சமூர்த்தி குமரன்
(நாதஸ்வரக் கலைஞர்)



ஏ.எஸ்.ராமநாதன்
(மிருதங்கக் கலைஞர்)




கண்ணதாசன்
(மிருதங்கக் கலைஞர்)



ரெட்ண பிரபாகர சர்மா
(தபேலா கலைஞர்)



சதா வேல்மாறன்
(தபேலா கலைஞர்)



என்.மாதவன்
(மிருதங்கக் கலைஞர்)



ஏ.கே.கஜன்
(மிருதங்கக் கலைஞர்)




பிரம்மஸ்ரீ என். சிவசுந்தர சர்மா
(மிருதங்கக் கலைஞர்)



என்.ஆர்.சின்னராசா புதல்வர்கள்




எஸ்.செல்வரத்தினம்
(கடம் கலைஞர்)



கா.குகபரன்
(வயலின் கலைஞர்)



ஜெயராமன்
(வயலின் வித்துவான்)



எஸ்.கோபிதாஸ்
(வயலின் கலைஞர்)



என்.கே. பத்மநாதன்
(நாதஸ்வர வித்துவான்)



இரத்தினகுமார்
(மார்க்கையா)
(நாதஸ்வரக் கலைஞர்)



பி.எஸ். பாலமுருகன்
(நாதஸ்வரக கலைஞர்கள்)



09. குமரன் சிதம்பரநாதன்
(நாதஸ்வர கலைஞர்)



எஸ்.செந்தூரன்
(முகர்சிங்)




பொ.சுந்தரலிங்கம்
(சங்கீத வித்துவான்)




போல் திலகநாயகம்
(சங்கீத வித்துவான்)




ஏ.கே. கருணாகரன்
(சங்கீத வித்துவான்)



எஸ்.கணபதிப்பிள்ளை
(சங்கீத வித்துவான்)




பத்மலிங்கம்
(சங்கீத வித்துவான்)



எஸ்.குமாரசாமி
(பாடகர்)



றொபேட்
(சங்கீத வித்துவான்)



வி.சிவஞான சேகரம்
(பாடகர்)

## அரங்கின் கலைஞர்கள்



-14-



# சங்கீதக் கலை எதிர்காலம்

சங்கீதம் எனும் போது சாஸ்திரிய சங்கீதத் துடன் பக்தி இசைகள் மெல்லி சைகள் சினிமா வில் வரும் சங்கீத இசையுடன் கூடிய பாடல்கள் யாவும் மிகவும் போற்றி வளர்க்க வேண்டிய இசை கானங்களாகும். சங்கீத நிகழ் வுகளில் வாத்திய இசைக்கும் முக்கிய இடம் அளிக்கப் படுகின்றது. அவ் வகையில் வீணை, வயலின், கார்மோனியம், கீபோட், மென்டலின், கிளாரி ரெட், புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், தபேலா, கஞ்சிரா, கடம், முகர்சிங் முதலான இசைக்கருவி வாத்தியங்களை எமது மக்கள் நன்கு பயின்று இசைப்பதனைக் காண்கின்றோம்.

எம் மண்ணில் இவ்வாறான இசை நிகழ் வுகள் இசை விழாக்கள் தியாகராஜா மகோற்சவ நிகழ்வுகள், நடன, நிகழ்வுகள், நாடக விழாக் கள் என்பன 35 வருடங்களுக்கு முன்னர் மிகவும் தரமான நிலையில் பற்பல மன்றங்க ளினால், சபாக்களினால் மக்களின் பெரும் ஆதரவுடன் சிறப்பாக நிகழப் பெற்றமை மறக்க இயலாத சம்பவங்களாகும்.

சங்கீதம் பயிற்சி செய்வதற்கு மிகவும் கடுமையாக உழைக்க வேண்டும். நல்ல குருவிடம் முறையாக சங்கீதம் பயில வேண்டும். நன்றாக திரும்பத் திரும்ப ஜாதகம் பண்ண வேண்டும். பல சபாக்கள், கலாமன்றங்கள் உருவாக்கப்பட்டு இளம் வித்துவான்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். இவ்வாறு நாத வித்தைகளைப் பயின்றவர்களின் எதிர்கால நல் வாழ்வுக்கு நல்ல வசதிகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். சங்கீத சபாக்கள், கலா மன்றங்கள் என்பன வித்துவான்களை ஊக்குவித்தலில் முன்னிற்க வேண் டும். ரசிகப் பெருமக்களும் நல்ல ஆதரவு கொடுத்து இளம் வித்துவான்களை இளம் கலைஞர்களைக் கௌரவம் கொடுத்து அவர்களுக்கு முன்னுரிமை அளித்து முதிய வித்தவான்களையும் கனம் பண்ணி அவர்களின் நலன்க ளிலும் அக்கறை காட்ட வேண்டும்.

இன்று இளைஞர்களுக்கு, ரசிகப் பெருமக்களுக்கு கர்நாடக சங்கீத துறையில் அதிக ஈடுபாடு மிக மிகக் குறைந்து கொண்டு வருகின்றது. அதே போன்று சங்கீதத்தில் ரசிகர்கள், மக்கள் ஈடுபாடும் குறைவாகக் காணப்படு கின்றது. இது மிகவும் மன வேதனையாக உள்ளது. மெல்லிசை கானங் கள், சினிமா பாடல்கள், நாட்டிய நிகழ்வுகள் முதலான நிகழ்ச்சிகளில் அதிக ஈடுபாடு கொள்ளும் ரசிகர்கள் இளைஞர்கள், ஆதரவாளர்கள் இத்தகைய சங்கீத கச்சேரிகளில் மிகவும் குறைவாகவே அக்கறை செலுத்துவது வேத னையாக உள்ளது. சங்கீத ரசிகர்கள் அதிகம் பெருகினால் சங்கீதம் மேலும் மேலும் தரமான நிலையில் அமையும். அதனால் பக்தி பெருகும். மன்றங்கள் சங்கீத விழாக் களை தவறாது தொடர்ச்சியாக நடாத்த முனைய வேண்டும். நல்ல முயைில் வசதிகள் கொண்ட கலாமண்டபம் அமைய வேண்டும். இந்தியாவில் உள்ள சிறந்த பாடகர்களை வாத்தியக் கலை ஞர்களை எமது நாட்டுக்கு வரவழைத்து அவர்களது நிகழ்ச்சிகளை மக் கள் காணக்கூடிய முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும் இதற்குக் கம்பன் கழகம் இந்திய துணைத் தூதரகம், ஏனைய வசதி படைத்த கலா மன்றங்கள், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடம் முத லானவை ஒன்றிணைந்து துணை புரிய வேண்டும் எனவும் மக்களின்

விருப்பமாகும். இவ்வாறாக சங்கீதத் துறைக்கு அதி முக்கியத்துவம் கொடுத்து, ஆதரவுகள் கொடுப்பதன் வாயிலாக எமது மண்ணில் சங்கீதம் மிகவும் பிரமாதமாக அமையும்.

## சங்கீதம்

(அ.நா.சோமஸ்கந்தா சர்மா எழுதிய மிருதங்க சாஸ்திரம் - நூலிலிருந்து)

உலகில் உள்ள கலைகளுள் ஓர் பிரிவு சங்கீதம் ஆகும். இது இசை என அழைக்கப்படுகின்றது. சங்கீத இசையானது நடைமுறையில் கீதம், வாத்தியம், நிருத்தியம் என மூன்று பிரிவுகளாகக் கையாளப்படுகின்றது. கீதம் என்பது வாய்ப்பாட்டு எனப்படும் மிடற்றிசையினையும், வாத்தியம் என்பது இசைக் கருவிகளிலிருந்து எழுப்பப்படும் கருவி இசையினையும், நிருத்தியம் என்பது நடன அபிநயங்கள் கூலம் காண்பிக்கப்படும் நாட்டிய இசையினையும் குறிக்கின்றது.

இதைவிட சில நூல்களில் ராகம், தாளம். ஸ்வரம் என்னும் மூன்றின் சேர்க்கையே சங்கீதம் எனவும் கூறப்படுகின்றது. இசையானது ஓம் என்னும் ஒலியின் பிரதிபலிப்பாகவே அமைகின்றது. சங்கீதத்திற்கு அடிப்படை ஓங்காரமேயாகும். இதன் தொடர்பினாலும் இயைபினாலும் வெளிப்பட்டு வந்தவையே சப்த ஸ்வரங்களாகும்.

மக்கள் இறைவனுடன் இணைவதற்கு முதற்படியாக ஆன்மீக ஈடேற்றத்தினை தருவதே இசையின் முக்கிய நோக்கமாகும். இவ் இசையானது நாடுகளுக்கேற்றவாறு தேவைகளுக்கேற்ப பல வகையான இசைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. கர்நாடக இசை,பண்ணிசை. மேலைத்தேச இசை, ஹிந்துஸ்தானி இசை, கீழைத்தேச இசை, பாமர இசை, என்பவைகள் குறிப்பிடப்பட்ட வேண்டியவைகளாகும்.

ஒலித்தவுடனேயே இன்பம் தரக் கூடிய சத்தம் ஸ்வரம் எனப்படும். சுருதிகளின் சேர்க்கைகளினாலும் ஸ்வரமானது ரஞ்சனை உடையதாகின்றது.

ஸ்வரம் ஏழு வகைப்படும். நாங்கள் பாடும் பொழுது, வாத்தியங்களில் வாசிக்கும் பொழுது அவற்றிற்கு ஆதாரமாக ஒரு ஒலியை வைத்துக் கொண்டே தொடர்பான ஒலி எழுப்பி இசையை உண்டு பண்ணுகின்றோம். காதுக்கு இனிமை தருவது சுருதி எனப்படும்.

## இசைக் கருவிகள்

இசைக்கருவிகள் ஐந்து வகையுடையன. அவை தோற்கருவி, துளைக் கருவி, மிடற்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என்பனவாகும். பண்டைக் காலத்தில் பலவித இசைக்கருவிகள் கையாளப்பட்டு வந்தன. தந்தி வாத்தியத்தில் வீணை கோட்டு வாத்தியம், வயலின், தம்புரா, சித்தார், சரோட், யாழ், மென்டலின், வயோலா, தில்ரூபா போன்றவை குறிப்பிடலாம். இவற்றுள் வீணை, கோட்டுவாத்தியம் என்பன தாளமுள்ள கருவிகளாகும்.

துளைக்கருவி காற்றினால் உந்தப்பட்டு இயக்கப்படுகின்றது. இவை பிரதான வாத்தியமாகவும், பக்கவாத்தியமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. நாதஸ்வரம், புல்லாங்குழல், கிளாரினட் ஷணாய், முகவீணை, சங்கு என்பனவாகும்.

தோற்கருவி என்பன மரத்தினாலோ உலோகத்தினாலோ ஆக்கப்பட்ட கட்டையின் இரு பக்கங்களிலும் அல்லது ஒரு பக்கம் மட்டும் தோலினால் ஆக்கப்பட்ட மூட்டுக்களைப் பொருத்தி அமைக்கப்பட்டவைகளாகும். - அவை மிருதங்கம், தவில், பேரி, தபேலா, கெஞ்சிரா, பறை. டோலக் போன்றவை.

கஞ்சக்கருவி உலோகத்தினாலேயே இவ்வாத்தியங்கள் ஆக்கப்பட்டவைகளாகும். சேமக்கலம், ஜலதரங்கம், முகர்சிங், கொத்துமணி என்பனவாகும்.

### வீணை:

இசைக் கருவிகளில் மிகச் சிறப்புடையது வீணை. சங்கீதத்திற்கு ஒரு அணிகலனாக இந்த வாத்தியம் விளங்குகிறது. கலைமகளின் கையில்

வீணையிருப்பது அந்த வாத்தியத்தின் பெருமையை நன்கு புலப்படுத்து கிறது. வீணா: வேணு மிருதங்கம் எனச் சிறப்பாகப் போற்றப்படும் வாத்திய கருவிகளுள் வீணையை முதலாவதாகக் கூறியிருப்பது சிறப்பானது. சங் கீதத்தின் பல நுட்பங்களையும், தத்துவங்களையம் நுணுக்கங் களையும் இந்த வாத்தியத்தில் தெளிவாக வாசித்துக் காட்டலாம் - நரம்புக் கருவிகளுள் வீணை மீட்டு வாத்தியம் எனப்படும் வீணையின் நாதம் மிகவும் இனிமை யானது. சுத்த இசைக்கு பெருமையளித்துள்ளதை வீணை வாத்தியத்திற்குக் கொடுத்திருக்கும் கௌரவத்தினின்று தெளிவாகின்றது.

## தாள வாத்தியம்

தாள வாத்தியங்களுக்கும் சங்கீதத்தில் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. லய சம்பந்தமான இடங்களை வெளிப்படுத்த தாள வாத்தியங்கள் உதவு கின்றன. பாடகர்கள் உதிர்கின்ற ஸ்வரங்களை மற்றவர்கள் அறியும் வண் ணம் நிழல்போல் எடுத்துக்காட்டவும் உதவுகின்றன. பாடகர்கள் பாடும் பொழுது ஆரம்பித்த காலப் பிரமாணத்தினை மாறுபடாமல் தொடர்ந்து பாடும் வகையில் உதவுவது தாள வாத்தியம். மேலும் பாடகர்கள் பாடும்பொழுது பல்லவி, அனுபல்லவி, சரணம், ஆகியவைகளின் அமைப்பையொட்டி தகுந்த இடங்களில் தீர்மானங்களைக் கொடுத்து பாட்டு இடங்களைத் தெளிவாக எடுத்துக்காட்ட உதவி புரிகின்றது. இதைவிட பாடகருக்கு விறுவிறுப்பையும், கற்பனையையும் தனது கற்பனை ஜதிகளினால் உண்டு பண்ணியும் உதவி புரிகின்றது. மேலும் யாவருக்கும் இனிமை யூட்டியும், பாடகரையும், பிறரையும் லயரஞ்சகக் கடலுள் குதிக்கச் செய்வதே தாளவாத்தியங்களின் முக்கிய அம்சமாகும்.

இசையரங்குகளில் கஞ்சிரா போன்ற மேற் கூறப்பட்ட வாத்தியங்கள் மிருதங்கத்துடன் சேர்ந்தும் பாட்டுக் கச்சேரிக்கோ அல்லது வாத்திய இசைக்கோ பக்கவாத்தியமாக வாசிக்கப்படுகின்றன. கச்சேரிகளில் பாட்டோ, கீர்த்தனையோ, பல்லவியோ முறைப்படி பாடப்பட்டு நிரவல், ஸ்வரம் ஆகி யவை பாடிய பின்னர் தாள வாத்தியங்களுக்கு "லயவின்யாசம்" செய்வதற்கு இடமளிக்கப்படும்.

## மிருதங்கம்:

இவ்வாத்தியம் மரத்தினாலாய கட்டையின் இமருங்கிலும் தோலினாலான இரு மூட்டுக்களையும் வாரின் துணையாகப் பொருத்தப்பட்டு அமைந்த கருவியாகும். இதற்கு வலந்தரை, இடந்தரையென இருபகுதிகளுண்டு. வலந்தரைப் பகுதி, மூட்டு எனப் பெயர் கொண்டது. இதன் நடுப்பகுதியில் சாதம் எனப்படும் கருமை நிறமான பசைபூசப்பட்டிருக்கும். இதில் இனிமை நாதம் உண்டாகின்றது. வலது கையினால் வாசிக்கப்படும் சம்பிரதாயமாக வலந்தரை என அழைக்கப்படுகின்றது. மறுபக்கமுள்ள இடந்தரையானது தொப்பி எனவும் அழைக்கப்படும். தொப்பித் தோலின் நடுப்பாகத்திலே கோதுமைறவை நீருடன் பிசையப்பட்டு வைக்கப்படும். இத்தோலின் மீது இடது கையினால் தட்டும் போது ' தோம்' எனும் நாதம் உண்டாகும்.

## கஞ்சிரா:

இக்கருவி பண்டைக் காலத்தில் ஜல்லரி சல்லரி எனவும் கஞ்சரி எனவும் அழைக்கப்பட்டது. கட்டையின் ஒரு பக்கம் உடும்புத் தோலினை ஒட்டப்பெற்றதாக அமைந்த கருவியாகும். இவ்வாத்தியமும் பாட்டுக் கச்சேரிகளிலும் தாள வாத்தியக் கச்சேரிகளிலும் மிருதங்கத்துடன் துணையாக வாசிக்கப்படுகின்றது.

## கடம்:

இது ஒருவகை மண்ணினாலும் வெண்கலப் பொடி கலந்தும் பானையின் வடிவையொத்ததாக அமைக்கப்பட்ட கருவியாகும்.

## தவில்:

இது கட்டை, 'தோல் மூட்டுக்கள்' வார் என்பவற்றால் ஆக்கப்பட்ட கருவியாகும். இக்கருவியிலுள்ள தோலின் மூட்டுக்கள் வலந்தரை இடந்தரை என்னும் இரு பிரிவுகளையுடையன. வலந்தரையானது விரல்களினால் கூடிட்டு வாசிக்கப்படுகிறது. தொப்பிப் பாகம் களியினால் (குடி) வாசிக்கப்படும். இதற்கு மங்கள வாத்தியம் எனவும் பெயர்.

## முகர்சிங்:

இது கைவிளக்கு அகலின் வடிவையொத்ததாக வளைக்கப்பட்ட உலோக வளையத்தின் நடுப்பாகத்தை வளையக்கூடிய தன்மை பொருந்திய மெல்லியதான உருக்கினாலாகிய தகட்டினைப் பொருத்தப்பட்டு அமைந்த கருவியாகும். இக் கருவியை வாயிலே வைத்து நாவினால் தகட்டினை அத ரச் செய்து நாதத்தை உண்டாக்குவர்.

## தபேலா:

இவ்வாத்தியம் வட இந்தியாவின் மிருதங்கம் எனக் கருதப்படுகிறது. இது மிருதங்கத்தை இருபாதிகளாக்கிய அமைப்பையுடையது. ஒரு பகுதி வலது கையினாலும் மறுபகுதி இடது கையினாலும் வாசிக்கப்படும். இவ்வாத் தியமானது முக்கியமாக இந்துஸ்தானி சங்கீதத்தில் உபயோகிக்கப்படு கின்றது. தற்போது கர்நாடக மெல்லிசைப் பாடல்களிலும் கையாளப் படுகிறது.

## வயலின்:

இது ஒர் தந்தி வாத்தியமாகும். இது பிரதான வாத்தியமாகவும் பக்க வாத்தியமாகவும் பயன்படுகிறது. இதற்கு பிடில், சீர், யாழ் என்னும் பெயர் கள் உண்டு. இவ்வாத்தியம் மேல் நாட்டில் தயாரிக்கப்பட்டாலும் இவ்வாத்தி யத்தை மெருகூட்டித் தமிழ் நாட்டில் வித்வான்கள் பலர் கர்நாடக இசைக்கு வாசித்துப் பெருமை தேடியுள்ளார்கள். இவ்வாத்தியம் நான்கு தந்திகள் உடையதாக பெரும்பாலும் அமைக்கப்படுகிறது. இவ்வாத்தியம் 'போ' எனப்படும் வில்லினாலும் விரல்களினாலும் வாசிக்கப்படுகின்றது. இக்கருவி மரத்தினாலும் தந்திகளினாலும், திருகுகளினாலும் ஆக்கப்பட்டதாகும். கர் நாடக இசைக் கலைஞர்கள் மூலமே இவ்வாத்தியம் அதி பிரபல்யமடைந் துள்ளது.

## தம்புரா:

இசை நிகழ்ச்சிகளில் ஆதாரமான சுருதியைத் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக உபயோகிக்கப்படுத்தப்படும் இசைக்கருவி தம்புராவாகும். இவ்வாத்தியம் தோற்றத்தில் பெரியது. பலா மரத்தினால் செய்யப்படுகிறது.

## புல்லாங்குழல்:

இது துளை வாத்தியங்களுள் ஒன்று. காற்று வாத்திய அமைப்பைச் சேர்ந்தது. இசையில் முக்கியத்துவம் வாய்ந்த முக் கருவிகளுள் புல்லாங் குழலும் ஒன்றாகும். இதை வேணு, வேய்ங்குழல் என்றும் அழைப்பர். இவ்வாத்தியம் பொன் மூங்கில் மரத்தினால் ஆக்கப்பட்டது. இதன் நீளத்திற்கு ஏற்றபடி இதன் சுருதி அமையும்.

## நாதஸ்வரம்:-

இக்கருவியை நாகர் எனும் சமூகத்தினர் முதலில் வாசித்ததாகக் கூறுவர். இதனால் இதற்கு நாகஸ்வரம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். இதனை நாகசின்னம், நாயனம் என்றும் அழைப்பர். சீவாளியைப் பொருத்தி வாயினால் வாசிக்கப்படுகிறது. நாதஸ்வரத்தின் உடற்பாகம் ஆச்சா என்னும் மரத்தினால் செய்யப்படுகிறது.





# நெஞ்சில் நிறைந்த சங்கீதப் பாடல்கள்

## 1. கௌளை - ராகம்

### பல்லவி

பிரணமாம்ய ஹம் ஸ்ரீ கௌரீ ஸுதம்
பிரணமாம்ய ஹம் ஸ்ரீ கௌரீ ஸுதம்
பணிதல் பவா ஸுதேவ பக்தம் ஸததம் - பிரணமாம்...

### அனுபல்லவி

கண நாதம மர ப்ருந்த ஸேவிதம்
கணநாதம மர ப்ருந்த ஸேவிதம்
கண நாதம மர ப்ருந்த ஸேவிதம்
பணிஹார பூஷிதம் முனிஜனவந்திதம் - பிரண

### சரணம்

த்ருத சாரு மோதகம் கஜமுகம்
ஸித கராம் கர்வ பஞ்சகம்
நதலோக ஸந்தோஷ தாயகம்
ச்ருத பக்த பாலகம் ஸித்தி விநாயகம்
ப்ரணமாம்ய ஹம்

## 2. ராகம் - கேதாரம்

### பல்லவி

சகலகலா வாணியே சரணம் - தாயே
சங்கீத வீணா பாணியே

### அனுபல்லவி

இகமும் பரமும் நல்ல சுகமளிக்கும் கல்வியை
எங்களுக் கருள்வாய் மங்களச் செல்வியே

(சகலகலா ...)

### சரணம்

அறம் பொருள் இன்பமும் ஆற்றலும் ஆயுளும்
ஆத்ம ஞானமும் கூற்றும் புகழ் சிறந்த
திறம் பெற்ற திரசாய் திரு உடை வீரராய்
தேச நலம் புரிய திவ்வய வரம் தருவாய்...

(சகலகலா ...)

## 03. ராகம் - நாட்டை

### பல்லவி

மஹா கணபதிம் மனஸா ஸ்மராமி
வஸிஷ்ட வாம தேவாதி வந்தித -

(மஹா..)

### சரணம்

மஹாதேவ ஸுதம் குருஹா நுதம்
மார கோடி ப்ரகாசம் சாந்தம்
வஹா காவ்ய நாடகாதி ப்ரியம்
மூஷிக வாஹன மோதக ப்ரியம்

## 04. ராகம் - ஹம்சத்வனி

**பல்லவி**

வாதாபி கணபதிம் பஜேகம்
வாரணாஸ்யம் வரப்ரதம் ஸ்ரீ

(வாதாபி..)

**பல்லவி**

பூதாதி ஸம் ஸேவித சரணம்
பூத பௌதிக ப்ரபஞ்ச பரணம்
வீத ராகிணம் வீனத யோகினம்

(வாதாபி...)

**சரணம்**

புராகும்ப ஸம்பவ முனி வர
ப்ரபூஜிதம் த்ரிகோண மத்ய கதம்
முராரி ப்ரமுகாத் யு பாஸிதம்
மூலாதார க்ஷேத்ர ஸ்த்திதம்
பாரதி சத்வாதி வாகாத்மக
ப்ரணவ ஸ்வரூப வக்ர துண்டம்
நிரந்தரம் நிடல சந்த்ர கண்டம்
நிஜ வாம கர வித்ருகத இச்சுதண்டம்
கராம்புஜ பாச பீஜாபூரம்
கலுஷ விதூரம் பூதாகாரம்
ஹராதி குருகுஹ தோஷித பிம்பம்
ஹம்சம் வனி பூரித ஹேரம்பம்

(வாதாபி...)

## 05. ராகம் : பூர்வி கல்யாணி

**பல்லவி**

ஆனந்த நடமாடுவார் தில்லை
அம்பலத்தனில் அடிபணிபவர்க்கு அபயம்
ஜயமில்லை. (ஆனந்த...)

**அனுபல்லவி**

தானந்த மில்லாத ரூபன்
தஜம் தகஜம் தகதிமி தளாங்கு தக ததி கிணதோம்
தளாங்கு தக ததி கிணதோம் தக திமி தக
ததிகிண தோம்.

(ஆனந்த...)

**சரணம்**

பாதிமதி ஜோதி பளீர்பளீர் என
பாத சிலம் பொலி கவீர் கவீர் என
ஆதிகளையுண்ட நீலகண்டம் மின்ன
ஹரபுர ஹரசிவ சங்கர அருள்வர குருபர ஸுந்தர
அண்டமும் பிண்டமும் ஆடிட எண்டிசையும் புகழ்பாட
(ஆனந்த...)

## 06. ராகம் : கமாஸ்

**பல்லவி**

இடது பாதம் தூக்கி ஆடும் நட
ராஜனடி பணிவையே நெஞ்சே

(இடது...)

**அனுபல்லவி**

படவரவாட புலியதளாட
பக்தர்கள் ஜயஜய எனவே

புலிபதஞ்சலி இருகண் குளிர தில்லையிலே

(இடது...)

**சரணம்**

திருவடி சிலம்புகள் கவீர் கவீர் என
திருமுடி இளம்மதியொலி பளீர் பளீர் என
திமிதக தரிகிடதோம் என திருமால் மத்தளம் அதிர
சிவகாமி மணாளன் திருச் சிற்றம்பலர் தனில்
புன்னகையோடு

(இடது...)

## 07. பீம்பிளாஸ்

**பல்லவி**

வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள் (வெள்ளை....)

**அனுபல்லவி**

கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்திருப்பாள் (வெள்ளை...)

**சரணம்**

உள்ள தாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தில் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள். (வெள்ளை...)

## 08. ராகம் - காம்போதி

**பல்லவி**

குழல் ஊதி மனம் எல்லாம் கொள்ளை கொண்ட பின்னும்
குறையேதும் என்கேதடி தோழி - (குழல் ஊதி...)

**அனுபல்லவி**

அழகான மயில் ஆடவும் மிகமிக
காற்றில் அசைந்தாடும் கொடி போலவும்
அகமகிழ்ந்துலவும் நிலவொளி தனிலே
தனை மறந்து புள்ளினம் கூட
அசைந்தாடும் மிக இசைந்தோடி வரும்
நலம் காண ஒரு மனம் நாட
தக திமி என ஒரு பதம் பாட
மனது மிக இறைவனடி ஓத
தகிட ததிமி என நடம் ஆட
கன்று பசுவினம் நின்று புடை சூழ - என்றும்

**சரணம்**

மகரகுண்டலம் ஆடவும்
அதற்கேற்ப மகுடம் ஒளி வீசவும்
மிகவும் எழிலாகவும் - காற்றில்
மிளிரும் கொடி போலவும்
அகமகிழ்ந்துலவும் நில வெளி தனிலே
தனை மறந்து புள்ளினம் பாட (குழல் ஊதி ...)

## 09. குறை ஒன்றும் இல்லை

**ராகம்: ராகமாலிகா** **தாளம் : ஆதி**

குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா (சிவரஞ்சினி)
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா (x2)

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா

வேண்டியதைத் தந்திட வேங்கடேசன் என்றிருக்க
வேண்டியது வேறில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா

திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
கண்ணா திரையின்பின் நிற்கின்றாய் கண்ணா - உன்னை
மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
திரையின் நிற்கின்றாய் கண்ணா - உன்னை
மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா (x2)
குன்றின்மேல் கல்லாகி நிற்கின்ற வரதா (x2)
குறை ஒன்றும் இல்லைமறைமூர்த்தி கண்ணா (x2)
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா
(சிந்து பைரவி)

கலிநாளுக்கிறங்கி கல்லிலே இறங்கி
நிலையாகக் கோவிலில் நிற்கின்றாய் கேசவா
கலிநாளுக்கிறங்கி கல்லிலே இறங்கி
நிலையாகக் கோவிலில் நிற்கின்றாய் கேசவா

குறை ஒன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா
யாதும் மறுக்காத மலையப்பா
யாதும் மறுக்காத மலையப்பா உன் மார்பில்
ஏதும் தர நிற்கும் கருணைக் கடல் அன்னை
என்றும் இருந்திட ஏது குறை எனக்கு (x2)
ஒன்றும் குறையில்லை மறை மூர்த்தி கண்ணா (x2)

மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா

## 10. நற்கதி அருள்வாயம்மா

**ராகம்: ராகமாலிகை** **தாளம்: ஆதி**

கற்பக வல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாயம்மா (கற்பக)

**அனுபல்லவி**

பற்பலரும் போற்றும் பதிமயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயிர்சிங்காரகோயில் கொண்ட (கற்பக)

**சரணம்**

நீ இந்த வேளை தன்னில் செயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌனமம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளுமம்மா! (கற்பக) 1

எல்லோர்க்கம் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடம் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியை உமா உனை நம்பினே னம்மா (கற்பக) 2

நாககேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரிமாயே வாராயிது தருணம்
பாகேஸ்ரீதாயே பார்வதியே - இந்த
லோகேச்வரிநீயே உலகினில் நீ துணையம்மா (கற்பகம்) 3

அஞ்சனமையிடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம் - அருள் தஞ்சம் என
அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்சனியே ரக்ஷிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா. (கற்பகம்) 4

## 11. ஸ்ரீ சக்ர நாயகி

**ராகம்: ராகமாலிகை**

ஸ்ரீ சக்ர ராஜ ஸிம்ஹஸனேச்வரி
ஸ்ரீ லதிதாம்பிகையே புவனேச்வரி

ஆகம வேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோ ஹரி
ஞான வித்யேச்சவரி ராஜராஜேச்வரி

பலவிதமாயுன்னை ஆடவும் பாடவும்
பாடிக்கொண்டாடும் அன்பர் பதமலர் சூடவும்
உலகம் முழுவதும் என தகனுறக் காணவும்
ஒரு நிலை தருவாய் காஞ்சி காமேச்வரி

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிடக் கூட்டி வைத்தாய்
நிழலெனத் தொடர்ந்த முன்னூழ்க் கொடுமையை நீக்கச் செய்தாய்

நித்ய கல்யாணி பவானி பத்மேஸ்வரி

துன்பப் புடத்தலிட்டுத் தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்த உன் மாயம் நீக்கிப் பிறந்த பயனைத் தந்தாய்
அன்பைப் புகட்டி உனதன் ஆடலைக் காணச் செய்தாய்
அடைக்கலம் நீயே அம்மா அகிலாண்டேச்வரி!

## 12. விஷமக் காரன் கண்ணன்......

**ராகம்: செஞ்சுரட்டி**

விஷமக் காரன் கண்ணன் - பொல்லாத
விஷமக் காரன் கண்ணன்
வேடிக்கையாய்ப் பாட்டுப்பாடி
விதவிதமாய் ஆட்டம் ஆடி
நாளுக்கொரு லீலை செய்யும்
நந்தகோபால கிருஷ்ணன்
கோலப் புல்லாங்குழல் ஊதி
கோபிகளைக் கள்ளம் ஆடி
கொஞ்சம் போல வெண்ணெய் தாடி - என்று
கேட்டு ஆட்டம் ஆடும் (விஷமக் காரக் கண்ணன்)

பக்கத்து வீட்டுப் பெண்ணை அழைப்பான்
முகாரி ராகம் பாடச் சொல்லி வம்புக் கிழுப்பான்
எனக்கது தெரியாதென்றால்
நெக்குருகக் கிள்ளிவிட்டு
அவள் விக்கி விக்கி அழும்போது
இதுதாண்டி முகாரி என்பான் (விஷமக் காரக் கண்ணன்)

வெண்ணெய் பானை மூடக் கூடாது
இவன் வந்து விழுங்கினாலும்

கேட்கக் கூடாது
இவன் அம்மாகிட்ட சொல்லக் கூடாது
சொல்லிவிட்டால் அட்டகாசம் தாங்கமாட்டாது
சும்மா ஒரு பேச்சுக்கானும் திருடன் என்று சொல்லி விட்டால்
உன் அப்பா அம்மா தாத்தா பாட்டி
அத்தனையும் திருடன் என்பான்
விஷமக் காரன் கண்ணன்

## 13. மாடு மேய்க்கும் கண்ணே......

**ராகம்: செஞ்சுரட்டி**

மாடு மேய்க்கும் கண்ணே நீ
போக வேண்டாம் சொன்னேன்
காய்ச்சின பாலும் தாரேன்
வெய்யிலிலே போக வேண்டாம்
சொன்னேன் கண்மணியே

போக வேண்டும் தாயே
தடை சொல்லாதே தாயே
காய்ச்சின பாலும் வேண்டாம்
கற்கண்டு சீனி வேண்டாம்
உல்லாசமாய் மாடு மேய்த்து
ஒரு நொடியில் திரும்பிடுவேன்
போகவேண்டும் தாயே

யமுனா நதிக்கரையில் எப்பொழுதும்
கள்ளர் பயம்
கள்வர் வந்து உன்னை அடித்தால்
கலங்கிடவாய் கண்மணியே

மாடு மேய்க்கும் கண்ணே
கள்ளனுக்கோர் கள்ளனுண்டோ
கண்டதுண்டோ சொல்லுமம்மா

கள்வன் வந்து என்னை அடித்தால்
கண்டதுண்டமாக்கிடுவேன்
மாடு மேய்க்கும் கண்ணே
போகவேண்டாம் சொன்னேன்.

## 14. ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

ஜனனி ஜனனி ஜனனி ஜனனி
ஜகத் தாரணி நீ பரி பூரணி நீ
ஜனனி ஜனனி ஜனனி ஜனனீ
ஒரு மான் குழுவும் சிறு பூ விடையும்
சடை வார் குழுலும் விடை வாகனமும்
கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியே இடப் பாக்திலே
ஜகன் மோகனி நீ சிம்ம வாஹினி நீ
சிம்ம வாஹினி

ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

சதுர் வேதங்களும் பஞ்ச பூதங்களும்
ஷண் மார்க்கங்ளும் சப்த கீதங்களும்
அஷ்ட யோகங்களும் நவ யாகங்களும்
தொழும் பூங் கழலே
அலை மாமகளே மலை மா மகளே
அலை மாமகளே மலை மா மகளே

ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

ஸ்வர்ண தேஜஸுடன் சுயமாகிவந்த
லிங்க ரூபிணியே மூகாம்பிகையே
பல தோத்திரங்கள் தர்ம சாஸ்திரங்கள்
பணிந் தேத்துவதுன் மணி நேத்திரங்கள்

சக்தி பீடமும் நீ சர்வ மோட்சமும் நீ
சர்வ மோட்சமும் நீ

ஜனனி ஜனனி ஜனனி ஜனனி

## 15. ஜனனி ஜனனி ஜனனி

**இராகம்: ரேவதி-**

ஜனனி ஜனனி ஜனனி
ஜகத்தாரணி நாரிணி பூரணியே - ஜனனி

கானவினோதினி காமாக்ஷி
கஞ்ச மலர்ப்பதமே பணிந்தேன் அனுதினமே

பாடிப் பாடி உந்தன் பாதம் பணிந்து வந்தேன்
பார்வதியே பரமேஸ்வரியே
கோடி கோடித் துன்பம் ஓடி மறைந்திடுமே
உன் அருள் பார்வையிலே

கடைக்கண் பாராயோ
கருணை பொழிவாயோ
ஜகதீச பிரிய நாயகியே
அடைக்கலம் அடைந்தேன் காத்தருள் - ஜனனி ஜனனி

## 12. போ சம்போ......

**ராகம்: ரேவதி**

போ சம்போ சிவசம்போ
போ சம்போ ஸ்வயம்போ
போ சம்போ சிவசம்போ ஸ்வயம்போ

கங்காதர சங்கர கருணாகரா
மாமவ பவசாகர தாரக போ சம்போ

நிர்க்குண பரப்பிரம்ம ஸ்வரூப
கமகம பூத ப்ரபஞ்ச ரசித
நிஜகுண லிஜித நிசாந்த அநந்த
ஆனந்த அதிசய அட்சய லிங்க                    போ சம்போ

திமித திமித கிட திமிதக தோம் தோம்
தோம் தோம் தரிகிட தரிகிட கிடதே
மதங்க முனிவர வந்தித ஈசா
சர்வ திகம்பர தேசிக வேஷா
நித்ய நிரந்தர நிர்குண வேஷா
சாசா சர்வேசா சர்வேசா                    போ சம்போ

## 17. ராகம் - தேஸ்

துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?
எமக் கின்பம் சேர்க்க மாட்டாயா?
நல்
அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ
அல்லல் நீக்க மாட்டாயா?
கண்ணே
அல்லல் நீக்க மாட்டாயா?
அன்பும் எளிமையும் சூழும்
நாட்டிலே
வாழ்வின் உணர்வு சேர்க்க - எம்
வாழ்வின் உணர்வு சேர்க்க - நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின்
முறையினால்
ஆடிக் காட்ட மாட்டாயா? - கண்ணே
ஆடிக்காட்ட மாட்டாயா?
அறமிதென்றும் யாம் மறமிதென்றுமே

அறிகிலாத போது - யாம்
அறிகிலாத போது - தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக்காட்ட மாட்டாயா?
புறம் இதென்றும் நல் அகம் இதென்றுமே
புலவர் க்ணட நூலின் - தமிழ்
புலவர் கண்ட நூலின் - நல்
திறமை காட்டி உனை ஈன்ற எம் உயிர்ச்
செல்வம் ஆகமாட்டாயா? தமிழ் செல்வம் ஆக மாட்டாயா?

(துன்பம் நேர்கையில் ----------)

## 18. ராகம் : மதுவந்தி

**பல்லவி**

கண்ட நாள் முதலாய் காதல் பெருகுதடி -
கையினிலே வேல் பிடித்த
கருணை சிவ பாலனை

**சரணம்**

வண்டிசை பாடும் எழில வசந்த பூங்காவில்
வந்து சுகம் தந்த காந்தனே என் காந்தனே

(கண்ட நாள்)

நீல மயில் தனை நெஞ்சம் மறக்கவில்லை
நேசம் உடன் கலந்த பாசமும் கலையவில்லை
கோல குமரன் மன கோயிலில் இருந்து விட்டான்
குறு நகை தனை காட்டி நறுமலர் சூடி விட்டான்

## 19. ராகமாலிகை - காபி

சின்னஞ்சிறு கிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே - உலகில்

ஏற்றம் புரிய வந்தாய்

பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே
அள்ளியணைத் திடவே - என்முன்னே
ஆடி வரும் தேனே

ஓடி வருகையிலே - கண்ணம்மா
உள்ளம் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால் - உன்னைப்போல்
ஆவி தழுவுதடி

உச்சிதனை முகர்ந்தால் - கருவம்
ஓங்கி வளருதடி
மெச்சியுனை யூரன் - புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி

கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள் வெளி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன் மத்த மாகுதடி

சற்றுன் முகம் சிவந்தால் - மனது
சஞ்சலமாகுதடி
நெற்றி சுருங்கக் கண்டால் - எனக்கு
நெஞ்சம் பதைக்குதடி

உன் கண்ணில் நீர்வழிந்தால் - என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி
என் கண்ணிற் பாவையன்றோ - கண்ணம்மா
என்னுயிர் நின்ன தன்றோ.

சொல்லும் மழலையிலே - கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்

முல்லை சிரிப்பாலே எனது
மூர்க்கம் தவிர்த்திடுவாய்

## 20. ராகமாலிகை

### பல்லவி

கானமழை பொழிகின்றான் - கண்ணன்
யமுனா தீரத்தில் யாதவ குலம் செழிக்க
கானமழை ---------

### அனுபல்லவி

ஆனந்தமாகவே அருள் பெருகவே
முனிவரும் மயங்கிடும் மோகன ரூபன்
கானமழை ---------

தீஞ்சுவை இதமில் வேய்ங்குழல் வைத்தே
திகட்டா அமுதமாய் தேவரும் விரும்பும்
கானமாழை ---------

### பூபாளம்

குயிலினம் கூவிட மயிலினம் ஆடிட
ஆவினம் கரைந்திட அஞ்சுகம் கொஞ்சிட
கோபியர் ஆடிட கோவலர் களித்திட
கோவிந்தன் குழல் ஊத
கானமழை ---------

### மத்தியமாவதி

அம்பரம் தன்னிலே தும்புரு நாரதர்
அரம்பையரும் ஆடல் பாடல் மறந்திட

அச்சுதன் ஆனந்தன் ஆயர்குல திலகன்
அம்புஜநாதன் ஆர்வமுடன் முரளி

கானமழை ----------

## 21. ராகம் : காபி

**பல்லவி**

என்னதவம் செய்தனை யசோதா
என்னதவம் செய்தனை
எங்கும் நிறைந்த பரப்பிரம்மம் அம்மா என்றழைக்க

என்ன தவம் ---------

**அனுபல்லவி**

ஈரேழு புவனங்கள் படைத்தவனை
கையிலேந்தி சீராட்டி பாலூட்டி தாலாட்ட

- என்ன தவம் ---

**சரணம்**

பிரம்மனும் இந்திரனும் மனதில் பொறாமை கொள்ள
உரலில் கட்டி வாய் பொத்தி கெஞ்ச வைத்தாய்
உரலில் கட்டி வாய் பொத்தி கெஞ்ச வைத்தாய் கண்ணனை

- என்ன தவம் ----

சனகாதியர் தவயோகம் செய்து வருந்தி
சாதிஸ்ட புனித மாதே எழிதின் பெற

- என்ன தவம் ----

## 22. ராகம் - தோடி

**பல்லவி**

தாயே யசோதா உந்தன் ஆயர் குலத்துதித்த
மாயன் கோபாலகிருஷ்ணன் செய்யும் ஜாலத்தை கேளடி

(தாயே ...)

**அ. பல்லவி**

தையலே கேளடி உந்தன் பையனைப் போலவே
இந்த வையகத்தில் ஒரு பிள்ளை - அம்மம்மா
நான் கண்டதில்லை .(தாயே ...)

**சரணம்**

காலினிற் சிலம்பு கொஞ்ச கைவளை குலுங்க
முத்து மாலைகள் அசைய வாசலில் வந்து
வானவ ரெல்லாம் புகழ மானிடரெல்லாம் மகிழ
நீலவண்ணக் கண்ணனிவன் நர்த்தன மாடினான்
(தாயே...)

பாலன் என்று தாவி அணைத்தேன் - அணைத்த எனை
மாலையிட்டவன் போல் வாயில் முத்தமிட்டாண்டி
பாலனல்லவனடி உன் மகன் ஜாலமாக செய்த தெல்லாம்
நாலு பேர்கள் கேட்கச் சொன்னால் நாணம் மிக ஆகுதடி
(தாயே ...)

முந்தா நாள் அந்தி நேரம் சொந்தமுடன் கிட்டே வந்து
விந்தைகள் அனேகம் செய்து விளையாடினான்
ஒரு பந்தனவாகிலும் வெண்ணை தந்தால் விடுவேன் என்று
முந்து சேலை தொட்டிழுத்து போராடினான் - அந்த
வாசுதேவரை நானும் அடி யசோதா
மைந்தனென்று அணைத்தெடுத்து மடிமேல் வைத்து
சுந்தர முகத்தைப் பார்க்கும் வேவையினில் வாய் திறந்து
இந்திர ஜாலம் போலே இந்தலோகம் காண்பித்தான்.
(தாயே ...)

## 23. ராகம் - கானடா

### பல்லவி

அலைபாயுதே கண்ணா என் மனம்
அலைபாயுதே - உன் ஆனந்த மோகன வேணு கானமதில்
(அலைபாயுதே ...)

### அ.பல்லவி

நிலை பெயராது சிலை போலவே நின்று
நேரம் ஆவதறியாமலே மிக வினோதமான முரளி தரா
என்மனம் (அலைபாயுதே...)

### சரணம்

தெளிந்த நிலவு பட்டப் பகல் போல் எரியுதே - உன்
திக் கெட்டிலும் உன் உருவம் தெரியுதே
கனிந்த நின் வேணுகானம் காற்றில் வருகுதே
கண்கள் சொருகி ஒரு விதமாய் வருகுதே
களிக்கும் மனத்தை உருக்கி பதத்தை எனக்கு
அளித்து மகிழ்ந்தவா - ஒரு
தனித்த வனத்தில் அழைத்து எனக்கு உணர்ச்சி
கொடுத்த முகுந்தவா
அலைகடல் அலையென கதிரவன் ஒளியென
இணை இரு கழல் எனக்களிக்கவா - கதறி
உருகி நான் அழைக்கவா - நீ
இதர மாதருடன் நீ களிக்கவா
இது தகுமோ இது முறையோ இது தர்மம் தானோ
குழலூதிடும் பொழுது ஆடிடும் உடைகள் போலவே
மனம் வேதனை மிகவாகுதே
(அலைபாயுதே ...)

# 24.சிங்கார வேலனே

ராகம்: அபேரி

### பல்லவி

சிங்கார வேலனே தேவா - அருள்
சீராடும் மார்போடு வா ---- வா

(சிங்கார வேலனே)

### அனுபல்லவி

செந்தூரில் நின்றாடும் தேவா ----------- திருச்
செந்தூரில் நின்றாடும் தேவா - முல்லைச்
சிரிப்போடும் முகத்தோடு தேவா - அருள்

(சிங்கார வேலனே)

### சரணம்

செந்தமிழ் தேவனே சீலா -------- விண்ணோர்
சிறை மீட்டுக் குறை தீர்த்த வேலா - அருள்

(சிங்கார வேலனே)

# 25.

### பல்லவி

குயிலே உனக்கனந்த கோடி நமஸ்காரம்
குமரன் வரக் கூவுவாய் - நீ ------------
குமரன் வரக்கூவுவாய் - குயிலே

### அனுபல்லவி

மலர் மாங்கனிச் சோலையிலே மருவி
எனையே பிரிந்த குமரன் வரக் கூவுவாய்

(குயிலே---)

சரணம்

வருவார் வருவார் என்றே வழி பார்த்தே - விழி சோர்ந்தே
மாரன்தனை வள்ளவால் வீரன் காணனே -
குமரன் வரக் கூவுவாய் நீ ---- குமரன் வரக் கூவுவாய்
(குயிலே)

தருவார் மலர்க்கை யென்றே தவித்தோங்கி வாழுகிறேன்
தருணம் அறிந்தே வந்தே என் தாபம் தனைத் தீர்ப்பாரோ
குமரன் வரக் கூவுவாய் நீ குமரன் வரக் கூவுவாய்

## 26. ராகம்:- ஜெயந்தசேனா

பல்லவி

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும் கூர் வாளும் போலே
(வெண்ணிலாவும்)

அனுபல்லவி

வண்ணப் பூவும் மலரும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் மணியும் போலே - எனது
கன்னித் தமிழும் நானும் அல்லவோ.
(வெண்ணிலாவும்)

சரணம்

வையகமே உய்யுமாறு வாய்ந்த தமிழ்
என் அரும்பேறு
தூயதான சங்கம் என்னும் தொட்டிலில் வளர்ந்த பிள்ளை
கையினிலே வேல் ஏந்தி கடலுலகாள் மூவேந்தர்
கருத்தோன்றிக் காத்தார் அந்தக்
கன்னித் தமிழை நானும் அல்லவோ
(வெண்ணிலாவும்)

## 27. ராகம் : காம்போதி

**பல்லவி**

திருவடி சரணம் என்று நான் நம்பி வந்தேன்
தேவாதி தேவாதி தேவா

(திருவடி ...)

**அனுபல்லவி**

மறுபடியும் கருவடையும் குழியில் தள்ளி
வருத்தப்படுத்த வேண்டாம் பொன்னம்பலவா

(திருவடி ...)

**சரணம்**

நான் எடுத்த ஜனனம் கணக்கெழுதி தொலையாது
சம்பொ இரங்கி மகிழ்ந்து தேவரீர் வேண்டு மென்று
கொடுத்த மானிட ஜன்மம் வீணாக போகுதே
இன்னும் என் குறை தீர்ந்தபாடும் இல்லையே
அடுத்து வந்த என்னை நீ தள்ளலாகாது
அரோகரா என்று சொன்னாலும் போதாதோ
தடுத்து வந்தருள இது சமயக் கோபாலகிருஷ்ணன்
சந்ததம் பணிந்து புகழ்ந்து போற்றுமுன்

(திருவடி ----------)

## 28. ராகம்: நவரச கன்னட

**பல்லவி**

நான் ஒரு விளையாட்டு பொம்மையா
ஜெகன் நாயகியே உமையே - உந்தனுக்கு
நானிலத்தில் பல பிறவி எடுத்து திண்டாடினது போதாதா - தேவி - உந்தனுக்கு

நானொரு விளையாட்டு

அருளமுதைப் பருக அம்மா அம்மா என்று
அலறுவதைக் கேட்ப தானந்தமா.
ஒரு புகல் இன்றி உன் திருவடி அடைந்தேன்
திருவுளம் இரங்காதோ - தேவி - உந்தனுக்கு

நானொரு விளையாட்டு

## 29. காற்றினிலே

**ராகம்: பைரவி**

காற்றினிலே வரும் கீதம்
கண்கள் பணிந்திடப் பொங்கும் கீதம்
கல்லுங் கனியும் கீதம்

பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம்
பண்ணொலி கொஞ்சிடும் கீதம்
காட்டு விலங்கும் கேட்டே மயங்கும்
மதுர மோகன கீதம்
நெஞ்சினில் இன்பக் கனலை எழுப்பி
நினைவழிக்கும் கீதம்

சுனை வண்டு மன சோலைக்குயிலும்
மனம் குவிந்திடவும்
வான வெளிதனில் தாரா கணங்கள்
தயங்கி நின்றிடவும்
ஆ ! என் சொல்வேன் ! மாயப்பிள்ளை
வேய்ங் குழல் பொழி கீதம்

நிலா மலர்ந்த இரவினில் தென்றல்
உலாவிடும் நதியில்
நீல நிறத்துப் பாலகன் ஒருவன்
குழல் ஊதி நின்றான்
காலமெல்லாம் அவன் காதலை எண்ணி
உருகுமோ என் உள்ளம்

(காற்றினிலே .................)

## 30. ராகம்: யதுகுலகாம்போதி

காலைத்தூக்கி நின்று ஆடும் தெய்வமே - என்னை
கை தூக்கி ஆள் தெய்வமே

(காளைத்தூக்கி ----)

வேலைத் தூக்கும் பிள்ளை தனைப் பெற்ற தெய்வமே
மின்னும் புகழ் சேர் தில்லை பொன்னம்பலத்தில்லை

(காலைத்தூக்கி ----)

செங்கையில் மாள் ஏந்தி சிவந்த மழுவும் ஏந்தி
அங்கத்தில் ஒரு பெண்ணை அனுதினமும் தூக்கி
கங்கையைத் திங்களை கனத்த சடைமேல் தூக்கி
இங்கும் அங்குமாய்த்தேடி இருவர் கண்டறியாத

(காலைத்தூக்கி -----)

நந்தி மத்தளம் கொட்ட நாரதர் யாழ் மீட்ட
தொம் தொம் என தாளம் சுருதியோடும் தட்ட
சிந்தை மகிழ்ந்து வானோர் செந்தி மேற்கரம் தூக்க
முந்து வலியுடை முயலகன் நினை தூக்க

(காலைத்தூக்கி -----)

## 31. ராகம் - கானமூர்த்தி

**பல்லவி**

கானமூர்த்தே ஸ்ரீ கிருஷ்ண வேணு - கானலோல
த்ரிபுவன பால - பாஹி

**அனுபல்லவி**

மானிமணி ஸ்ரீ ருக்மிணி மானஸாபஹார
மார ஜனக திவ்வி

**சரணம்**

நவநீதசோர நந்த சாத்கிஷோர நராமித்ர தீர
நரசிம்ஹ சூர

நவமேக தேஜ நஹஜ நரகாந்த காஜ
நட தியாகராஜ - கானமூர்த்தே.

## 32. ராகம் : மோஹனம்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடி யார்கள் வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவார் வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருள வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமானே!

## 33. தில்லானா

ராகம்: பிருந்தாவனி தாளம்: ஆதி

தீம் தனை தில்லானா தில்லானா நாத்ரி தீம் தீம்
நாத்ரி தீம் நாத்ரி தீம் நாத்தி
தீம் தனை தில்லானா தில்லானா நாத்ரி தீம் தீம்
நாத்ரி தீம் நாத்ரி நாத்ரி தீம் நாத்ரி
தீம் நனா தீம் நனா ததிங்கிணத் தோம் தகிட
ஜம்த ஜம்த தஜம் தரிதஜம் தரிதஜம் தரித நாத்திரி
சோகசுஹர ஹோயது மீரி நீதரி ஜே நிதி நீ நீரசூரி
ஞான மைமை மரசி
ஸகல சராச்சர மெல்ல புல கின்ஸே தீயணி
ஹாயணி பிஞ்சு சிறுர வலிநி முரளி மாதுரி நாத்ரி.

## 34. ராகம் : கமாஸ்

அகரமுமாகி யதிபனுமாகி யதிகமுமாகி அகமாகி

அயனெனவாகி அரியெனவாகி அரனென வாகி அவர் மேலாய்

இகரமுமாகி யெவைகளுமாயினிமையுமாகி வருவோனே

இருநில மீதி (ல்) எளியேனம் வாழ எனது முனோடி - வரவேணும்

மகபதயயாகி மருவம் வலாரி மகிழ்களி கூரும் - வடிவோனே

வனமுறை வேடனருளிய பூசை மகிழ் கதிர்காமமுடையோனே

செகண சேகு தகுதிமி தோதி திமியென ஆரும் - மயிலோனே

திருமலிவாள பழமுதிர்சோலை மலைமிசை மேவும் பெருமாளே.

## 35. ராகம் : சுருட்டி

**பல்லவி**

ஸ்ரீராமச் சந்திரனுக்கு ஜெய மங்களம் - திவ்ய
முக சந்திரனுக்கு சுப மங்களம்

(ஸ்ரீராம----)

**அ. பல்லவி**

மாராபி ராமனுக்கு மன்னும் பரந்தாமனுக்கு
ஈராறு ராமனுக்கு ரவிகுல லோசனுக்கு

(ஸ்ரீராம-----)

கொண்டல் மணி வண்ணனுக்கு கண்ணனுக்கு மங்களம்
கோசலை குமாரனுக்கு வீரனுக்கு மங்களம்
புண்டரீகத் தாளனுக்கு பூச்சக்கர வாளனுக்கு
தண்டுணவைத் தாசனுக்கு ஜானகி ராமனுக்கு

(ஸ்ரீராம ----)

கோவை மணி வாயனுக்கு மாயனுக்கு மங்களம்
கோதண்ட ராமனுக்கு மெய்யனுக்கு மங்களம்
தாவு குண சீலனுக்கு சத்திய வாசனுக்கு
தேவானு கூலனுக்கு தசரத பாலனுக்கு

(ஸ்ரீரா -----)

பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனாம அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்
சகல உலாசனுக்கு தருமந்த ஹாசனுக்கு
அகில விலாசனுக்கு அயோத்யா வாசனுக்கு மங்களம்

(ஸ்ரீராம -----)

# தியாகராஜசுவாமி அவர்களின் பாடல்களில் சங்கீத சிறப்பு!



நாதோபாசனை சுலபமான மோட்ச சாதனம் எனும் கருத்துடன் தம் இஷ்ட தெய்வத்தை துதிப்பதற்காக தியாகராஜ சுவாமிகள் இயற்றியருளிய நூற்றுக் கணக்கான கீர்த்தனை கள் கர்நாடக சங்கீதத்திற்கே வளம் தந்து அதை மகோன்னத நிலைக்கு உயர்த்தி விட்டன. ஸ்ரீ தியாக பிரம்மம் கர்நாடக சங்கீதத்திற்கு புரிந்துள்ள இச்சேவை மதிப்பிட முடியா தது. தற்காலத்தில் பாட்டுக் கச்சேரிகளில் பாடப்பெறும் கீர்த்தனைகளுள் பெரும் பான்மையானவை அவருடையதாகவே இருப்பதுடன் வித்துவான்கள் புரியும் இராக ஆலாபனைகளும் அவருடைய கீர்த்தனைகளை அடிப்படையாகக் கொண்டவையாக அமைகின்றன. அவருடைய காலத்திற்குப் பிறகு கர்நாடக சங்கீதத்தின் அமைப்பிலேயே ஒரு புரட்சி கரமான மாறுதல் உண்டாயிற்று என லாம்.

கிருதி எனப்படும் இசை வகைக்கு சம்பூர்ணமான வடிவம் அமைத்துக் கொடுத்த பெருமை அவரையே சார்ந்த தாகும். இராகங்களை படிப்படியாக விஸ்தாரம் செய்து கொண்டு போவதற்காக கிருதிகளில் அடுக்கடுக்கான சங்கதிகளை அமைத்த பெருமை தியாகராஜ சுவாமி களையே சார்ந்ததாகும். நாட்டை கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகிய கன ராகங்களில் அவர் இயற்றியருளியுள்ள பஞ்சரத்தின கீர்த்தனைகள் உன்னத சிருஷ்டியாகும். அவரை திருவையாற்றின் இசைக்கவி என்று அழைக்கின்றனர்.



எவகிறீன் அச்சகம், யாழ்ப்பாணம். 021 221 9893